www.tamilarangam.net

ஸ்ரீலங்கா தலைமை அஞ்சலகத்தில் பதிவுபெற்றது

மாத இதழ்

# தர்க்கீகம்

12


ஐப்பசி 1981

ஓராண்டுச் சிறப்பு மலர்

விலை ரூபா 2-00

> சோசலிசம் என்பது, சமூக அரசியல் அடிப்படையிலான புரட்சிக்குப் பின் மக்கள் தம் அரசியல் தலைமையை பொறுப்பேற்றுக் கொண்ட பாட்டாளி வர்க்கத்தின் சர்வதிகார ஆட்சியில் ஏற்படும் சமூக பொருளியல் மாற்றமே.
>
> — லெனின்

# மக்கள் அடிப்படையிலான புரட்சியே பூரணத்துவ விடுதலைக்கு வழி



**''கத்தரிக்காய் தின்பவன் கரிகரியாய்ப் போவான்; கருவாடு தின்பவன் கைலாசம் போவான் என்பது ஊர் வழமைப் பழமொழி. இதைப் படித்தோ, கேட்டுவிட்டோ, ஓடோடிப் போய் ''கருவாடு தின்றுனும் ஒரு பிராமணன் கைலாசம் போகலாம் என்ற நம்பிக்கையில்''**

இதுபோல்தான், இன்று சிலர் சந்தர்ப்ப வசத்தாலும், சந்தர்ப்ப நோக்கத்துடனும் தமது உள்ளார்ந்த எண்ணப்பாட்டையும், உருவம்சத்தையும் மறைத்துக்கொண்டு, ''சோசலீசம் பேசுகிருர்கள் ஈழவிடுதலை காண''.

சோசலீசம் எந்த அடிப்படையில் அமைவது என்பது பற்றி ஆழமான ஆய்வு உண்டு. இன்று உலகில் பல நாடுகளில் முக்கியமாக ஐரோப்பிய நாடுகளில் கூட சோசலீசக் கட்சிகள் உண்டு. இவைகளும் தான் சோ ச லீ ச ம் பேசுகின்றன. ஆனுல், இவர்களுடைய சோசலீசம் முதலாளித்துவ அமைப்புக்குட்பட்டதே. ஏன்? ஹிட்லர் கூட சோசலீசம் பேசவில்லையா? இல்லை நமது ஜனுதிபதி கூட ''தம் இஷ்ட'' சோசலீசம் பேசவில்லையா?

## சோசலீசத்தின் அர்த்தம்

மார்ச்ஸ் காலத்தில் கூட பிரான்சிலிருந்த செயின்ட் சைமன் கூட சோசலீசம் பேசினுன். இத்தகைய சோசலீசம், தர்க்கீக நெறிக்கு புறம்பானதும், இயங்கியல் நியதிக்கு நிதர்சனம் அற்றதும். இயங்கியல் முறையில் ஆய்ந்த தத்துவ வித்தகன் கார்ல் மார்க்ஸ் ''சோசலீசம் என்பது சோசலீசத்துக்கான புரட்சியின் குழந்தையே'' என வலியுறுத்துகிருர். அது மட்டுமல்லாமல் மார்க்சீயத்தின் பிரதிபிம்பமான புரட்சிப் புரவலன் லெனின் ''சோசலீசம் என்பது. சமூக அரசியல் அடிப்படையிலான புரட்சிக்குப் பின் மக்கள்தம் அரசியல் தலைமையை பொறுப்பேற்றுக்கொண்ட பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகார (Dictatorship of the proletariat) ஆட்சியில் ஏற்படும் சமூக பொருளியல் மாற்றமே'' என்கிருர். அதாவது சோசலீசம் மக்கள் புரட்சிக்குப் பின்னும் கம்யூனிச சமுதாயம் ஏற்படுவதற்குமிடையிலான கரலகட்டமே சோசலீசம்.

மேலும் விளக்கினுல், மார்க்சீய மேற்கோளின்படி புரட்சிக்குப்பின், மக்கள் ''அவரவர் திறமைக்கேற்ப வாழ்தலும்'' (Each according to his ability) அதன் பயனுக பின், ''அவரவர் தேவைக்கேற்ப வாழ்தலும்'' (Each according to his needs). இந்தப் பின்னைய நிலையில் தான் பூரணத்துவ கம்யூனிச சமுதாயம் உருவாகும். இதற்கும் புரட்சிக்கும் இடையே அமையும் காலகட்டம் தான் சோசலீச சமுதாயம். இதை தர்க்கீகவாதிகள் அறிவார்கள். அறிவதோடு மட்டுமல்லாமல் உணரவும் வேண்டும்.


ஆகவே ஈழவருக்கு ஒரு சோசலீச சமுதாயத்தை அமைக்க நாடுவோர் ஈழவரின் சோசலீச சமுதாயம் மக்கள் அடிப்படையிலான புரட்சியின் மூலமே அமைக்க வேண்டும். அப்போது தான் பூரணத்துவ விடுதலையை நாடமுடியும்.

## அடிப்படையான மாற்றம் வேண்டும்

புரட்சி வேறு; விடுதலை வேறு. காலனித்துவத்திற்கு முன்னைய சரித்திர சமூக வரலாற்றுக்குப் பின், பிரித்தானிய காலனித்துவத்துக்கு அடிமைப்பட்ட இந்தியா, இலங்கை போன்ற விடுதலை பெற்ற நாடுகள் பல. ஆனுல், அங்கு மக்கள் சமூக பொருளியல் அடிப்படையில் விடுதலை காணவில்லையே! உதாரணத்திற்கு இந்தியா சுதந்திரம் பெற்று 33 ஆண்டுகள் ஆகியும் அங்கு எந்த சமுதாய மாற்றமும் ஏற்படவில்லையே! இதனுல் தான், பாரதி கூட ''விடுதலை, விடுதலை, இங்கு தீய பறையருக்கும், புலையருக்கும் விடுதலை'' என்று பாடியபோது, சமூக, சமுதாய அடிப்படையிலான விடுதலையையே வேண்டுகிருன் என்பது தெளிவு. அந்த விடுதலை, புரட்சியின் அடிப்படையில் தான் அமைய வேண்டும் என்பதையும் வற்புறுத்தத் தவறவில்லை.

இதே போலத்தான் இலங்கையிலும் கூட ஆங்கிலேய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்று முப்பத்திமூன்று ஆண்டுகள் ஆகியும் சமுதாய மாற்

(தொடர்ச்சி 15-ம் பக்கம்)




## இம்மலரில்........


- புரட்சியைப்பாடிய புதுமைக் கவி
- அக்டோபர் புரட்சியும் ஈழவர் பிரச்சனையும்
- தோட்டத் தொழிலாளர் வாழ்வு சீர்குலைப்பு
- இஸ்லாமிய மக்களின் தேசிய இன ஒருமைப்பாடு
- யாழ்ப்பாணத் தொல் குடிகள்
- மலையக மக்கள் தனித்தேசிய இனமா?
- ஈழவர் இடர்திர......
- திருமலையில் குடியேற்றம்
- மீனவர் வாழ்வில் அவலம்
- சாதி உருவாக்கமும் ஈழவர் எதிர்காலமும்
- தீர்வுக்கு வழிபிறந்தது (கதை)
- வாசகர் வாக்கு
- உலக அரசியல் நோக்கு


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புரட்சியைப் பாடிய புதுமைக் கவி

**" மணிக்கொடி பரம்பரையின் நிழல் எனக் கருதப்படும் ந. சிதம்பர ரகுநாதன் அவர்கள், புதுமைப்பித்தன், கு. பா. ராஜகோபால் போன்றவர்களின் பரிசுத்த பழனத்துக்காவலர். "பஞ்சமும் பசியும்" என்ற நாவல் மூலம் ஈழவர்தம் இதயம் கவர்ந்தவர். இந்தியாவில் பாரதியைப் பார்த்தும் பழகியது மட்டுமல்லாமல் அந்த மகா கவிஞனுடைய எழுத்துக்கள் யாவையையும் திரட்டியும் வைத்திருப்பவர். அச்தகைய ஒரு சிறந்த ஆய்வு எழுத்தாளர், பாரதியின் நூற்றுண்டு விழா குறித்துத் தர்க்கீகத்துக்காகச் சிறப்பாக எழுதிய கட்டுரையை இங்கு பிரசுரிக்கின்றேம்."**

**பல** மொழிகளையும் சேர்ந்த பாரதக் கவிஞர்கள் அனைவரிலும், விரைவில் நூற்றுண்டு விழாக் கவிநாயகனுக விளங்கவிருக்கும் நமது தமிழ் நாட்டுத் தேசிய மகாகவி சுப்பிரமணிய பாரதிதான் 1917-ல் ரஷ்யாவில் அகிலத்தைக் குலுக்கிய அக்டோபர் புரட்சி வெற்றிபெற்றபோது, அதனைத் தனது "புதிய ரஷ்யா" என்ற அருமையான பாடலின்மூலம் ஆகாகாரமிட்டு வாழ்த்தி வரவேற்ருன் என்பது அனைவரும் அறிந்த செய்தி.

அக்டோபர் புரட்சியை இத்தனை அதிவிரைவாகவும் ஆக்க பூர்வமாகவும் வாழ்த்தி வரவேற்றுப் பாட, பாரதியால் எப்படி முடிந்தது?

வரப்போகிற வெற்றிகரமான புரட்சிக்கோர் "ஒத்திகை" என்று மாமேதை லெனினல் சரியாக வருணிக்கப்பெற்ற 1905—ம் ஆண்டின் முதல் ரஷ்யப் புரட்சி தொடங்கிய காலத்திலிருந்தே, ஜாரின் எதேச்சாதிகாரத்தை எதிர்த்து ரஷ்யாவில் முற்றிக் கனிந்துவந்த, வரலாறு முன்னென்றும் காணுத- சமூகப் புரட்சியானது இந்தியாவின் ஏனைய பகுதிகளைப் போலவே தமிழ் நாட்டைச் சேர்ந்த தேச பக்தர்கள் புரட்சிவாதிகள் ஆகியோரின் கவனத்தைப் பெரிதும் ஈர்ந்தது.

இந்த 1905-ம் ஆண்டுப் புரட்சி தொடங்கிய தருணத்திலேயே, தேசபக்தக் கவிஞனுகவும், அரசியல் பத்திரிகையாளனுகவும் அடியெடுத்து வைத்த பாரதியையும் இந்தப் புரட்சி இயல்பாகவே கவர்ந்தது. மேலும், இந்த நூற்றுண்டின் தொடக்கத்தில் இந்தியாவில் எழுந்த தீவிரத் தேசியவாத இயக்கத்தில் தான் சேர்வதற்கு முன்பே, பாரதி ஆங்கில விமர்சகர்கள் பலராலும் "பிரஞ்சுப் புரட்சியின் குழந்தை" என்று வர்ணிக்கப்பெற்ற 18—ம் நூற்றுண்டின் ஆங்கிலப் புரட்சிக் கவிஞனை ஷெல்லிக்குத் தன்னைத் "தாசன்" என்று அறிவித்துக் கொண்டான். பிரஞ்சுப் புரட்சியின் முப்பெரும் கோஷங்களான "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்" என்ற முப்பெரும் கோஷங்களையும் அவன் தனது லட்சியமாக ஏற்றுக் கொண்டிருந்தான். எனவே ரஷ்யப் புரட்சி வெடித்தபோது, அது அவனை உடனே இயல்பாகவே கவர்ந்துவிட்டது. மேற்கூறிய முப்பெரும் கோஷங்களையே தனது தாரக மந்திர மாகக் கொண்டு, பாரதியின் ஆசிரியப் பொறுப்பின்கீழ் அவனது "இந்தியா" என்ற அரசியல் வாரப் பத்திரிகை 1906 ஏப்ரலில் வெளிவரத் தொடங்கிய பின், அவன் அந்தப் பத்திரிகையில் ரஷ்யப் புரட்சியைப்பற்றி உற்சாகத்தோடு பல குறிப்புக்களை எழுதவும் தவறவில்லை. அந்த அரசியல் குறிப்புக்களில் அவன் ஜாரிஸ்டு ஆட்சியின் "இறுதிக் காலம் வெகு சமீபமாக நெருங்கிவிட்டது என்பதற்குத் தெளிவான பல சின்னங்கள் தென்படுகின்கின்றன " என்று எழுதியதோடு, "சுயாதீனத்தின் பொருட்டும் கொடுங்கோன்மை நாசத்தின் பொருட்டும் நமது ரஷ்யத் தோழர்கள் செய்து வரும் உத்தமமான முயற்சிகளின்மீது ஈசன் பேரருள் செலுத்துவாராக" என்றும் எழுதி, போராடும் ரஷ்ய மக்களுக்குத் தனது பூரண ஆதரவையும் தெரிவித்தான்.

என்ருலும், விரைவிலேயே அவனது பத்திரிகையின்மீது பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் கழுகுக் கண்கள் பாய்ந்ததாலும், தன்னைக் கைதுசெய்யப் போகும் ரகசியத்தைத் தெரிந்து கொண்டதாலும் பாரதி அப்போது பிரஞ்சு ஆட்சியின் கீழிருந்த புதுச்சேரிக்குத் தலைமறைவாகச் சென்று, அங்கிருந்து தனது பத்திரிகையை வெளிக்கொணரத் தொடங்கினுன். பாரதியோடு உடன்சென்ற "இந்தியா" பத்திரிகையின் பதிப்பாளரும் நிர்வாகியுமான எம். பி. திருமலாச்சார்யா, பின்னர் புதுச்சேரியிலிருந்து ஐரோப்பா சென்று அங்கிருந்த இந்தியப் புரட்சியாளர்களோடு சேர்ந்துகொண்டார் என்பதிலும், 1919—ல் லெனினைச் சந்தித்த இந்தியப் புரட்சிவாதிகளில் அவரும் ஒருவர் என்பதிலும், 1920 அக்டோபரில் வெளிநாடுகளில் இருந்துவந்த இந்தியப் புரட்சிவாதிகள் தாஷ்கெண்டு நகரில் தோற்றுவித்த இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு அவரே தலைவராக இருந்தார் என்பதிலும் வியப்பில்லை.

பாரதியின் 'இந்தியா' பத்திரிகை புதுச்சேரியிலிருந்து மீண்டும் வெளிவந்த போதிலும் விரைவிலேயே அது தமிழ்நாட்டுக்குள் வருவதை பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் தடைசெய்து விட்டனர். என்ருலும் புதுச்சேரியில் பத்தாண்டுகாலம் அரசியல் அஞ்ஞாதவாசம் புரியநேர்ந்த பாரதி வாளாவிருக்கவில்லை. அவன் உலக நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனித்து வந்ததோடு பிற பத்திரிகைகளில் வெளிவந்த தனது கவிதைகள், கட்டுரைகள் மூலம் அவைபற்றிய தனது கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் வெளியிட்டே வந்தான். இதனல் அவன் "ஆப்பிரிச்கத்துக் காப்பிரி நாட்டிலும், தென் முனையடுத்த தீவுகள் பலவினும், பூமிப் பந்தின் கீழ்ப்புறத்துள்ள பற்பல தீவிலும்" ஏகாதிபத்திய வாதிகள் நடத்திவந்த காலனியாதிக்கக் கொள்ளையைக் கண்டிக்கவும் அம்பலப்படுத்தவும் அதே போல் காலனியாதிக்கம், ஏகாதிபத்திய ஆதிக்கம் எதேச்சாதிகார ஆதிக்கம் ஆகியவற்றை எதிர்த்து ஒடுக்கப்பட்டு மக்கள் பலவும் நடத்திவந்த போராட்டங்களில் தென்பட்ட ஆக்கபூர்வமான போக்குகளையும் வரவேற்கவும் அவன் தவறவில்லை. எனவே 1917-ம் ஆண்டின் பிப்ரவரிப் புரட்சி ரஷ்யாவில் வெற்றி பெற்றபின் விரைவிலேயே அவன் சுதேசமித்திரனில் எழுதிய குறிப்பொன்றில் (28—3—1917) "பூமியில் நல்ல யுகம் தோன்றப்போகிறது. மனித சாதி முழுமைக்கும் விடுதலை உண்டாகப் போகிறது. ருஷ்ய ராட்சியப் புரட்சியானது இனி வரப்போகிற நற்காலத்தின் முன்னடையாளங்களில் ஒன்று" என்று எழுதினுன். எனவே 1917அக்டோபரில் சோஷலிசப் புரட்சி அங்கு வெற்றிகண்டவுடனேயே, அதனை வாழ்த்தி வரவேற்றுப் பாடுவதிலும் அவன் பின்தங்கி நிற்கவில்லை.

குடிமக்கள் சொன்னபடி குடி வாழ்வு
மேன்மையுறக் குடிமை நீதி
கடியொன்றில் எழுந்ததுபார் ;
குடியரசொன்று
உலகறியக் கூறிவிட்டார்.
அடிமைக்குத் தளையில்லை; யாரும்
இப்போது
அடிமையில்லை அறிக என்ருர்.
இடிபட்ட சுவர்போலக் கலிவிழுந்தான்
கிருதயுகம் எழுக மாதோ !

என்று பாடினுன் அவன். இந்தக் கவிதையில் அவன் அக்டோபர் புரட்சியை "யுகப் புரட்சி" —அதாவது மனித குலத்துக்கு ஒரு புதிய யுகத்தைக் கொண்டுவந்த புரட்சி"என்று வாழ்த்திப் பாடினுன்.

முதல் உலகப்போர் நடந்த காலத்தில் (1914—1918) பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் யுத்த காலச் செய்தித் தணிக்கை முறையை விதித்திருந்த போதிலும், ரஷ்யாவில் நிகழ்ந்துவந்த மாற்றங்களைக் குறித்து மேலைநாட்டுச் செய்தி நிறுவனங்கள் பொய்யும் புலையுமாகச் செய்திகளைத் திரித்து வழங்கிவந்த நிலையிலும்கூட, பாரதி அக்டோபர் புரட்சியின் உள்ளடக்கத்தையும் அதன் தலைவரான லெனினது மகத்துவத்தையும் புரிந்தே இருந்தான். 29-11-1917அன்று, அதாவது புரட்சி வெற்றிபெற்ற சில வாரங்களில் அவன் சுதேசமித்திரனில் எழுதிய கட்டுரை ஒன்றில், "ருஷ்யாவில் ஸ்ரீமான் லெனின்......முதலியவர்களின் அதிகாரத்தின்கீழ் ஏற்பட்டிருக்கும் குடியரசில் தேசத்து விளைநிலமும், பிறசெல்வங்களும் தேசத்தில் பிறந்த அத்தனை ஜனங்களுக்கும் பொது உடைமையாகி விட்டது" என்றும், "இந்தச் சித்தாந்தம் (சோசலிசம்) பரிபூரண ஜெயமடைந்து மனிதருக்குள்ளே சகஜ தர்மமாக ஏற்பட்ட பிறகுதான் மானிடர் உண்மையான நாகரிகம் உடையோராவர்" என்றும் எழுதினுன். லெனினைப் பற்றிப் பாரதி எழுதும்போது "ஸ்ரீமான்" என்ற மரியாதை அடைமொழியைச் சேர்த்தே எழுதியிருப்பது லெனின்மீது அவனுக்கிருந்த மதிப்பைப் புலப்படுத்துவதாகும்.

புரட்சிக்குப்பின்னர் ரஷ்யாவில் நிகழ்ந்துவந்த மாற்றங்களைக் கூர்ந்து கவனித்து, அங்கு லெனினது தலைமையில் நிறைவேற்றப்பட்டுவந்த சீர்திருத்தங்கள் பலவற்றையும் பாரதி வரவேற்று எழுதிவந்த அதேசமயத்தில், இளம் சோவியத் குடியரசுக்கும் அது மேற்கொண்டுவந்த தீவிரச் சீர்திருத்தங்களுக்கும் எதிராக மேலைநாடுகள் செய்துவந்த விஷமத்தனமான, அவதூருன பிரசாரத்தை அம்பலப்படுத்தவும் கண்டிக்கவும் தவறவில்லை. உதாரணமாக, "நவீன ருஷ்யாவில் விவாக விதிகள்" என்ற தனது கட்டுரையொன்றில் பாரதி இவ்வாறு எழுதினுன் : ,, போல்ஷிவிக் ஆட்சி ஏற்பட்ட காலத்திலே அதற்குப் பல வகைகளிலும் தோஷங்கள் கற்பிப்பதையே தம் உடைமையாகக் கருதியசிலர்...போல்ஷிவிக் கட்சியார் ஸ்திரீகளையும் பொதுவாகக் கொண்டு ஒருத்தியைப் பலர் அனுபவிக்கிருர்களென்ற அபாண்டமான பழியைச் சுமத்தினர். ஆனல் கெட்டிக்காரன் புளுகு எட்டுநாளைக்கு! ஒன்பதாம் நாள் உண்மை எப்படியேனும் வெளிப்பட்டுவிடும். ஒரு பெரிய ராஜ்யத்தைப்பற்றி எத்தனைகாலம் பொய்யைப்பரப்பிக் கொண்டிருக்க முடியும்? "

இவ்வாறு 1921 செப்டம்பர் மாதத்தில் தனது 39-வது வயதில் அகாலமரணமடையும் காலம் வரையிலும் பாரதி எழுதிவந்த பல கவிதைகள், கட்டுரைகள் முதலியயாவும் மாபெரும் அக்டோபர் புரட்சியின் ஆழமான முக்கியத்துவத்தை உணர்ந்து, இந்திய—சோவியத் நட்புறவுக்கும் வழிசமைத்துக்கொடுத்த பாரதத்தின் தவப்புதல்வர்களில் ஒருவனுகவே பாரதி விளங்கினுன்என்ற உண்மையையே பறைசாற்றுகின்றன.

---

## உலக அரசியல்...

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

காட்டுகின்றன. இவைமட்டுமல்ல அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஓங்கியிருந்த கை நாளுக்கு நாள் துண்டாக்கப்பட்டு முண்டமாக்கப்பட்டு வருவதையும் இதனல் அமெரிக்க நிர்வாகம் C. I. A. மூலம் சதிவேலைகளில் ஈடுபட்டு வருவதையும், தனது இராணுவ, கடற்படைத் தளங்களை விஸ்தரித்து வருவதையும் தெளிவாகக் காணலாம்.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் அமெரிக்கா தனது கடற்படையை மிகப் பெரிய அளவில் இந்துமாசமுத்திரப் பகுதிக்குள் நகர்ந்தியிருக்கின்றது. இந்துமாசமுத்திரத்தில் பிரதான அமெரிக்க இராணுவ தளங்களான தியாகோகார்சியாதீவும், ஓமானுக்குச் சொந்தமான மசிராதீவு, கென்யாவிலுள்ள மொம்பாஸா, சோமாலியாவிலுள்ள பெர்பெரா முதலிய தளங்கள் போருக்கான தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இத்தனைக்கும் மேலாக ஆப்கான் மக்களின் சுதந்திரத்திற்கும், அவர்களின் விடுதலை இறைமைக்கும் வேட்டுவைக்கும் செயலில் அமெரிக்கா, பாகிஸ்தான் மூலம் ஈடுபட்டுவருவதையும், சீனவைத் தன் கைப்பொம்மையாக்கி அண்டை நாடுகளுடன் முண்டவைத்து வருவதையும் அண்மைய சம்பவங்கள் எடுத்துரைக்கின்றன.

மேற்கூறிய விடயங்களனைத்தும் ஆதிக்க நாடுகளின் தன்மைகளையும் அவற்றின் வீழ்ச்சியையும் தெளிவாகக் காட்டியுள்ளது. ஆனல் ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கப் பிடிகளிலிருந்து விடுபடுவதுடன் அவர்களுக்குத் துணைபோன உள்நாட்டு முதலாளித்துவ வர்க்கங்களுக்கும் இன்று பலத்த அடிவிழுந்து வருகின்றது. இதையே ஈரான் சம்பவங்கள் காட்டி நிற்கின்றன. அத்துடன் எகிப்திய ஜனதிபதியின் படுகொலை என்பனவும் சமூக மாற்றத்தின் தோற்றுவாய்களை உணர்த்துகின்றன. இத்தனை நிகழ்வுகள் மத்தியிலும் போலந்தில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் அந்நிய ஊடுருவலைத் துலாம்பரமாகக் காட்டுகின்றது. அந்நாட்டு மக்களின் சுதந்திரத்தையும், அடிப்படை உரிமைகளையும் சீர்குலைக்கும்வகையில், அந்நாட்டு மக்களினல் தீர்க்கப்படவேண்டிய பிரச்சனைகளைத் தமது நலன்களுக்குச் சாதகமாக மாற்றிட அந்நிய முதலாளித்துவ சக்திகள் முனைந்து நிற்பதைக் காணலாம். இவையனைத்தும் சோசலிச மாற்றத்துக்கான போக்கே என்பதை வெகுவிரைவில் உணரலாம். இன்று முதலாளித்துவங்களினுள்ளே மூண்டுள்ள மிகப்பெரிய நெருக்கடி வல்லரசுகளை மோத விட்டுவிடுமா எனச் சிலர் ஐயப்படுவது நியாயமானதே. ஆனல் அத்தகைய நிலைத்தோற்றத்திலும் புரட்சிப் போராட்டத்தின்மூலம் பல நாடுகள் உருவாகி முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகளுக்கு நல்ல பாடம் கிடைக்கும் என்பது இயங்கியல் நியதி. அந்த நியதி பெரும் அழிவிலானதாக அமையாமல் இருக்கவைக்கவேண்டியது ஒவ்வொரு தொழிலாள பாட்டாளி வர்க்கத்தின் உன்னத கடமையாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அக்டோபர் புரட்சியும் — ஈழவர் பிரச்சனையும்



புரட்சிப் புரவலன் தோழர் லெனின் அக்டோபர் புரட்சியின் ஓராண்டு பூர்த்தியையிட்டு உரையாற்றுகின்றார்

உலகில் எத்தனையோ புரட்சிகள் நடந்தன. அடிமை முறைக்கெதிரான போரட்டங்களை யும், ஐரோப்பாவில் நடந்த நிலப் பிரபுத்துவத்திற் கெதிரான போராட்டத்தை யும் இங்கு சுட்டிக் காட்டலாம். ஆனல் இவை யாவையின் மூலமும், சுரண்டுபவர்கள் கைமாறி னர்களே தவிர சுரண்டல் முறை நீடிக்கவே செய்தது. உழைக்கும் மக்களுக்கெதிராக வெறுக்கத் தக்க முறையில் நிறைவேற்றப்பட்ட அடக்கு முறைகளும் சுரண்டலும் தொடரத்தான் செய்தன. ஆனல் அக்டோபர் புரட்சி ஒன்று மாத்திரந்தான் கருத்திலும் உள்ளடக்கத்திலும் ஏனைய புரட்சிகளைவிட வேறுபட்டது. இந்த மகத்தான புரட்சி தான் உழைக்கும் மக்களின் தலைமையின்கீழ் ஒரு வர்க்கமற்ற சமத்துவ சமுதாயத்தை அமைப்பதற்கான அடித்தளத்தை உருவாக்கியது.

இந்த உலகப் புகழ்பெற்ற புரட்சிக்கு தூபமிட்டு வழி நடத்தியதுதான் போல்சுவிக் கட்சி. இதன் அமைப்பாளரும், தலைவரும்தான் லெனின். இந்தப் புரட்சிப் புரவலன் லெனின் புகட்டும் பாடங்கள் தான் லெனினியம். லெனினியம் என்பது ஸ்டாலினின் வார்த்தையால் 'ஏகாதிபத்திய சகாப்தத்திற்கும் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிக்கும் ஏற்ற மார்க்ஸியமே'. பொதுவாக பாட்டாளி வர்க்கத்தின் புரட்சி பற்றியதும், குறிப்பாக பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம் பற்றியதுமான தத்துவமும், தந்திரோபாயங்களுமே.

அக்டோபர் புரட்சியானது ஒரு நாட்டின் வரம்பிற்குள் நடந்திருந்தாலும், நிட்சயமாக அது உலகளாவியதே என்பது சரித்திரம் காட்டும் உண்மை. இந்த வகையில் இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்களாகிய ஈழவர்கள் அக்டோபர் புரட்சி காட்டும் உண்மைகளிலிருந்து அறிந்து கொள்ள வேண்டியவை எத்தனையோ.

## சுயநிர்ணய உரிமையில் ஈழவர்கள்

தேசிய இனங்களும், சுயநிர்ணய உரிமையும் பற்றி அக்டோபர் புரட்சிதரும் அர்த்தபுஷ்டியானபாடங்கள் ஈழவரைப் பொறுத்தவரை மிக முக்கியமானவையாகும். தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை யாரும் மறுப்பதில்லை. ஆனல் அவரவர் வர்க்க நிலைப்பாட்டிற்கமைய அதன் கருத்தையும் அணுகு முறைகளையும் வெவ்வேறு கோணங்களில் பார்க்கிறார்கள். இலங்கையில் ஜே.வி.பியினர், தமிழ்ப் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ளும் அதே வேளையில், தமிழ்ப் பேசும் மக்கள் தமக்கென ஒரு தேசிய அமைப்பிற்காகப் போராடுவதை வெளிப்படையாக எதிர்க்கின்றார்கள். தமிழ்ப்பேசும் மக்களின் பிரச்சனை வெறும் மொழிப் பிரச்சனை என்ற நினைப்பில், தமிழ்ப் பேசும் மக்களை இனரீதியில் அடையாளம் கண்டு அரசியல் பொருளாதார சமூக ரீதியில் சிங்கள எதேச்சாதிகாரத்தால் ஒதுக்கப் படுகிறார்கள் என்ற யதார்த்த உண்மையை ஜே.வி.பியினர் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். இதனல் சுயநிர்ணய உரிமை என்றால் மொழி, கலாச்சார உரிமை மட்டுந்தான் என்ற எண்ணத்தில் அவர்களின் செயற்பாட்டு நிலை அடங்கி நிற்கின்றது,

ஆனல் சுயநிர்ணய உரிமை என்றால், அது அரசியல் உரிமையே. அதாவது ஒரு தேசிய இனம் தம்மை அடக்கும் வேறொரு தேசிய இனத்திலிருந்து பிரிந்து தமக்கென ஒரு தேசிய அமைப்பை அமைப்பதற்கான உரிமை. வேறெந்த அர்த்தமும் இருக்க முடியாது என்கின்ற புரவலன் லெனின் கூற்று இதை மெய்ப்பிப்பதாய் அமைவதுதான் அக்டோபர் புரட்சி.

'ஜார் மன்னனின் கொடுங்கோல் ஆட்சியின் இறுக்கமான பிடியிலிருந்து தமது சுதந்திரத்திற்காகவும், இறைமைக்காகவும், போராடிய வெவ்வேறு தேசிய இனங்களின் உதவியுடன் பெப்ரவரி புரட்சியின் மூலம் பதவிக்கு வந்த பூர்சுவா-ஜனநாயகக் கும்பல் இதுவரை காலமும் சுயநிர்ணய உரிமைபற்றி வாய்கிழியக் கத்தியதோடு மட்டும் நின்றார்கள், தேசிய இன ஒடுக்கலை ஒழிப்பதற்கு பதிலாக இவர்கள் தமது நிர்வாணமான ஏகாதிபத்திய நிலையைக் காட்டும்

அக்டோபர் புரட்சி, ரஷ்யாவின் மத்திய பகுதியில் தொடங்கி ஏனைய பகுதிகளுக்கும் பரவியது. பெப்ரவரி புரட்சியின் பின் உருவாகிய வெவ்வேறு தேசிய இனங்களுக்காகிய ''தேசிய அரசாங்கங்களுக்கு'' எதிராகவும் அந்த இனங்களின் தொழிலாளர்களும், விவசாயிகளும் போராடினார்கள். ஆனல் இந்த ''தேசிய அரசாங்கங்கள்'' தம் முதலாளித்துவ வர்க்கநிலை சார்ந்து ஏகாதிபத்தியத்திற்கு எதிரான தொழிலாளர்-விவசாயிகளது புரட்சிப் போராட்டத்தை அழித்தொழிக்க கங்கணம் கட்டி நின்றனர். இறுதியில் தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டம் வெற்றிக் கட்டத்தை அடைந்த போது இந்த அரசாங்கங்கள் இளம் சோவியத் அரசுக் கெதிராகவும் தமது ''சொந்த'' உழைக்கும் மக்களுக் கெதிராகவும் போராட மேற்கத்தைய ஏகாதிபத்தியத் திடம் கையேந்தி நின்றன. இறுதியில் மக்கள் சக்தி வென்றது. ஆனல் இதிலிருந்து வரும் ஒரு படிப்பினையை ஈழவர்கள் மறந்துவிடக் கூடாது. ஒரு தேசிய இனத்தின் பூர்சுவா தனது சொந்த சுதந்திரத்திற்காக மட்டுந்தான் போராடுகின்றது. இதையேதான் ஸ்டாலின் அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றார்.

ஒரு தேசிய இனத்தின் பூர்சுவா, தனது சுதந்திரத்திற்காக, அதாவது ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் உழைக்கும் மக்களிடம் இருந்து அதிக லாபத்தை தான் மட்டும் கறக்கும் ''சுதந்திரத்தையும்'' தன்னுடைய நலன்களையும் முதலீட்டைப் பேணிக்காக்கும் ''சுதந்திரத்தையும்'' மட்டுந்தான் மனதில் கொண்டு இயங்குகிறதே தவிர ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் முழு விடுதலைக்காகவும் போராடுவதில்லை''.

''உண்மையில் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் முழு விடுதலையும், விமோசனமும், அவர்களது ஏகாதிபத்தியத்தின் உறவைத் துண்டிக்கும் வரைக்கும், அந்த தேசிய இனத்தின் பூர்சுவாக் கும்பலைத் தூக்கி எறியும் வரைக்கும், ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் உழைக்கும் மக்களின் கைக்கு அரசியல் அதிகாரம் கைமாறாத வரையும் நிச்சயமாகவும் நிதர்சனமாகவும் கிடைக்க முடியாது''.

அக்டோபர் புரட்சி உலக அரங்கில் ஏற்படுத்திய தாக்கம் மறைக்கமுடியாததொன்றாகும். முதலாவதாக: ஆண்டான்—அடிமை; முதலாளி—தொழிலாளி; ஏழை—பணக்காரன் உறவுகள் நிரந்தரமானவை, இயற்கை விதி ''எல்லாம் வல்ல இறைவனால்'' ஆக்கப்பட்டவை என்ற கட்டுக் கதைக்கும், பொய்ப் பிரச்சாரத்திற்கும் முதன் முதலில் சவுக்கடி கொடுத்தது அக்டோபர் புரட்சி தான். இதனல் தான் உலகப் பாட்டாளி வர்க்கமும், ஒடுக்கப்படும் மக்களும், புதிய ருஷ்யாவை நோக்கி ஈர்க்கப்பட்டார்கள்.

இரண்டாவதாக: தேசிய இனப்பிரச்சனை பற்றிய புதிய கருத்தோட்டத்தையும், வரைவிலக்கணத்தையும் தந்ததுதான் அக்டோபர் புரட்சி. இது பற்றி ஸ்டாலின் தனது ''அக்டோபர் புரட்சி பற்றி'' என்ற கட்டுரையில் எழுதும்போது கூறுகிறார்.

''அக்டோபர் புரட்சி மூலம் தேசிய இனப் பிரச்சனை பற்றிய முடிவுகள் விஸ்தரிக்கப்பட்டு, இப்பிரச்சனைகளை ஐரோப்பாவில் தேசிய இன ஒடுக்கலுக்கான போராட்டம் என்ற குறுகிய நிலையிலிருந்து வளர்ந்து, ஒடுக்கப்படும் மக்களினதும், காவிகளினதும் உலகரீதியில் ஏகாதிபத்தியத்திற் கெதிரான போராட்டமே என்ற பொதுத்தன்மையை அடைந்துள்ளது''.

இன்று விடுதலை அடைந்த பல நாடுகள் பல இயக்கங்களுக்கூடாக (உ-ம்: அணிசேரா நாடுகள், ஆசிய-ஆபிரிக்க மக்களின் ஒன்றியம், ஆபிரிக்க

(தொடர்ச்சி 14-ம் பக்கம்)

வண்ணம் தேசிய இனங்களை புதிய வழிமுறைகள் மூலம், பயங்கரமாகஒடுக்கும் கைங்கரியங்களில் ஈடுபட்டார்கள். ஆனல் அக்டோபர் புரட்சி தான் இதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தது. பின்லாந்து (Finland) பிரிந்து போனதும், ஏனைய தேசிய இனங்கள், சர்வதேச தோழமை அடிப்படையில், தமது முழுச்சுதந்திரத்தையும் பேணும் வகையில் சோசலிச சோவியத் ஒன்றியம் ஒன்றை அமைப்பதற்கு இணங்கியதும் இதற்கு சான்று கூறும்

இதிலிருந்து ஒரு படிப்பினை; சுயநிர்ணய உரிமைபற்றிய தவறான தார்ப்பரிய உண்மைகளையும் ஆழ அகலங்களையும் அறியத் தவறும் எவரும் இலங்கையில் சிங்கள இடதுசாரிகளின் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைபற்றிய தவறான கருத்துக்களையும், பிழையான அணுகு முறைகளையும் கண்டிக்கும் அதேவேளையில், தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைக்கு விடிவு காண்பவர்கள் என்று மார்தட்டும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சுயநிர்ணய உரிமைபற்றிய நிலைப்பாட்டையும் கண்டிக்கத் தவறக் கூடாது.

கூட்டணி ஒரு முதலாளித்துவக் கட்சி என்பதை மறுக்கவோ மறைக்கவோமுடியாது. தமிழ்த் தேசிய இனத்தின் பூர்சுவாக்களின் எண்ண அபிலாசைகளையும், அவர்களின் நலன்களையும் பிரதிபலிக்கும்வண்ணம் கூட்டணியின் கொள்கைளும், கோரிக்கைகளும் இது வரை காலமும் இருந்து வருவதைஅவதானிக்கத் தவறக் கூடாது. பாட்டாளிவர்க்கத்தின் நிலைமை தாக்கப்பட்ட ஒவ்வொரு சமயத்திலும் தமிழ் பூர்சுவாக்கள் அதை அசட்டை செய்வதும், ஏன்! பாட்டாளி வர்க்கத்தின் உரிமைகள் நசுக்கப்படும் போது அதற்கு அவர்கள் உடந்தையாக இருப்பதும் சரித்திரம் காட்டும் உண்மை. கூட்டணியின் பிரதி நிதித்துவத்தையும், அவர்கள் நிலைப் பாட்டையும் ஆழமாக ஆய்பவர்கள் அவர்களின் உண்மையான வர்க்க நிலைப்பாட்டை கவனிக்கத் தவற மாட்டார்கள். இந்த நிலையில்தான் தமிழ்த் தேசிய இனத்தின் 80 வீதத்திற்கும் மேலான பாட்டாளி வர்க்கத்திற்கு அக்டோபர் புரட்சி காட்டும் பாதைதான் என்னவென்று கேட்கவேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தோட்டத் தொழிலாளரின்

## வாழ்வு தொடர்ந்தும் சீர்குலைப்பு

பிரித்தானியரின் ஆதிக்க காலத்தில், அவர்களது சுய இலாபங்களுக்காக சுமார் 200 வருடங்களுக்கு முன்பு பல ஆசை வார்த்தைகளின் மத்தியில், இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட நாங்கள், தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு, இன்று மிக மிக வேகமாகவும் மோசமாகவும் சிங்கள பெருந் தேசிய வாதிகளினால் வர்க்க ரீதியாகவும், இன ரீதியாகவும் இனங் காணப்பட்டு சின்னாபின்னப் படுத்தப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே! உழைப்பைத் தவிர வாழ்வில் வேறேதும் கண்டிராத நாங்கள் மனிதர்கள் என்ற அடிப்படை உரிமைகள் எதுவுமற்று, வெறும் பிண்டங்களாக நாடு கடத்தப் படுவதற்கும் – சீர்குலைக்கப் படுவதற்கும் – முதலாளித்துவ இனவாத சக்திகளும் அதன் அடிவருடிகளுமே கர்த்தாக்கள் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இவற்றை உணர்ந்த நிலையில்தான், இலங்கையில் ''தோட்டக்காட்டான்கள்'' என்றும், இந்தியாவில் ''சிலோன் அகதிகள்'' என்றும் இழிவாக நோக்கி ஒதுக்கப்படும் நாங்கள் எமது எதிர்காலம் என்ன என்ற இதய வேட்கைக்குப் பதில் காண விழைகிறோம்.

இலங்கையை சிறைப்பிடித்த அந்நியர், அக்காலங்களில் நிலவி வந்த நிலப்பிரபுத்துவ அமைப்பின்மீது முதலாளித்துவ அமைப்பைத் திணித்தார்கள். இயல்பாகவே முதலாளித்துவ அமைப்பு ஏற்படாத இந்நிலையில், இலாப நோக்கையே இடுப்பில் கட்டிவந்த ஆங்கிலேயர் மலையக வளங்களை அபகரிக்க எத்தனித்ததன் விளைவே பல்மொழி பேசுவோரைக் கொண்ட இந்தியாவிலிருந்து தமிழ்மொழி பேசும் நாங்கள், ஆசை வார்த்தைகளூடாக கூலிகளாக மலையகப் பகுதிகளில் குவிக்கப்பட்டோம். எங்களை நிர்வகிப்பவர்களும், ஏவுபவர்களும் எங்கள் மொழி பேசுவோராக இருப்பதே பொருத்தமாயிருக்குமென்ற சூட்சுமத்தில் ஆங்கிலேயருக்கு அடிவருடிகளாக இருந்த வடபகுதி தமிழர்களை நிர்வாகிகளாக்கினர். தோட்டப் பகுதிகளில் அவ்வப்போது எழும் மோதல்கள் வடக்கு—மலையகம் என்ற பூசல்களையே தோற்றுவிக்குமென்பதையும், இதனால் தாங்கள் நல்லவர்களாக நடமாட முடியும் என்பதையும் அந்தரங்கத்தில் ஆங்கிலேயர் கொண்டிருந்தனர். இந்த வித்து இன்று பருத்த மரமாகி விழுதுகளுடன் நிற்பதை நாம் பார்க்கிறோமல்லவா?

ஆங்கிலேயர் இலங்கையை விட்டோடியதும் சிங்களவர் கைக்கு மாறிய அரசநிர்வாகம் இச் சதித் திட்டங்களுக்கு, அன்றும் இன்றும் பணிவிடை செய்து வருவதை யாரும் மறுப்பதற்கில்லை.

பாட்டாளி வர்க்கத்தின் வரைவிலக்கணத்துக்கு முற்றாகவே பொருந்தும் நாங்கள், எங்களை எலும்புக் கூடுகளாக்கும் இச் சமுதாய அமைப்பின் எதிரிகளாகி, அதனை மாற்ற முயலும் தத்துவங்களுக்கும், கட்சிகளுக்கும் ஆதரவளிப்பது இயல்பானதே! இந்தப் பின்னணியில் தான் 1947ம் ஆண்டு முதன்முதல் நடந்த பாராளுமன்றத் தேர்தலுக்கு ஐ. தே. கட்சியின் பிரதிநிதியைத் தோற்கடிக்கச் செய்து, இடதுசாரிகளை பிரதிநிதித்துவப் படுத்தினோம். இதனால் கொதிப்படைந்த முதலாவது பிரதமர் டி. எஸ். சேனநாயக்கா ஆட்சிக்கு வந்த வேகத்திலேயே எங்களுக்கு வேட்டுவைக்க வரிந்து கட்டினார். அதுதான் எங்கள் வாழ்வில் என்றும் மறக்க முடியாத 1948ம் ஆண்டுச் சம்பவம். குடியுரிமைகள் பிடுங்கப்பட்டு நடுத் தெருவுக்கு விரட்டப் பட்டோம். டி. எஸ். இன் ஆட்சிக்குப் பின் வந்த அனைத்து அரசுகளும் இச் சம்பவத்தை அலட்சியம் செய்யவில்லை, பதிலாக மிகுந்த ''அக்கறையுடனேயே'' அணுகின. அதாவது இன்று நிலவும் இந்தத் தனிச் சொத்துடமை அமைப்பானது, இவ்வமைப்பினால் நசுக்கப்படும் பாட்டாளி வர்க்கத்தாலேயே ஒரு காலகட்டத்தில் தலைகீழாகப் புரட்டப்பட்டு பொதுவுடமை அமைப்பு உருவாக்கப்படும் என்ற உண்மையை உணர்ந்ததால், இந்த வர்க்கத்தை சின்னாபின்னப்படுத்த வேண்டியதே தமது தலையாய பொறுப்பும், கடமையும் என்ற கருத்தைத் தலையில் கட்டிக் கொண்டிருந்தனர். இந்த அறிவிலிகள் அடுக்கடுக்காகப் பல காரியங்களைச் செய்யவும் இறங்கினர்.

**முதலாவதாக** 1964 ஒக்டோபர் 29ல் நடைபெற்ற சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தத்தைப் பிரதானமாகக் கருதலாம். இலங்கையில் குடியுரிமையற்றவர்கள் வறுமை நாடான இந்தியாவில் ''சுகமே'' வாழ வழி செய்கிறதாம் இவ்வொப்பந்தம்.

மலையகப் பகுதிகளில் புற்றீசல்கள் போல் உருவாகும் தொழிற்சங்கங்கள்பல இப் பிரச்சனைகளைக் கோடைக் காலமாகவே பார்த்தன. பசியாலும், நோயாலும், பிணியாலும் நெருக்கமான லயன்களிலே வாழும் நாங்கள் ஆத்திரத்தால் கிளர்ந்தெழுந்திருக்கிறோம். 1965 இல் கொந்தராத்துப் பிரச்சனை, பஞ்சப் படி போராட்டம் போன்றவற்றைக் குறிப்பாகக் கூறலாம்.

**இரண்டாவதாக,** 1972இல் இருந்த கூட்டுக் கட்சி அரசாங்கம் செய்த தோட்டச், சுவீகரிப்பைக் கூறலாம். சந்தர்ப்பவாத இடதுசாரிகளை உள்ளடக்கி இருந்த இந்த கூட்டுக்கட்சி அரசு சுவீகரித்த தோட்டப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை செய்ததால். ஏற்கனவே வேலையற்றிருந்த நாங்கள் குடியேற்றங்களால் பிச்சையெடுக்க வேண்டியதாயிற்று. நகரங்களை நோக்கி பிச்சைக்குச் சென்ற எங்களைப் பார்த்து, தங்கள்

**முத்து**

அந்தரங்கத் திட்டங்களையும் நினைத்துச் சந்தோஷப் பட்டது அரசாங்கம். இந்தச் சுவீகரிப்பால் வந்த நெருக்கடிக..ச் சமாளிக்க முடியாமல் நாங்கள் கிளர்ந்தெழுந்த போதெல்லாம் அரசாங்கம் படைகளைக் கொண்டு வேட்டுக்களைத் தீர்த்தது. 1975 இல் சிவனு இலட்சுமணனை இழந்தோம்.

1980ம் ஆண்டு எட்டியாந்தோட்டைப் பகுதியில் 60 நாட்கள், நிர்வாகத்துக்கு எதிராக வேலைநிறுத்தத்தில் குதித்திருந்தபோது, நடந்த விசாரணையில் ஆத்திரமடைந்த உத்தியோகத்தர்கள், உடமைகளைக் கொள்ளையடித்தும், லயன்களுக்குத் தீ வைத்தும் தாண்டவமாடினர். அப் பகுதி பாராளுமன்ற உறுப்பினரின் கண்சாடையில் நடந்த இவ் வெறியாட்டத்தில் பாதிக்கப் பட்ட தொழிலாளர்களையே கலகம் விளைவித்தவர்களாகச் சோடித்துச் சிறைப்படுத்தினர். இது போன்ற பல சம்பவங்கள் உடப்புசல்லாவை, தலவாக்கலை பகுதிகளிலும் மலிந்து காணப்படுகின்றன.

**மூன்றாவதாக,** மாற்றுப் பயிர்ச் செய்கைத் திட்டங்களை உருவாக்கி, பெருந்தோட்ட வாசனையையே அழிக்க எடுக்கும் முயற்சியாகும். எங்களை சின்னா பின்னப்படுத்துவதில், ''1948இல் குடியுரிமையை பறித்த நாங்கள் இன்றும் சளைத்தவர்கள் இல்லை'' என்ற தொனிப்பில் இன்றைய ஐ. தே. க. அரசாங்கம் இயங்கிவருவது கண்கூடு. இது 'நட்சா' நிறுவனத்தின்மூலம் மாற்றுப்பயிர்ச் செய்கைத் திட்டங்களை உருவாக்கி, தோட்டங்களில் சிங்களக் குடியிருப்புக்கும் வகைசெய்கிறது. யூனெஸ்கோ நிறுவனத்தின் பண உதவியுடன் எம்மை விரட்டி சிங்களவர்களைக் குடியமர்த்தும் கைங்கரியங்கள் நடைபெறுகின்றன.

**நான்காவதாக,** மலையகத்தில் மிகச்சர்வ சாதாரணமாக நடைபெற்றுவரும் இனக் கலவரங்கள், எம்மை அம் மண்ணில் அச்சமும், பீதியுமுறச் செய்கின்றன. பெரும்பாலும் சிங்களக் குடியேற்றங்கள் மலைகளின் அடியைச் சுற்றியே செய்யப்படும். இது கலவரங்களின்போது, தமிழ் தொழிலாளர்களைச் சுற்றி வளைத்துத் தாக்குவதற்கு வாய்ப்புடையதாயிருக்கிறது. அடிக்கடி எங்கள் உயிர்களுக்கும், உடமைகளுக்கும், லயன்களுக்கும், மானங்களுக்கும் என்ன நடப்பதென்று சுட்டிக் காட்டத் தேவையில்லை. கலகங்களில் ''இந்தியாவுக்கு ஓடிவிடுங்கள்'' என்ற அரசாங்கக் கொள்கையின் பிரதிபலிப்புக் கோஷத்தைத் தாராராளமாகக் கேட்கலாம். அண்மைக் கலவரத்தின்போது 10,000 பேர்வரை பாதிக்கப்பட்ட போது, ''சீக்கிரமே உங்களை இந்தியா அனுப்பி வைக்கிறோம்'' என்று முதலைக் கண்ணீருடன் 'அனுதாப நோக்கில்' உறுதிமொழி அளிக்கிறார்கள் பலர்.

**ஐந்தாவதாக,** தோட்டங்களில் வேலைகளற்றும், இனக் கலவரங்களாலும் வடக்கு, கிழக்கை நோக்கி ஓடிவரும்போது, ''ஆக்கிரமிப்பாளர்கள்'' என்ற மேலதிக பட்டத்தை அரசாங்கம் சூட்டி அரசாங்க அதிபர்கள் மூலமாகவும், பட்டாளம் மூலமாகவும் இப்பகுதிகளிலிருந்தும் துரத்தியடிக்கிறார்கள்.

வடக்கில் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத் தீவு, மன்னார் போன்ற இடங்களிலும், கிழக்கில் புல்லுமலை, கரடியனாறு, புனாணை என்ற இடங்களிலும் குடிபெயர்ந்து வந்த நாங்கள், புனாணையில் இராணுவத்தினரால் தாக்கப்பட்டதும், வாகரையில் உதவி அரசாங்க அதிபரின் ''உடனடியாக வெளியேறு'' என்ற உறுமலும் போதிய சான்றுகளாகத் தெரியவில்லையா?

**ஆறாவதாக,** இந்த வரிசைகளில் இன்று புதிதாக விதைக்கப்பட்டிருக்கும் ''தனித் தேசிய இனம்'' என்ற கேலிக் கோஷத்தைப் பார்க்கலாம். இலங்கையிலே கூர்மை பெற்றிருக்கும் சிங்கள தமிழ் முரண்பாடுகளால் ஒரு சோசலிச நிர்மாணம் தமிழ் பேசும் மக்களாலேயே முதலில் உருவாக்கப்படும் சூழல் கருக்கொண்டிருக்கும்போது, அதனைத் தடுக்க, சிங்கள அரசாட்சியாளர் செய்யும் சூழ்ச்சியாக இதைப் பார்க்க மறுக்கிறார்கள் சமூக மாற்றத்திற்கான தடையை பாட்டாளி வர்க்கத்தைச் சீர்குலைய வைப்பதால்தான் ஏற்படுத்த முடியுமென்ற எண்ணத்தையுடைய கட்சிகளுக்கு ''தனித் தேசிய இன'' பிரச்சாரம் வக்காலத்து வாங்குகிறது. இன்று தமிழ்பேசும் மக்களின் ஒற்றுமைக் குலைப்பின் மகுடமே இதுவாகும். எமது விடிவிற்கு இதுவரைகாலமும் உயிரோட்டமான வழியைக் காட்டாதவர்களும், ஏமாற்றுப் பேர்வழிகளும் தமது இயலாமையை மறைக்க தூக்கிப்பிடிக்கும் கோஷம் தான் ''தனித் தேசிய இனம்''.

மேலே கூறிவந்த முக்கியமான ஆறுவகை தளங்களும் எங்களை தகர்க்க வைக்கப்பட்ட 'டைனமேற்றுகள்' என்றுதான் கூறவேண்டும். இந்தப் பின்னணியில் — சதிப்பின்னணியில் — பிரச்சனைகளைப் பார்க்க விடாதபடி பலவழிகளிலும் எம்மை மூடிவைத்து இன்று இந்தியாவில் உங்களை மாலை மரியாதைகளுடன் வரவேற்பதாகவும், கதை கட்டுகிறார்கள். உண்மையை உணராத அப்பாவிகள் இந்தியாவை நோக்கி அங்கலாய்க்கிறார்கள்.

இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டபோது 'தோட்டக் காட்டான்' என்று பட்டம் சூட்டப்பட்டதுபோல் இலங்கையிலிருந்து இந்தியாவுக்குப் போனவுடன் 'அகதிகள்' 'சிலோன் காரங்க' போன்ற ஏளனப்பட்டங்களை தாங்க வேண்டியதாகிறது. தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகம், மத்திய பிரதேசம் போன்ற இடங்களில் முதலில் குடியேற்றப் படுகிறோம். தேயிலை தோட்டங்களிலும், நூற்பு நிலையங்களிலும், சில

(தொடர்ச்சி 14-ம் பக்கம்)

www.tamilarangam.net



# யாழ்ப்பாணத் தொல்குடிகள்

**1980 இன் இறுதியில் ஒரு மேலாய்வின் பொருட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து வரலாற்றுத்துறை மாணவர் குழுவுடன் சென்ற விரிவுரையாளர் திரு. பொ. ரகுபதி அவர்கள் கண்டுபிடித்த ஆனைக்கோட்டை தொல்லியல் தலம் பின்னர் வரலாற்றுத் துறையினரால் அகழ்ந்து ஆராயப்பட்டபோது பல முக்கியமான தகவல்கள் கிடைத்தன. அவற்றுள் ஒன்று சவ அடக்கத்தில் கிடைத்த எழுத்துப் பொறித்த முத்திரை. இதுபற்றி 1981 ஏப்ரல் 26 இல் பேராசிரியர் கா. இந்திரபாலா அவர்கள் சென்னையில் வெளியாகிய ஹிந்துப் பத்திரிகையில் வெளியிட்ட சில தகவல்களை இங்கு சுருக்கித் தருகின்றோம் யாழ்ப்பாணத்தின் தொல்குடிகள் பற்றிய ஆராய்ச்சிக்கு இது மிகவும பயனுள்ளதாகும்**

1980 டிசம்பர் மாதத்தின் முதல் இருவாரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஓர் ஆய்வுக்குழு யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக வெளிப்பட்ட ஒரு பெருங் கற்காலத் தலத்தை ஆனைக்கோட்டையில் கண்டுபிடித்தது. அத் தலத்தில் அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்ட பொருள்களுள் ஒன்று கிறிஸ்து காலத்திற்கு முற்பட்ட, இரண்டு எழுத்து வரிகளைக்கொண்ட ஒரு லோக முத்திரையாகும்.

ஆனைக்கோட்டை முத்திரையின் கண்டுபிடிப்பு திரு. யஸ்தானின் கருத்தை ஆதரிக்க உதவுகின்றது. சிந்துவெளி முத்திரைகளிற் போல ஒரு வரியில் நிரையாக இக் குறிகள் சில இம் முத்திரையில் எழுதப்பட்டுள்ளது மட்டுமன்றி, இரண்டாவது வரியில், அதன் வாசகத்தை இன்னொரு எழுத்தில் தருவதுபோலப் பிராமி எழுத்துக்கள் இருப்பது முக்கியமான விஷயமாகும்.

## முத்திரையின் வாசகங்களும் குறியும்

ஆனைக்கோட்டை முத்திரைச் சாசனத்தின் வாசகம் மேலும் முக்கியமான ஒன்றாக அமைகின்றது. பிராமி எழுத்து வாசகத்தை ''கோவேந்தன்' அல்லது ''கோவேந்த'' என வாசிக்கலாம். முதலாவது வரியிலுள்ள குறிகள் மூன்றும் இதே வாசகத்தையே குறித்து நிற்கின்றன என்று கூறத்தக்க வகையில் அமைந்துள்ளன. முதலாவது குறி வயிரவர் சூலம் போன்றது. இரண்டாவதும் அவ்வாறே அமைந்துள்ளது. மூன்றாவது பிறை போன்ற வடிவிலுள்ளது. மன்னனைக்குறிக்கும் ஒரு சின்னமாக முதலாவது குறி இருந்தது என்று கொள்ளக்கூடிய வகையில், கோ என்பதையும் வேந்த என்பதையும் (ஒரே பொருட் சொற்கள்) குறிப்பதற்கு ஒரே குறியை இருமுறை பயன்படுத்தியுள்ளனர். மூன்றாவது குறி ஆண்பால் விகுதியாகிய ''அன்'' என்பதைக் குறிக்கலாம். இந்த வாசகத்தின்படி பழைய திராவிடமொழி ஒன்றில் முத்திரை பொறிக்கப்பட்டுள்ளது, என்று கொள்ள இடண்டு.

# ஆனைக்கோட்டை

# அகழ்வாய்வு தரும் சான்று

## முத்திரையின் முக்கியத்துவம்:

இம் முத்திரை ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த கண்டுபிடிப்பாகும். தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் பெருங்கற்காலத் தலங்களிற் கிடைத்த மட்பாண்டங்களிலே பொறிக்கப்பட்டுள்ள குறிகளை விளக்கிக்கொள்வதற்கு மட்டுமன்றி, அப்பால் வடக்கே சிந்துவெளிவரை கிடைத்துள்ள சிந்துவெளி எழுத்துக்களின் ஆராய்ச்சிக்கும் பயன்படும் வகையில் ஆனைக்கோட்டை முத்திரையின் எழுத்துக்கள் அமைகின்றன எனலாம்.

இம் முத்திரையிலுள்ள இரண்டு வரிகள் வேறுவேறு எழுத்து முறைகளில் எழுதப்பட்டுள்ளன. முதலாவது வரி பெருங்கற்கால மட்பாண்டங்களிலும் சிந்துவெளி எழுத்துக்களிலும் காணப்படும் குறிகள் மூன்றினைக் கொண்டதாய் உள்ளது. இரண்டாவது வரி நடீக்கு நன்கு பரிச்சயமான கி. மு. மூன்றும் அல்லது இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராமி எழுத்தில் உள்ளது. இதுவே முதல் தடவையாக இந்த இரண்டு எழுத்து வகைகளும் ஒரேஇடத்தில் ஒரே சாசனத்தில் பொறிக்கப்பட்டுக் கிடைத்துள்ளமைபாகும் இதனாலேதான் ஆனைக்கோட்டை முத்திரைக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு.

## திரு. யஸ்தானின் கருத்து

இந்தியாவின் முன்னாள் தொல்பொருளியல் இயக்குனர் நாயகம் திரு. பி. பி. லால் அவர்க்ள் பெருங்கற்கால மட்பாண்டங்களில் பொறிக்கப்பட்டுள்ள குறிகளையும் சிந்துவெளி எழுத்துக்களையும் ஒப்பிட்டு அவற்றுக்கிடையே உள்ள தொடர்பினைக் காட்டியுள்ளார். மட்பாண்டங்களில் அவர் கண்ட 61 குறிகளுள் 47 குறிகள் சிந்துவெளி எழுத்துக்களாகவும் காணப்படுகின்றன எனக் கூறினர். ஆனாலும், மட்பாண்டத்திலுள்ள இக் குறிகளுக்கு எந்தவித ஒலிப்பெறுமானமும் இல்லை என்று தெரிவித்தார். ஆனால், 64 ஆண்டுகளுக்கு முன் இக் குறிகளை ஆராந்த திரு. ஜி யஸ்தானி என்ற அறிஞர் இவற்றை எழுத்துக்களாக வாசிக்கலாம் என்ற அபிப்பிராயத்தைத் தெரிவித்திருந்தார். அவருக்குப் பின் திரு. லால் மட்டுமன்றிப் பிற அறிஞர்களும் இவற்றை எழுத்துக்களாகக் கருதலாம் என்பதை ஆதரிக்கவில்லை

சிந்துவெளி எழுத்துக்களே' சிந்துவெளி நாகரீககாலத்தின் பின், பெருங்கற்காலப் பண்பாட்டின் காலம் வரை, சிந்து வெளியிலிருந்து இலங்கைவரை மட்பாண்டங்களிலும் வேறு பொருட்களிலும் எழுத்துக்களாக எழுதப்பட்டன என்று கூற இப்பொழுது இடமுண்டு. சித்திர எழுத்தை ஒத்த இந்த எழுத்தை கி. மு. மூன்றும் நூற்றாண்டளவில் கைவிடத் தொடங்கி இலகுவான, ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என்ற முறையில் அமைந்த பிராமி எழுத்தைத் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் மக்கள் பயன்படுத்தத் தொடங்கினர் என்று கூற முடிகின்றது.

கோவேந்தன் என்ற சொல்லும் கோவேந்து என்ற சொல்லும் பழந்தமிழ் இலக்கியத்திலே காணப்படுகின்றன. பின் திராவிட மொழிகளிலும் வேந்த என்ற சொல்லுடன் தொடர்புடைய சொற்கள் மன்னனை அல்லது கடவுளைக் குறிப்பனவாய் வருகின்றன. பழந்தமிழ் பிராமிச் சாசனங்களில் ஆண்பால் விகுதி 'அன்' வேறாக எழுதப்படுவதையும் காணலாம்.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த ஆனைக்கோட்டை முத்திரை புதிய வினாக்கள் பலவற்றை எழுப்பி ஆராய்ச்சியாளருக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாய் அமைகின்றது.

---

## நோக்கும் போக்கும்!

1. கண்டனன் தர்க்கிகத்தை! கற்றனன்! கருத்தையெல்லாம்
உண்டனன்! பலபேருக்கும் உரைத்தனன் சுவையைப்பற்றி!
கொண்டனன் சிலபேர்! நல்ல கொள்கைதான் என்றெல்லோர்க்கும்
வெண்டனர்! மேலும்மேலும் விரும்பினர்! விவாதிக்கின்றார்!

2. மாக்சீய லெனினின் போக்கும் மகத்தான தொழிலின் நோக்கும்
தேக்காத பொருளின் சீரும் தேவையின் உழைப்பும் மானம்
போக்காத பொதுவாம் வாழ்வும் புரட்சியின் விளைவும் யாவும்
தூக்கிடும் தர்க்கிகத்தைத் தொடுவதும் சுவைதான் கண்டீர்!

3. எல்லார்க்கும் மல்லாம் என்ற இலட்சிய கீதத்தோடும்
நல்லதோர் ஈழம் காணும் நம்பிக்கை ஒளியினோடும்
இல்லாமை போக்கவல்ல இணையிலாத் தொழில்களோடும்
கல்லாமை நீக்கவந்த கருத்துவாழ் ஏடு வாழ்க!

4. ஏடுகள் பலவாம்! ஆனல் இனத்தினை மொழியை நாட்டை
நாடுதல் சிலவே! மற்றும் நம்மினம் சிதைப்போர் தம்மைப்
பாடிடும் வகையுமுண்டாம்! பாட்டாளி வர்க்கந் தன்னைத்
தேடிடும் ஏட்டுக்குள்ளே சிறந்தது தர்க்கீகந்தான்!

— "தாமரைத் தீவான்"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# இஸ்லாமிய தமிழ் பேசும் மக்களின் தேசிய இன ஒருமைப்பாடு

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் மொழி ரீதியில் அடையாளம் காணப்பட்டு தேசிய இன அடிப்படையில், சிங்கள பெருந் தேசிய இனவாதிகளால் ஒடுக்கு முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். இந்நிலை மேலும் மேலும் வலுப்பெற்று வருகின்றது வீழ்ச்சியடைந்து வரும் பொருளாதாரக் கொள்கையினுல் உருவாக்கப்படும் பொருளாதார நெருக்கடிகள், இதனுல் எழக்கூடிய எழுச்சிகளை மழுங்கடித்து மக்களின் எண்ண அபிலாசைகளை திசை திருப்பி தமது வர்க்க நிலையை மேலும் பேணிக்காக்க சிங்களப் பேரின வாத அரசும் அவர்களது அடிவருடிகளும் முயற்சித்து வருகின்றனர். இதனுல் தமிழ் பேசும் மக்களின் தேசிய இன ஒருமைப்பாடு நாளுக்கு நாள் வலுப்பெற்று வருகின்றது. இந்நிலையில் மதத்தால் மட்டும் வேறுபட்டு, ஏனைய அம்சங்களுடன் ஒருமைப்பட்டு, தமிழ் பேசும் தேசிய இனத்தின் அங்கமாக இருக்கும் இஸ்லாமிய தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் என்ன? என்ற வினு எழுப்புவது இயல்பே ஆனுல் இந்த இயல்பான நிலையில் அம்மக்களின்

## இனப்பிரச்சனையின் அடிப்படைகள்:

இலங்கையில் இனப் பிரச்சனையின் அடிப்படையான நிலையை அவதானிக்கும் பொழுது பெருந் தேசிய இனத்தைச் சேர்ந்த ஆளும் வர்க்கத்தினர் அதாவது சிங்கள பௌத்த பேரின வாதிகள் சுரண்டலில் ஏக போகம் செலுத்த முயற்சிப்பதேயாகும். உழைக்கும் சிங்கள மக்களைச் சுரண்டும் அதே வேளையில் தமிழ் பேசும் மக்களின் நலன்களையும் அவர்கள் ஒடுக்குகின்றனர். இன்னுமொரு வகையில் செல்லுவதானுல் தங்களால் மோசமாகச் சுரண்டப்படும் சிங்கள வெகு ஜனங்களைச் சமாளிப்பதற்காக தமிழ் மக்களின் நலன்களைப் பறித்து அதில் ஒரு பகுதியை சிங்கள மக்களின் முன் வீசுகின்றனர். தங்களின் பிரதான ஆபத்துக்குரியயவர்கள் உழைக்கும் சிங்கள மக்களே என்பதை ஆளும் வர்க்கத்தினர் அறிவர். அதனுலேயே அவர்களின் கவனத்தை திசை திருப்பும் செயல் முறையாக இனக் குரோதத்தையும், இன ஒடுக்கு முறையையும் கட்டவிழ்த்து விடுகின்றனர். இது இன வெறியை பெரும்பான்மை சிங்கள மக்களின் இரத்தத்தில் கலந்து விடுகிறது. இனங்களுக்கிடையிலான முரண்பாடாகவும் மோதலாகவும் இது பரிணமித்துள்ளது. இன்றுதேசிய இனப்பிரச்சனையாக உருவெடுத்துள்ளது.

''யாராண்டால் என்ன, ஆள்வோர் திருப்
பெயரைப்
பாடி நான் என் பங்கைப் பெறுகிறேன்''

என்ற நிலையிலுள்ளனர். இத்தகைய மேல்வர்க்கப் பிரமுகர்களால் இஸ்லாமிய தமிழ்பேசும் மக்களுக்கு விமோசனம் கிடைக்கும் என்று எதிர் பார்ப்பதற்கு இடமில்லை. இத் தலைவர்கள் பாராளுமன்றக் கதிரையைப் பிடித்துக்கொண்டு எந்த அரசினருக்காவது சார்பாக இருந்து தமது நலனைப்பேணிக் கொண்டு, அரசினரின் இனவாத நடவடிக்கைகளுக்கு மௌனமாக இருக்கின்றனர். அத்துடன் சிங்கள பேரின்வாத அரசின் சூழ்ச்சிகளுக்கு இரையாகி இஸ்லாமிய தமிழ் பேசும் மக்கள் ஒரு தனித்துவமானவர்கள், அவர்கள் தனித்துவ இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணத்தை மக்கள் மத்தியில் ஊட்டி மக்களைப் பிளவுபடுத்தியே வருகின்றனர்.

அப்படியாக, இஸ்லாமிய மதத்தைப் பின் பற்றும் மக்கள் உலகில் மொழியால், பிரதேசத்தால் வேறுபட்டிருந்தாலும் ''முஸ்லிம்'' ஒரு இனத்தவர் என்று சிலர் கருதுவதுபோல் எடுத்துக் கொண்டால், அண்டைநாடான தமிழ்நாட்டில் எப்படி மதத்தால் வேறுபட்டிருந்தாலும் தமிழர்கள் என்ற ஒருமைப்பாட்டுடன் வாழ்ந்து வருகின்றனர். மத்திய கிழக்கு நாடுகளில் வாழும் மக்கள் மதத்தால் வேறுபட்டிருந்தாலும் மொழியால், பிரதேசத்தால் ஒன்றுபட்டுத் தேசிய இன ரீதியிலும், தேசிய ரீதியிலும் ஒரு

உண்மையான எண்ண அபிலாசைகளைத்திசை திருப்ப சிலர் முயலும் போது அவற்றைச் சுட்டிக் காட்ட வேண்டியது மட்டுமல்ல அம்மக்கள் அனுபவித்து வரும் இன்னல்களை வெளிப்படையாக ஆராய வேண்டியதும் அவசியம். அப்போது தான் அவர்களின் எதிர்கால நலனை மட்டுமல்ல அவர்கள் சார்ந்த தமிழ் பேசும் சமுதாயத்தின் நலனையும் எஃகமுடியும்.

## பொதுத் தன்மைகள் :

தமிழ் பேசும் மக்களின் தேசிய இனத் தன்மைக் கான பொதுவான அம்சங்களை நோக்கும் போது, முக்கிய அம்சங்காளான, பொதுமொழி, பொதுவான நிலப்பரப்பு, பொதுவான பொருளாதார வாழ்வு என்பனவற்றைக் காணலாம். இவை மட்டுமல்ல, பொதுவான தேசியக்கலைப் பிரதிபலிப்பும் பொதுவான கலாச்சார ஒருமைப்பாடும் இருப்பதையும் காணலாம். ஆனுல் இத்தேசிய இனத்தினுள்சைவ, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்களைப் பின்பற்றும் மக்களிடையே

— ஜுனைப் ருசிக் —

மதரீதியான சில கலாச்சார வேறுபாடுகள் இருப்பதை கருத்தில் கொள்ளவேண்டும். தமிழ் பேசும் தேசிய இனத்திலுள்ள இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றும் மக்கள் மதக் கோட்பாடுகளின் இறுக்கப்பிடியினுல் மற்றைய மதங்களைப் பின் பற்றும் மக்களுடன் ஒரு இறுக்கமான பிணைப்புடன் இணையாது இருந்து வந்துள்ளனர். இதற்கு மூலகாரணர்களாக, இலங்கையிலுள்ள அனைத்து முதலாளித்துவ எண்ணப்பாடுடையவர்களும் கர்த்தாக்காளாக இருந்து வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய அரசியல் சூழ்நிலையில் இதன் பிரதிபலிப்புகளைக் காணக்கூடியாதாக உள்ளது.

இலங்கையில் இஸ்லாமியமதத்தைப் பின் பற்றும் மக்கள் தனித்துவம் பெற்றவர்கள் என்ற உணர்வு 19-ம் நூற்றுண்டில் பிற்பகுதியிலிருந்து படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இன்றுள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவமாக இருப்பினும், கல்வி வெள்ளையறிக்கையாக இருப்பினும் அது தமிழ் பேசும் தேசிய இனத்தின் ஒரு கூறுன இஸ்லாமிய மக்களைப்பிரித்து அவர்களுக்கு மேலும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தி வருகிறது.

## மொழிவாரி இன அடிப்படையில் இனங்காணல்

இஸ்லாமிய மக்களும் தமிழ் பேசும் தேசிய இனத்தவர் வகையில் சுரண்டலுக்கும் இன ஒதுக்கலுக்கும் உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். தங்கள் தாய் மொழியாகிய தமிழில் கருமமாற்றுவதில், ஏனைய தாய்மொழியாகிய தமிழைக் கொண்டோர் அனுபவித்துவரும் இன்னல்களைப் போல் உரிமைகளற்று புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர் இது மட்டுமல்ல, புத்தளத்திலும், கொம்பனித் தெருவிலும் உள்ள பள்ளி வாசல்களில் பொலிசாரின் அத்துமீறல்களும், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும், படு கொலைகளும் நடைபெற்றுள்ளன. இலங்கையில் வெவ்வேறு மாவட்டங்களில் இஸ்லாமியருக்கு எதிரான கலவரங்கள் கடந்த காலங்களில் திட்டமிட்டு நடத்தபட்டுள்ளன. இவை மட்டுமல்ல இஸ்லாமிய தமிழ் பேசும் மக்கள் பெருந் தொகையாக வாழ்ந்த அம்பாறை மாவட்டத்தில் சிங்கள குடியேற்றத்திட்ட விஸ்தரிப்பு மூலம் இன்று சிங்களவர் வாழும் பிரதேசமாக மாற்றப்பட்டுள்ளது. அண்மையில் தீகவாபியை புனிதப்பிரதேமாக பிரகடனப்படுத்தியதன் மூலம் ஆண்டாண்டு காலமாக இஸ்லாமிய மக்கள் அனுபவித்து வந்த நூற்றுக்கணக்கான ஏக்கர், நெற்காணிகள் பறிக்கப்பட்டுள்ளன. கல்முனை, அக்கரைப்பற்று, பொத்துவில்ஆகிய பகுதிகளில் சிங்களப் பேரினவாத விஸ்தரிப்பும் அதிகரிக்கப்பட்டு வருகின்றது. இவை போலவே திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியாவை அண்டியுள்ள வானுறு குடியேற்றப்பகுதி இன்று புனிதநகர் திட்டத்திற்கு இரையாகி வருகிறது. பெருங்காடுகளாக இருந்த பகுதிகளைப் பொன் கொழிக்கும் பூமிகளாகப் பண்படுத்தி 15 வருட காலமாகத் தமது அன்றுடவாழ்க்கையை ஓட்ட வேளாண்மை செய்து வந்தவர்கள். இஸ்லாமிய தமிழ் பேசும் மக்கள் ஆகும். வெகு அண்மையில் பகுதிக்குச் சென்ற பௌத்த மதகுருவும், அப் அப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர் லீலாரட்னுவும் பொலிசாரும் அப்பகுதி புனிதநகருக்குரியது உடனே வெளியேறுங்கள் எனப் பணித்தனர். இதனுல் அங்குவாழ்ந்த இஸ்லாமிய தமிழ்ப் பேசும் மக்கள் செய்வதறியாது திகைத்துநிற்கின்றனர்.

## எதிர்காலம் என்ன?

இத்தகைய அடக்கு முறைகளுக்கெதிராக இஸ்லாமிய தமிழ் மக்களின் தலைவர்கள் எனப் படும் அரசியல்வாதிகளால் எதுவும் செய்ய முடிவதில்லை.

மைப்பட்டுள்ளனரே. பாகிஸ்தான் மேற்காகவும், கிழக்காகவும் பிரிவுற மதம் காரணமாக இருக்கவில்லையே. எனவே மக்களின் விமோசனத்தைக் கருத்திற் கொள்வோர் மதத்தைப் பின்னணியாக வைத்துப் பார்ப்போமாகில் ஈரானின் இன்றைய நிலையைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இலங்கையைப் பொறுத்தவரை மொத்தத்தில் மொழியாலோ, மதத்தாலோ ஒன்றுபட்ட மக்களில்லை. இங்கு இரண்டு மொழிகளைப் பேசுகின்ற தேசிய இனங்களுக்கிடையிலேயான முரண்பாட்டையே காண்கின்ருேம். எனவே மொழிவாரி இனங்களுக்கிடையேயான முரண்பாட்டினுலேயே தேசிய இனப் பிரச்சனை வலுவடைந்துள்ளது. சிங்கள பேரின வாத அரசுகள் தமது கைங்கரியங்களில் ஏனைய மக்களை மொழிரீதியில் இனங்கண்டு சகல தமிழ் பேசும் மக்களையும் அடக்கி ஒடுக்கி வருகின்றது.

இத்தகைய ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு முதலில் கிளர்ந்தெழுந்த தமிழ் பேசும் மக்களின் பூர்சுவாக்களும், நடுத்தர வர்க்கத்தினரும் தமது நலன்களைக் கருத்திற் கொண்டார்களே தவிர அடிப்படையான தமிழ் பேசும் பாமர மக்களின் பிரச்சனைகளைக் கருத்திற் கொண்டு தமது கோரிக்கைகளையும், கொள்கைகளையும் முன்வைக்கவில்லை. இந்த முரண்பாட்டை தமிழர் விடுதலைக் கூட்டணியில் அரசியல் யாப்பில் காணலாம். ஒரு சோசலிச சமுதாயத்தை விரும்புவோரே தாங்கள் என்று கூறும் அதே வேளையில் இஸ்லாமிய மக்கள் தமது உரிமைகளுக்காகச் சுயநிர்ணய அடிப்படையில் பிரிந்து செல்லலாம் என்றும் தெரிவிக்கின்றனர். இது சாத்தியமானதொன்ரு? இதனுலேயே இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றும் தமிழ்பேசும் பாட்டாளி வர்க்கமும், அதே போல் மலையக தமிழ்பேசும் பாட்டாளி வர்க்கமும் இவர்களது கோரிக்கைகளிலும், கொள்கையிலும் ஒரு அச்சம் கொண்டுள்ளனர். இதுவே அவர்களது ''தமிழீழம்'' என்ற கோரிக்கையினுள் உள்ள உள் முரண்பாடு எனத் திரும்பத் திரும்ப அடித்துக் கூறுகின்ருேம்.

எனவே இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் பெரும்பகுதியினராகிய தொழிலாள பாட்டாளி வர்க்கத்தின் முழு விமோசனத்தையும் கருத்திற் கொண்டு அவர்களை ஒருங்கிணைத்துச், சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கும் ஈழக்கோரிக்கையை முன்வைத்துப் போராடுவதோடு, அந்த ஈழம் என்ற பகுதியில் வாழும் மக்கள் ஈழவர்கள் என்ற தேசியப் பிணைப்புடன் அவர்களது சமூக, பொருளாதார விமோசனத்திற்கும் போராடும்நிலையை உருவாக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மலையகமக்கள் தனித் தேசிய இனமா?

கடந்தகால வரலாற்றின் முன்
நிகழ்வுகளால் இலங்கையில்
பௌத்த சிங்கள பெருந்தேசிய
வாதத்தின் அடக்குமுறைக்குத்
தமிழ்பேசும் அனைத்து மக்க
ளும் உள்ளாக்கப்பட்டு வருவ
தை யாரும் மறுக்கமுடியாது.
இன்று அதன்போக்கும் வளர்ச்
சியும் கூர்மையடைந்து கொண்
டு வருவதையும், இதனால்
ஒட்டு மொத்தமாக எழக்கூடிய
வர்க்கப் போராட்டம் மழுங்
கடிக்கப்பட்டு வருவதையும்
காணக்கூடியதாகவுள்ளது. இத்
தகைய சூழ்நிலையில் இலங்கை
யின் பாட்டாளி வர்க்கத்தின்
முதுகெலும்பான மலையகத்
தமிழ் தோட்டத் தொழிலா
ளர்கள் வர்க்க ரீதியாகவும்,
னரீதியாகவும் அடக்கி ஒடுக்
கப்பட்டு வரும்சூழ்நிலை ல்,
'' மலையக மக்கள் ஒரு தனித்
தேசிய இனம் '' என்ற எண்
ணக்கரு இன்று பரவலாகச்
சர்ச்சைக் குள்ளாக்கப்பட்டு
வருகின்றது. மலையகத்தில்
வளர்ந்துவரும் முதலாளித்துவ
அரசின் அடிவருடி ஸ்தாபனங்
களும், இடதுசாரிக் குழுக்களும்
யக மக்களும் ஒரு தனித்துவ
மான இனமாக வளர்ச்சியடை
வதற்கு உரிய சாத்தியப்பாடு
கள் குறுகியும், அதேவேளை
தமிழ்பேசும் இனத்துடன் தன்
னை அடையாளம் காட்டிக்
கொள்வதற்கான சாத்தியப்
பாடுகள் அதிகமாகவும் காணப்
பட்டமையால் இன்று தமிழ்
பேசும் தேசிய இனத்தின் ஒரு
அங்கமாகவே மலையக மக்கள்
ஒன்றித்துள்ளனர்.

இற்றைக்கு 150 வருடங்க
ளுக்குமேலாக இம்மலையகதமிழ்
பேசும் தோட்டத் தொழிலா
ளர்கள் காடுகளை அழித்து,
மேடு பள்ளங்களை நிரவி இலங்
கையின் மூலப் பொருள்வளத்
தை உற்பத்திசெய்து தேசிய
வருமானத்தை ஈட்டிக்கொடுத்
து வருகிறார்கள். தமது உதி
ரத்தைச் சிந்தி உடலுழைப்
பால் பல இன்னல்கள் மத்தி
யில் சிறைப்பறவைகளாய் அம்
மண்ணிலேயே உழைத்து
உழைத்து ஏனைய மக்களின்
வளர்ச்சியில் பங்கெடுத்துக்
கொள்கிறார்களே. இவர்கள்
இம்மண்ணுக்கு உரித்துடைய
வர்கள் இல்லையா?
களிலிருந்து விடுபட எழுச்சி
கொள்ளும் போக்கை மழுங்
கடிக்கச் செய்யும் தந்திரோ
பாயமாக இதைக் கையாண்
டார்கள். இதுபோலவே சிங்
கள மக்கள் மத்தியிலும் நிர்
வாகப் பகுதியினராக இவர்
களை நியமித்ததோடு, அவர்
கள் மத்தியில் புத்தி ஜீவிகளா
கவும் புகுத்தினார்கள்.

### தேசிய இன ஒருமைப்பாடு

மலையக மக்களின் மொழி,
கலாச்சாரம் என்பன இலங்
கைவாழ் ஏனைய தமிழ் பேசும்
மக்களிலிருந்து பிரிக்க முடியா
ததாகவேயுள்ளது. முதலாளித்
துவ அமைப்புள்ள ஓரே தே
சிய இனத்தினுள் வர்க்கவேறு
பாடுகளும், மத வேறுபாடுக
ளும், பொருளாதார உற்பத்
தி வேறுபாடுகளும் நிலவுவது
இயல்பு. எனவே வர்க்க ரீதி
யாக வேறுபடுகின்ற கலாச்
சார வித்தியாசங்களைத் தனித்
தேசிய இனத்துக்கான அம்சம்
எனச் சிலர் கருதுகின்றனர்.
இதுபோலவே மதரீதியான

### தேசிய இன ஒடுக்கு முறை

இலங்கையில் இனவாத வித்
துக்கள் காலனியாதிக்கங்களுக்
குமுன்பே விதைக்கப்பட்டிருந்
தாலும், அதன் வளர்ச்சியை
பிரித்தானிய காலனியாதிக்க
காலத்திலும், அதன் சுயரூப
வெளிப்பாடுகளைப் பிரித்தா
னிய ஆதிக்கத்தின் பின்பும்
காணக்கூடியதாக உள்ளது.
இலங்கையில் தேசியவாதம்
என்பது அடிப்படையில்
பௌத்த சிங்கள தேசிய வாத
மாகச் சிங்கள மக்கள் மத்தியி
லிருந்த சிங்கள பேரினவாதிக
ளால் வளர்த்தெடுக்கப் பட்
டது. இதனால் பிரித்தானிய
ஆதிக்கத்தின்பின்பு ஆட்சிப்
பீடம் ஏறிய பௌத்த சிங்கள
பேரினவாதிகள் அதிகாரத்தின்
மூலம் இன ஒடுக்குமுறையில்
இறங்கினார்கள். இதன் முதல்
கட்டமாகவே 1948-ம் ஆண்
டில் பிரஜாவுரிமைச் சட்டம்
கொண்டுவரப்பட்டு மலையக
தமிழ்த் தொழிலாளர்கள் நாடு
கடத்தும் படலம் ஆரம்பிக்கப்
கையில் உழைப்பதைத் தவிர
வேறெதுவும் கண்டிராத, எந்
தவித அடிப்படை வசதிகளைத்
தானும் பெற்றுவராத தோட்
டத் தொழிலாளர்கள் தலை
முறை தலைமுறையாக இம்மண்
ணிலேயே மடிகட்டி நிற்கும்
போது அவர்களை 'இந்திய வம்
சா வழியினர்,' 'விஸ்தரிப்பு
வாதிகள்' என முத்திரைகுத்தி
விரட்டியடிக்கக்கங்கணம்கட்டி
நிற்கும் பிற்போக்குத் தலைவர்
களும், வழிகாட்டிகளும், வியா
பார நோக்கிற்காக இங்குவந்து
தலைவர்கள் எனத் தம்மைப்
பறைசாற்றி இலங்கை முதலா
ளித்துவ பிற்போக்கு வாதிக
ளுடன் கைகோர்த்து, தொழி
லாள வர்க்கத்தைச் சுரண்டி
செல்வத்தைச் சுருட்டிச் செல்
கிறார்களே அவர்கள் இந்திய
வம்சாவழியினரா? அல்லது
இம்மண்ணிலே உழைத்து
உழைத்து இந்நாட்டிற்கும்,
மக்களுக்கும் இறைக்கிறார்களே
அவர்கள் இந்திய வம்சாவழி
யினரா? என்பதை உணர
வேண்டும்.

இதேவேளை மலையகப் பகுதி
களில் ''மலையக மக்கள் தனித்

## தமிழ் பேசும் தேசிய இனத்தின் முதுகெலும்பான பாட்டாளி வர்க்கமே!

இத்தகைய கோஷங்களை முன்
வைத்து அம்மக்களை எந்த
வொரு போராட்டத்திற்கும்
முன்னெடுக்க விடாமல் அவர்
களைத் தனிமைப்படுத்துவ
தோடு, பலவீனப்படுத்தும் நட
வடிக்கைகளிலும் ஈடுபட்டுவரு
கின்றன. இந்நிலையில் அம்மக்
களின் வரலாற்றுப் பின்னணி
யையும், அவர்கள் எந்தமுறை
யில் அடக்குமுறைக்குள்ளாக்
கப்பட்டு வருகிறார்கள் என்ப
தையும் மானசீகமாகச் சிந்திப்
பவர்கள் அம்மக்கள் தனித்
தேசியஇனமா? அல்லது தமிழ்
பேசும் தேசிய இனத்தின் முது
கெலும்பான பாட்டாளி வர்க்
கமா? என்பது புலனாகும்.

### வரலாற்றின்முன் நிகழ்வுகள்

தென் இந்தியாவிலிருந்து
இலங்கைக்குவந்து நிரந்தர
குடியிருப்புக்களை உருவாக்கிய
குடியேற்ற அலைகள் இற்றைக்
கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு
முன்பிருந்தே நடைபெற்று வந்
துள்ளன. இவ்வாறு குடியே
றிய மக்கள் அதன் சமூக
அமைப்பின் வளர்ச்சியில்,
மதம், பொருளாதாரம், அர
சியல் தன்மைகளின் செல்வாக்
கால் மொழிரீதியாக வேறு
பட்டதோடு, கலாச்சார உரு
வாக்கமும் மாற்றமடைந்து
இரு வேறு இனங்களாக
வளர்ச்சியடைந்துள்ளன. இத்
தகைய நிகழ்வுகளின் இறுதி
யாக பிரித்தானிய காலனி
யாதிக்கத்தினால் தமிழ் நாட்டி
லிருந்து தமிழ்பேசும் மக்கள்
கூலித் தொழிலாளர்களாகக்
கொண்டுவரப்பட்டுகுடியமர்த்
தப்பட்டார்கள். ஏற்கனவே
கூறப்பட்டதுபோல இலங்கை
யின் பிரதான இரு இனங்க
ளின் உருவாக்கம்போல மலை

### பிரித்தானிய தந்திரோபாயம்

பிரித்தானிய காலனியாதிக்
கத்தின்போது இலங்கையில்
அதுவும் கூடுதலாக சிங்கள
மக்கள் மத்தியில் நிலப்பிரபுத்
துவ அமைப்புமுறை இறுக்க
மாக இருந்தது. இதனால்
யாழ்ப்பாணப் பகுதிகளில்
வாழ்ந்த தமிழ்பேசும் மக்க
ளின் புத்திஜீவன்களைத் தமது
நிர்வாக பரவலாக்கத்திற்கு
நியமித்தார்கள் பிரித்தானி
யர். அத்துடன் யாழ்ப்பாணப்
பகுதிகளில் பாடசாலைகளைக்
கட்டுவித்து, சிலவசதிகளை ஏற்
படுத்தி அம்மக்களை மேலும்
மேலும் நடுத்தர வர்க்கத்தின
ராக உயர்த்தி, வேலைவாய்ப்பு
களை வழங்கித் தமது பிரதான
நிர்வாகப் பொறுப்புக்களில்
அமர்த்தினார்கள். மலையகப்
பகுதிகளில் பொருளாதார
வளத்தைப் பெருக்கும் கூலித்
தொழிலாளர்களையும் நிர்வ
கிக்க, அதே மொழிபேசும்
யாழ்ப்பாணத் தவரை நிய
மித்துத் தமது இலகுவான
சுரண்டலுக்கு வழிவகுத்துக்
கொண்டார்கள். தொழிலாள
வர்க்கம், சுரண்டலடக்குமுறை
சில கலாச்சார வித்தியாசங்க
ளும் இருக்கும்.

மொழியால் ஒன்றுபட்டு,
பொதுவான கலாச்சாரத்தால்
ஒன்றுபட்டு, குறிப்பிட்ட பிர
தேசங்களைத் தன்னகத்தே
கொண்டு வடக்கு, கிழக்கு,
மலையக பகுதிகளில் வாழும்
தமிழ்பேசும் மக்கள் ஓரே தே
சியஇன ஒருமைப்பாடு நிறைந்
தவர்களாகவே உள்ளனர்.
இந்தத் தேசிய இனத்தின் முது

★ குறிஞ்சிச் செல்வா ★

கெலும்பான பாட்டாளி வர்க்
கத்தின் கலாச்சாரத்திற்கும்,
வடக்கு – கிழக்கு பகுதிகளில்
வாழும் இதர மக்களின் கலாச்
சாரத்திற்கும் வர்க்கரீதியான
சில வித்தியாசங்கள் இருக்கத்
தான் செய்யும். இது தேசிய
இனத்தின் இயல்பானதொன்
று. இதுபோலவே சைவ,
கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்
களைத் தழுவும் ஓரே தேசிய
இன மக்களிடையே சில மத
ரீதியான கலாச்சார வித்தியா
சமும் இருக்கும். எனவே தமிழ்
பேசும் தேசிய இனத்தின்
சமூக, பொருளாதார, அரசி
யல் மாற்றத்தின் மூலமே இத்
தகைய வேறுபாடுகளை மாற்றி
யமைக்க முடியும்.

பட்டது. இதேவேளையில் இலங்
கையர் என்ற தேசியவாதத்
தில் அக்கறைகொண்டு இயங்
கிய தமிழ்பேசும் தலைவர்கள்
இதன் உட்சூட்சுமத்தை உண
ராமல் தமது வர்க்க எண்ணப்
பாட்டு நிலையில் காலத்திற்குக்
காலம் செயற்படத் தொடங்
கினர். இதனாலேயே சிங்கள
பெருந் தேசிய இனவாதத்தின்
வளர்ச்சிப்போக்கும், அதன்
இன ஒடுக்குமுறை நட
வடிக்கைகளும் வலுப்பெற்று
இன்று தேசிய இன ஒடுக்கு
முறையின் முழு வடிவத்தைப்
பெற்றுள்ளது.

### திரிபுவாதத்தினுள் இனவாதம்

இந்த நிலையில் இடதுசாரிக
ளெனத் தம்மை வரிந்து கட்
டிக்கொண்டு நிற்பவர்களும்,
முதலாளித்துவ சதிக்குள்ளான
இடதுசாரி பிற்போக்குவாதிக
ளும், ஜனநாயக விரும்பிகளும்
மலையக தமிழ்பேசும் மக்களை
'' இந்திய வம்சாவழியினர் ''
எனவும், ''இந்திய விஸ்தரிப்பு
வாதிகள்'' எனவும் வாதம்பேசி
இலங்கையின் பாமர தொழி
லாள வர்க்கத்தின் விமோச
னத்தையும், இன்றைய நிலை
யில் தமிழ்பேசும் பாட்டாளி
வர்க்கத்தின் விமோசனத்திற்
கான முன்னெடுப்பையும்திசை
திருப்ப முட்டுக்கட்டையிட்டு
வருகின்றனர். இவர்களது
வாதத்தினுள் இனவாதமே
முழுக்க முழுக்க விரவி நிற்
கின்றது. இத்தகைய முடக்கு
வாதம் பேசுபவர்கள் மலையக
கூலித் தொழிலாளர்களுக்கும்,
வியாபார நோக்கிற்காக இங்கு
வந்து அடிக்கடி இந்தியா
சென்றுவரும் இந்திய வம்சா
வழியினருக்கும் இடையேயுள்
ளபாரிய வேறுபாட்டைஉணர
மறுக்கின்றனர். தமது வாழ்க்

தேசிய இனம்'' என்றகோஷத்
தை முன்வைப்பவர்கள் தமிழ்
பேசும் தேசியஇன ஒருமைப்
பாட்டையும்சிதறடிக்கும்வகை
யில், '' உங்கள் கஷ்டங்களுக்
கெல்லாம்யாழ்ப்பாணத்தாரே
காரணம்'' என்று பிரச்சாரம்
செய்து பிரிவினையை வளர்க்
கிறார்கள். இத்தகைய கருத்
துக்கள் இன்று மலையக புத்தி
ஜீவிகள் மத்தியில் தோற்றுவிக்
கப்பட்டு, அவர்களது எண்ண
அபிலாசைகளைப் பிரதிபலிப்ப
தாக உருவாக்கப் படுவதால்
புத்திஜீவிகளும் தமது கல்விக்
கும் திறமைக்கும் வேலைவாய்ப்
புக்கள் அளிக்கவேண்டும்என்ற
பின்னணியிலேயே வேரூன்றப்
பட்டு வருகிறது. இத்தகைய
கருத்துக்கள் எந்தவகையிலும்
அடிப்படைக் கல்வியைக்கூடப்
பெறமுடியாமல் சிறு வயதி
லிருந்தே தமது வயிற்றுப்
பிழைப்புக்காகத் தோட்டங்
களில் மாரடிக்கும் தொழிலா
ளர்களுக்கு எந்தவகையிலும்
விமோசனம் அளிப்பதாக
இல்லை. எனவே அடிப்படை
யில் இது மலையகத் தமிழ் முத
லாளிகளையும் — புத்தி ஜீவிகளை
யுமே பிரதிபலித்தது. இத்த
கைய எண்ணக்கருவின் வளர்ச்
சியின் பரிணாமமே ''மலையக
மக்கள் தனித் தேசிய இனம்''
என்ற எண்ணக் கருவாகும்.
மலையக தமிழ்பேசும் மக்களை
உள்ளடக்கிய தமிழ்பேசும்
தேசிய இனத்தின் போராட்ட
முனைப்பும், சிங்கள பெருந்
தேசிய வாதத்தின் இனஒடுக்கு
முறையுமே இவ்வெண்ணக்கரு
வின் முகிழ்பிற்கும், சர்ச்சைக்
கும் உள்ளாவதற்கு அடிப்ப
டைக் காரணமாகும்.

எனவே இலங்கையில் ஒட்டு
மொத்தமான வர்க்கப் போ
ராட்டத்தில் நம்பிக்கையிழந்த

(தொடர்ச்சி 15–ம் பக்கம்)

## விழிப்புணர்வு வேண்டுமடா!

ஏழையாய் பிறந்திட்டேன், இல்லையெனக் இவ்வுலகு
கோழையாய் வாழ்ந்திட்டேன், கொடுமைகள் பல
-கண்டறிந்தேன்
வீதியெல்லாம் உலவிவந்தேன், விடியாத உலகு கண்டேன்
சிங்கார மாடி கண்டேன், சிறந்த நல்ல போதனை
-கண்டேன்
அங்கேயும் அடிமைகண்டேன் அறியாத உலகமடா
தார்மீகம் என்று சொல்லி தரைமட்டம் ஆக்கும் —இந்த
கேடுகெட்ட மரம் ஒன்று கிளைவிட்டு நிற்குதடா
வேரோடு சாய்ப்பதென்றால் விழிப்புணர்வு வேண்டுமடா!

பி. கா. ராசா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஈழவர் இ

# பணிப்பு வேறு; திணிப்பு வேறு.

தார்மீக அடிப்படையில், இயங்கியல் ரீதியில் வெளிப்பாடாகவும் 'தர்க்கீகம்' தன் பணிப்புகள் பொதுமக்களை ஈர்க்கச்செய்யும். இது ஈழவர் தம் இடர் தீர்க்கக்கூடிய பணிப்புகளே அல்லாமல் திணிப்புகள் அல்ல.

திணிப்புகள் தன்னிச்சைக்காரர்களின் தான்தோன்றி நோக்கங்கள். அதற்கும் மாந்த சக்தியை இட்டுச் செல்லக்கூடிய பணிப்புகளுக்கும் அளப்பரிய வேறுபாடு உண்டு, இதனுலேயே 'தர்க்கீகம்' தன்னுடைய தலையாய குறிக்கோளாகத் தத்துவவித்தகன் கார்ல்மாக்ஸின் கோபாடான, ''கருத்து மக்களைப் பற்றிக்கொண்டால் அது சக்தியாய் உருவெடுக்கும்'' என்ற மேற்கோளை முன்வைத்து முனைப்பு அமைத்து முன்னணி அணிவகுத்துத் தர்க்கீக வாதிகளை முன்னெடுத்துச் செல்லும் பணியிலும் பணிப்புகளிலும் ஈடுபட்டுள்ளது.

இந்த அணிவகுப்பில் 'தர்க்கீகம்' தனது பணியைக் கடமையோடு மேற்கொண்டது என்பதைக் கடந்த 11 இதழ்களும் இந்தப் 16 பக்கங்கள்கொண்ட 12–வது இதழும் நெறிசார்ந்து நினைவுறுத்தும், ஆனுல் ஈழவர் தம் அரசியல் சூழ்நிலையில் இந்தப் பணிப்புகள் எவ்வளவில் மேலெடுத்துச் செல்லப்படும் என்பதைத்தான் இன்றைய வினுவாக எழுப்பி விடை காணவேண்டியுள்ளது. இதனுலேயேதான், வழி நடத்துவது வேறு; முன்னெடுத்துச் செல்வது வேறு என்ற கருத்து விளக்கத்தை முன் தந்தோம்.

இல்லாவிட்டால், இலங்கைவாழ் தமிழர்களின் கடந்தகால வரலாற்றில், இலங்கைத் தமிழ் காங்கிரஸ் முதல் இந்திய தொழிலாளர்காங்கிரஸ்வரை இலங்கைவாழ் தமிழர்களின் நிரந்தர விடிவுக்கு வழி நடத்தியும் முன்னெடுத்தும் சென்றிருந்தால் தமிழ்மக்களின் பிரச்சனை தீர்க்கப்பட்டிருக்கும். ஏன்? மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டபோது உதயமான தமிழரசுக்கட்சி கூட, இன்று தமிழர் விடுதலைக்கூட்டணி என்ற உதயசூரியனுபோதும் தமிழர்களுக்கு விடிவு காணவில்லையே. இதனுல்தான் 'தர்க்கீகம்' கடந்த இதழில் புதின ஆய்வுச்செய்தி அறிக்கையாகக் குறிப்பிட்டதுபோல் இவர்கள்கூட, ''தமிழ் ஈழத்திற்கு ஆறுமாத விடுதலை பெற்றுள்ளார்கள்''. இங்குதான் தர்க்கீகவாதிகள் பணிப்புகள் பற்றியும் திணிப்புகள்பற்றியும் மேலும் கேள்வி எழுப்பி விடை காணும் சூழ்நிலைக்காகிருர்கள். 'தமிழ் ஈழ'க் கோரிக்கை மக்களிடத்தில் திணிக்கப்பட்டதொன்று. பணிக்கப்பட்டதல்ல. இருந்தும் தந்தை செல்வநாயகமும். தலைவர் வன்னியசிங்கமும் தமிழர்களின் இடர்ப்பாடுகளை நன்குணர்ந்து தார்மீகரீதியிலும், நிதர்சன அரசியல் ரீதியிலும் சமஷ்டிக்குட்பட்ட தமிழரசு கோரினுர்கள். இது சரிவராமல்போகவே, தமிழர்களுக்கு ஏற்படக்கூடிய இன்னல்களைத் தீர்க்கதரிசனமாக, உள்ளார்ந்த ரீதியில் உணர்ந்து, உரிமையுடன். சாசனரீதியில் சுயநிர்ணயம் கோரினுர், தந்தை. தந்தை ஒரு தார்மீகவாதி மட்டுமல்ல, மான்யத் தலைவரும்கூட, இவரது, தமிழர்களுக்கான சுயநிர்ணயக் கருத்தைத் தர்க்கீகக் கண்கொண்டு அணுகி அவரின் சிந்தனையோட்டத்தைத் தர்க்கீகமாக்கி தமிழர்தம் விடிவிற்கு இயங்கியல்ரீதியில் நிதர்சனமாக பணிப்புகள் செய்யவேண்டிய காலகட்டமும் நிர்ப்பந்தமும் இன்று 'தர்க்கீகத்'திற்கு ஏற்பட்டுள்ளது. இந்தப் பணிப்புகள் என்ன?

இந்தப் பணிப்புகளைக் கூறமுன் ஒரு இதய அபிலாஷையையும் கூற விரும்புகிறோம். பள்ளி வயதில் அருந்துளிபோல் எமது உள்ளத்தில் ஊன்றிவிட்ட கருத்து ஒன்று; ''எம் தாய் தமிழச்சி அவள் ஊட்டியது தமிழ்ப்பால்''; அது ஆக்கமும், ஊக்கமும், வீரமும் பெற்று நிறைந்த பங்களிப்பைச் செய்ய விரும்பினேம். அதைப் பள்ளி வயதில் செவ்வனேசெய்ய முடியாத சூழ்நிலையில் மணிக்கொடியாய் மலரப் பார்த்தது. ஆனுல், அந்தக்கொடி தமிழர்தம் கம்பத்தில் வீசவில்லை. இந்த வீசாத கொடியை தமிழோசையாகப் பார்த்தோம். அதையும் எம்மவர்கள் கேட்காத வண்ணம் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் பி.பி.சி.யின் ''தமிழோசை'' ''பீரங்கிபோல் பிரச்சாரம் செய்தது. ஆனுல் தமிழர்தம் கொடி மணிக்கொடியாகப் பறக்கவேண்டும் என்ற எண்ணம், தமிழோசையாகத் திக்கெட்டும் அதிரவேண்டும் என்ற எண்ணம், இன்று தர்க்கீகத்தில் காணுகிறோம். இந்த இடைக் காலம் கண்ட பரிணுமம், எமது பார்வையில் தர்க்கீக பக்குவ வளர்ச்சியை மட்டுமல்லாமல் எம்மவர் தம் சமுதாயத்தின் எழுச்சியையும் காணக்கூடியதாக இருக்கிறது. எமது சமுதாயத்தில் பொதுவுடமைவாதிகள் தோன்றினுர்கள்; வாழ்ந்திருக்கிருர்கள். ஏன்? வாழுகிருர்கள். அவர்கள் எம்மவர்கள் தம் நல்வாழ்வுக்கு வழிவகுக்கவில்லை. ஆனுல் இன்று தமிழர்தம் சமுதாயத்தில் புதியதோர் சக்தி; பொதுவுடைமைச் சமுதாயத்தை அமைக்கப் பொறுப்புள்ள தோழர்கள்; இன்னுயிர் ஈந்தும் ஈழம் அமைத்திட இனியதோர் அணி; அணியான தர்கீகவாதிகளைக் கொண்ட முன்னேடிகள் தமிழர்கள் மத்தியில் காணக்கூடியதாக இருக்கிறது. தமிழர்கள்தம் நல்வாழ்வுக்கு வகையான வழியான வனப்பான வழிவகுக்க தர்க்கீகம் தன் பணியைச் செய்யவேண்டும் என்பதே தர்க்கீகவாதிகளின் எண்ணப்பாடு; இல்லை பணிப்பும்கூட. இங்கு மேலும் பணிப்புக்கும் திணிப்புககும் உள்ள தார்ப்பரிய வேறுபாடுகளை உள்ளார்ந்த ரீதியில் யதார்த்த நிலையிலும் உணரவேண்டும்.

குதர்க்கவாதிகள் திணிப்பார்கள். ஏன்? கட்டுக்கதைகள் கட்டுவார்கள். இயங்கியலைப் புரிந்து கிரகித்துக்கொள்ள முடியாத பட்சத்தில் பிரிந்து நின்று பித்தலாட்டம் பேசுவார்கள். தம்மையே தமிழர் தம் விடுதலைச் சிற்பிகளாக விளம்பரப்படுத்துபவர்கள், இன்னும் புரட்சிவாதிகளாக புராணக்கதை அளப்பார்கள். இவர்கள் தமது இயலாமையை மறைக்க இன்னேரன்ன தத்துவங்கள் பேசுவார்கள். புரட்சிவாத சூட்சுமத்தைப் புரியாதபட்சத்தில் சூட்சுமம் பேசுவார்கள். ஆனுல் தர்க்கீகவாதிகள் பணிப்பார்கள். இந்தப் பணிப்பின் இயங்கியல் அடிப்படையை தந்தவன் தத்துவ வித்தகன் மார்க்ஸ்.

உலக மக்களிடையே இரண்டே இரண்டு வர்க்கங்கள்தாம்உண்டு. ஒன்று ஆளும்அல்லது (Exploiting Class) உறிஞ்சும் வர்க்கம். மற்றது ஆளப்படும் அல்லது (Exploited Class) உறிஞ்சப்படும் வர்க்கம். இந்த உண்மையைத் தத்துவரீதியில் உணர்த்தியவன்வித்தகனே. இந்தத்தத்ரூப, நிதர்ச

# ஈழவர் இடர் தீர....

## ஈழவர் யார்?

ஈழவர் தம்மிடர் தீருவதற்கான தீர்க்கமான முறைகளைக் காண நாம் முனையும்போது, ஈழவர் தாம் யார் என குரல் எழுப்புவது நியாயமும் நிதர்சனமுமான வாதமே. ஆனுல் வெறும் வாதம், குதர்க்கம் என்பவற்றிற்கு அப்பாற்பட்டு ஆய்வு அடிப்படையிலான தர்க்கீகக் கண்கொண்டு பார்க்கும்போது 'ஈழவர்' என நாம் குறிப்பிடுவது ஈழ நாட்டைத் தாயகமாகக் கொண்டவரையே என்பது புலனுகும்.

(இதழ் 1இலிருந்து)

## எவர் பிரச்சனை பிரதானமானது?

மொத்தமாக இலங்கையில் நாற்பது இலட்சம் தமிழ்ப்பேசும் மக்கள் வாழ்கிருர்கள். இவர்களில் பெரும்பாலானேர் தொழிலாளர்களாகவும் பாமரர்களாகவும் வாழ்கிருர்கள். ஒரு சிறு நடுவர்க்கத்தினரும் இருக்கின்றனர். இவர்களை எதிர்நோக்கியுள்ள பிரச்சனையைத் தீர்த்தால் அன்றி தமிழர்கள் பிரச்சனை தீர்ந்துவிடாது அப்படித் தீர்வுகாணும்வரை அவர்களின் பிரச்சனைகளை எடுத்துக்கூறி அதற்கான ஒரு தர்க்கீகத் தத்துவ மார்க்கத்தையும் காணவேண்டியது நமது கடமையாகும்.

இலங்கைத் தமிழர்கள் தங்கள் பிரச்சனையைத் தீர்க்க, தீர்க்கமான கொள்கையையும், திடமான கோரிக்கையையும் கொள்ள வேண்டும் கொள்கையும் கோரிக்கையும் சேரும்போதுதான் இலட்சியமாகி பின் போராட்டமாய் மலரும்.

வெறும் கோரிக்கை மட்டும் உள்ளவர்கள் கோட்டையையும், கோட்பாட்டையும் விட்டதையும், வெறும் கொள்கை மட்டும் உள்ளவர்கள் கொட்டாவி விட்டதையும் சரித்திரம் கண்டுள்ளது.

(இதழ் 2இலிருந்து)

## எழுப்பப்பட்ட கோரிக்கைகள்

கடந்த காலத்தில் தமிழ்பேசும் மக்களுக்கென முன்வைக்கப்பட்ட மூன்று கோரிக்கைகளுக்குமிடையே பரிமாண வேறுபாடுகள் இருப்பினும், ''ஐம்பதுக்கைம்பது'' ''சமஷ்டிக்கு உட்பட்ட தமிழரசு'' கோரிக்கைகளுக்கும், இறுதியான ஈழக் கோரிக்கைக்குமிடையே ஒரு பாரிய அடிப்படை வேறுபாடு உண்டு. முன்னவை இரண்டும் மொழிவாரி இன உரிமைப்பாடு ரீதியிலானவை. பின்னது தமிழ்தேசிய உடமைப்பாடு ரீதியிலானது. முன்னையவை அரசியல் சாசன ரீதியில் பெறக்கூடியது. பின்னது மக்களின் மறுலர்ச்சியில் மலர்வது.

ஆரம்பத்தில் தனிச் சிங்கள மசோதாவால் பாதிக்கப்பட்டவர்கள் தமது பிரச்சனை தமிழர் பிரச்சனை என நினைத்தார்கள். பின் உயர்கல்வி பெற முடியாதவர்களும் தரப்படுத்தலால் தத்தளித்தவர்களும், பல்கலைக்கழகப் படி ஏறமுடியாதவர்களும் வேலைவாய்ப்பற்றவர்களும் தத்தமது பிரச்சனைகளைத் தமிழ் மக்களுடைய பிரச்சனையாகக் கருதினுர்கள். அதற்கேற்ப தமது நடுத்தர வர்க்க நலன்களையும், உரிமைகளையும், பேணவே கோரிக்கை எழுப்பத் தொடங்கினர். இதன் ஒட்டுமொத்தமான பரிணுமமே பண்ணுகப் பிரகடனம். ஆகவே இப் பிரகடனம் நடுத்தரவர்க்கத்தின் நலன் உரிமைக் கோரிக்கையா? அல்லது நம்மினத்தின் உரிமைத் தேவையா?

தர்க்கீகத் தத்துவத்தின் மற்றுமொரு தாற்பரிய உண்மையை தமிழர்வரலாறு எடுத்துக்

காட்டுகின்றது. அதாவது ஒரு இனத்தின் அல்லது சமூகத்தின் அடித்தளத்தினரான பாமரரும் பாட்டாளிகளும் (அவர்கள் பெரும்பான்மையாயினும்) பாதிக்கப்படும்போது, அச்சமூகத்தின் உயர் மட்டத்தினரும், நடுத்தரவர்க்கத்தினரும் மௌனம் சாதிப்பர். ஆனுல் உயர் மட்டத்தினரும், நடுத்தர வர்க்கத்தினரும் பாதிக்கப்படும்போது கூக்குரல் எழுப்புகின்றனர்.

(இதழ் 3 இலிருந்து)

## அணிவகுப்பில் இஸ்லாமியர் நிலை....?


ஈழக் கோரிக்கையைத் தேசிய ஜனநாயக அரசியல் ரீதியில் இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்கள் 1977-ம் ஆண்டுத் தேர்தலில் முன்வைத்தாலும், அதன் அச்சாணியான பொறுப்பாளிகளும், காவலர்களும் ஜனநாயக அரசியல்வாதிகளான கூட்டணியினரே. ஆனுல் இந்தக் கூட்டணி அங்குரார்ப்பணப் படுத்தப்பட்ட போது அதன்மேல்மட்டத்து ஒட்டு மொத்தமான ஓரணியில் இலங்கைத் தமிழர்களின் ஒரு அங்கமான இஸ்லாமியத் தமிழர்களின் பிரதிநிதித்துவம் அணி சேர்க்கப்படவில்லை. இவர்கள் தமிழர்கள் இல்லையா? என நாம் கேட்க முனையும்போது ''தமிழ் ஈழக் கோரிக்கையின்'' மற்றுமொரு முரண்பாடு தெளிவாகிறது. இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் மேல்மட்டத்துப் பிரதிநிதிகள் ஜனநாயக ரீதியில் வாக்களித்த வடகிழக்கு மக்களின் வாக்கைப் பெற்று 1956ல் தந்தை செல்வா, தலைவர் வன்னியசிங்கம், கல்முனை காரியப்பர், பொத்துவில் முஸ்தாபா ஆகிய மூவரையும் இணைத்து சமஷ்டிக்குட்பட்ட தமிழரசு கோரமுடியுமானுல் அடித்தளவர்க்கத்துத் தமிழ்பேசும் மக்கள் சாதிசமய வேறுபாடின்றி இலட்சிய ரீதியில் இணைந்து சுயநிர்ணயம் பெற முடியாதா? என்ன? அந்த இலட்சியக் கோரிக்கையே ஈழம். அதைக் கோருபவர்களே ஈழவர்கள். இவர்கள் பேசும் மொழியே தமிழ். இந்த முழுமையான ஈழக் கோரிக்கைக்கும், தமிழ் ஈழக் கோரிக்கைக்கும் இமாலய மாறு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# டர் தீர...



னத்தை யதார்த்தமாக இயங்கியல் ரீதியில் உலகிற்கு நடைமுறையில் உணர்த்தியவன் புரவலன் லெனின். இந்த அடிப்படையிலேயே இலங்கைத் தமிழர் பிரச்சினையை அணுகும்போது இயங்கியல் ரீதியில் காலாகாலம் தொட்டு நிலப் பிரபுத்துவ அடிப்படையில் உருவான சிங்கள சமுதாயத்தின் தலைமைப்பீடம் அதன் பிற்போக்குத் தகைமையின் குணும்சமாகச் சிங்கள சோவனிசம் ஆகக் கருத்திலும் எண்ணப்பாட்டிலும் உருவெடுத்து வளர்ந்து வந்துள்ளது. இதன் வெளிப்பாடே இலங்கை சுதந்திரம் பெறுமுன், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே, இன்றைய ஜனதிபதி சிங்களக் கோரிக்கையை எழுப்பியது. பின் பண்டாரநாயக்கா பதவிக்கு வருவதற்காகத் தனிச் சிங்களக் கோரிக்கையை முன்வைத்ததோடு மட்டுமல்லாமல் மசோதாவாக்கியதும்கூட. இதன் பின்னணியிலேயே, முன்னுள் வெலிமடைத் தொகுதிப் பிரதிநிதி கே. எம். பி, ராஜரத்தின முதல் இன்றைய சிறில் மத்யூ வரை பார்க்க வேண்டும். அதன் காரணமாகவே 1958 இல் நடந்த கலவரம் முதல் அண்மையில் நடந்த சம்பவங்கள்வரை இருந்துவந்துள்ளது. இங்கு ஆளும் இனமாகத் தம்மை ஏகோபித்த ரீதியாக யூகித்துக்கொண்ட சிங்கள சோவனிஸ்டுகளிடமிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள விடுதலை கோரும் ஈழவருக்குத் தர்க்கீகத்தின் பண்புகள் என்ன எனக் கூறவேண்டியுள்ளது.

இங்கு மற்ருெரு கணிப்பையும் உணரவேண்டும். சிங்களச் சோவனிஸம் தமிழ்மக்களை மட்டுமல்ல, சிங்கள மக்களையும் வன்முறையால் அடக்குமுறை செய்துவருகிறது. கடந்த நாலு ஆண்டு கால அனுபவத்தில் 40,000 சிங்களப் பாட்டாளி வர்க்கத்தினர் வேலை இழந்து தவிக்கின்றனர். மேலும் முன்னுள் பிரதமமந்திரி திருமதி பண்டாரநாயக்காவை பாராளுமன்றத்திலிருந்து சட்டவிரோதமாக நீக்கப்பட்டு இருக்கிறது. இதற்கிடையில் இன்னும் பல செய்திகள். இதன்மூலம் சோவனிஸத்தின் தன்மையை நன்குணர வேண்டும்.

'' சோவனிஸம்; பாசிசம்; நாசிசம்''; போன்றவை மிலேச்சத்தனமான அராஜகச் சக்திகள். இதற்கும் நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம், ஏகாதிபத்தியம் போன்றவைக்கும் இடையே பாரிய வேறுபாடு உண்டு. எப்படி நிலப்பிரபுத்துவத்திலிருந்து முதலாளித்துவ கால—மாற்றம் பெற்றுப் பின் படிப்படியாக ஏகாதிபத்தியமாக வளர்ச்சி பெற்றுள்ளதோ அதேபோல் சோவனிஸம் முதல் ஆரம்பித்து, பாசிசம், நாசிசமாக உருவெடுத்து உள்ளது. நாசிச ஆட்சியில், அதாவது ஹிட்லருடைய ஆட்சியில் யூதர்களைக் கூண்டோடு அழிக்கக் கங்கணம் கட்டப்பட்டிருந்தது இலங்கையிலுள்ள சிங்கள சோவனிசமும் இது போன்ற ஒரு கங்கண மாயையில் தவிக்கிறது. இங்கு மற்றுமொரு கேள்வியை எழுப்பவேண்டும். அதாவது, தமிழர்கள் மத்தியில் '' தமிழ் சோவனிசம் '' இல்லையா என்பதே ?

பொருளியல் ரீதியாக நிலப் பிரபுத்துவ காலம் ஸ்தம்பித்து நிற்கும்போது சோவனிசமும் தலையெடுக்க ஆரம்பிக்கிறது. ஆனல் இலங்கையை ஆண்ட வெள்ளையர் காலத்தில் தமிழர்கள் முக்கியமாக வடக்கிலுள்ளவர்கள் அவ்வரசின் அடிவருடிகளானர்கள். இதனல் தமிழர்கள் மத்தியில் நிலப் பிரபுத்துவம் நிலைப்பாடடையவில்லை. இல்லாவிட்டால் தமிழர்தம் பிரதேசத்தில், வவுனியா மன்னர் போன்ற இடங்களில் தமிழர் வாழுவதற்குச் சிங்கள அரசிடம் காணி நிலம் கேட்டு கையேந்தி நிற்கவேண்டுமா ? இங்கொன்றும் அங்கொன்றுமாக, ஆங்காங்கே நிலப் பிரபுக்கள் இருந்தார்கள். பொன்னம்பலம் இராமநாதன் ஒரு நிலப் பிரபுவே. அதேபோல் முதன்முதலில் '' தனித் தமிழ்நாடு '' கோரிய சி. சுந்தரலிங்கம் போன்ற நிவப்பிரபுக்கள் '' சோவனிஸ்டுகளாக '' இருந்தார்கள். பதிலுக்கு செல்வநாயகம், வன்னியசிங்கம், பொன்னம்பலம் போன்றவர்கள் பூர்ஷுவா ஜனநாயகவாதிகளாக மாறினர்கள். இதன் பரிணமமே இன்றைய பூர்ஷுவக்களான தமிழ்த் தேசியவாதிகள். விடுதலை நாடும் ஒட்டு மொத்தமற்ற கூட்டணியினர். இவர்கள் காலத்தில்கூட தமிழர்கள் தம் விமோசனம் நிதர்சனமற்றதொன்று என்ற நிலைக்காகிறது. இந்த நிலையில், ஈழவர் விமோசனத்திற்கு வழிவகை என்ன எனத் தர்க்கீகவாதிகள் வினவவேண்டியது அவசியம்.

ஈழவர் தம் இடர்தீர ஈண்டு தொலைந்திட இயங்கும் தோழர்கள் இலங்கைவாழ் தமிழர்களின் முற்போக்குச் சக்திகளை அணி திரட்ட வேண்டும். ஈழவர் சமுதாயத்தின் முதுகெலும்பான பாட்டாளி வர்க்கத் தொழிலாளர்களான மலையகத் தொழிலாளர்களையும், அவர்களுக்கு அனுசரணையாகவும், துணையாகவும் வடக்கிலும், கிழக்கிலுமுள்ள பாமரர்கள் பங்களிக்க, கொள்கை—கோரிக்கை—இலட்சியம் என்ற அடிப்படையில் அணிவகுக்கவேண்டும். இதை மலையகத் தொழிலாளர்களோ அல்லது வடக்கிலும் கிழக்கிலும் உள்ள விவசாயிகளோ இல்லை நடுத்தர வர்க்கத்தினரோ தாமாக முன்வந்து பங்களிக்க மாட்டார்கள். இந்தப் பங்களிப்பைச் செய்யும் கைங்கரிய பொறுப்பு வடக்குக் கிழக்கிலும் மலையகத்திலுமுள்ள தர்க்கீகவாதிகளின் பொறுப்பே. இதுவே முதல் பணிப்பு.

ஈழம் எமது தாயகம். அதை அமைப்பது எமது ஆதர்ச உரிமை என்ற அடிப்படையில் தர்க்கீகம் தமது பணியைச் செய்யட்டும். சமூக சனநாயக அரசியல்வாதிகளும் தம் பணியைச் செய்யட்டும். தவிர்க்கமுடியாத தன்னிச்சைக்காரர்கள் ஓடி ஒழியட்டும். இது திணிப்பல்ல. எமது ஆழ்ந்த பணிப்பு என்பதை ஈழப்போராட்டம் ஈழவர் மத்தியில் நிரூபித்து, அவர்தம் இலக்கைக் குறிக்கும் செங்கொடியைப் பறக்கச் செய்வார்கள். ஈழவர் இந்த மணியான கொடி பட்டொளிவீசும்போது, தமிழோசை கேட்கும். அதற்காக, பாரதி கூறியதுபோல, '' தாயின் மணிக்கொடி பாரீர்; அதை தாழ்ந்து பணிந்திட வாரீர் '' என ஈழவர் திரண்டெழுவர். அந்த எழுச்சியின் விடிவே ஈழவர் விமோசனம்.

பாடுகள் உண்டு. இந்த முரண்பாட்டைப் புரிய வைக்கவோ என்னவோ தமிழ் ஈழக் கோரிக்கைக்கு வக்காலத்துச் செய்யும் அரசியல் விற்பனர்கள், கிழக்கு மாகாணத்தில் வாழும் இஸ்லாமியத் தமிழர்கள் ''இஸ்லாமிய ஈழம்'' கோரலாம் எனப் பகிரங்கமாகப் பறை சாற்றுகின்ருர்கள்! அப்படிப் பகரும்போது இலங்கை வாழ் தமிழர்கள் வாழும் வடக்கு—கிழக்கு—மலையகப் பகுதிகளைப் பார்த்துப் புள்ளி விபரப்படி இது சாத்தியமா எனச் சிந்தித்தார்களா? எனக் கேட்கத் தோன்றுகிறது. அப்படித் தமிழர்களின் ஒரு சாரரான இஸ்லாமியத் தமிழர்கட்கு ''இஸ்லாமிய ஈழம்'' எனப் பகரும் 'தமிழ் ஈழக் கோரிக்கையாளர்கள் நாளை நம்மவர்களில் மற்ருெரு சாரரான கிறிஸ்தவ அல்லது சைவ மக்களுக்கெனத் தனித்தனி ஈழம் கோர அனுமதிப்பார்களா? எனக் கேட்கத் தோன்றுகிறது. இங்குதான் 'தமிழ் ஈழக்' கோரிக்கையின் முக்கிய முரண்பாட்டையும், அதன் பொதுக் காவலர்களான கூட்டணியினரின் அந்தரங்க சுத்தியையும் அரசியல் சூட்சுமத்தையும் பற்றிக் கேள்விக்குறி எழுப்பவேண்டியிருக்கிறது. (இதழ் 4 இலிருந்து)

## ஈழவர் என அழைப்பது பொருந்துமா?

அந்நிய காலனித்துவ காலத்துக்கு முந்திய நிலப் பிரபுத்துவ காலத்துக்கு முன்னரே ஈழவர் இந்தியாவின் தென்மேற்குப் பகுதியில் குடியேறினர். இவர்கள் ஈழவர் என இன்றும் கேரளாவில் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் ஈழத்திலிருந்து வந்தவர்கள் என்பதை ''மலையாள நாட்டில் இன்று ஈழவர் என்று அழைக்கப்படுகின்ற வகுப்பார் இலங்கையிலிருந்து அந்நாட்டில் குடியேறியவரேயாவர். ஈழவர் என்ற சொல்லே அவர் ஈழநாட்டிலிருந்து வந்தவர் என்பதை உணர்த்துகின்றது'' என பேராசிரியர் சேதுப்பிள்ளை வலியுறுத்துகிருர். மேலும் கேரளாவில் உள்ள ஈழவர்களைப்பற்றிய பூர்வீக வரலாறு குறித்து ஆதாரம் காட்டும் நூல்களில் ஒன்ருன ''மலபார் யாப்பு'' என்னும் நூலின் ஆசிரியரான வில்லியம் யோகன் என்னும் ஆங்கிலேயர் ஈழவர்கள் கேரளாவின் ஆதித்திராவிடர்கள்

நூற்றுண்டுக்கும் ஐந்தாம் நூற்றுண்டுக்கும் இடையே வந்து குடியேறினர் எனக் கூறிவைத்தார். இவர் கருத்தைப் பிரபல சரித்திர சமூகவியல், பூர்வீகவியல் ஆராய்ச்சியாளர்களான இ. தேஸ்ரன், சி. ஏ. அய்ன்ஸ், கிருஷ்ணய்யர், டி. கே. வேலுப்பிள்ளை போன்ருேர் தத்தமது ஆய்வுகளின் மூலம் மெய்ப்பித்துள்ளார்கள். ஆனல் இந்தியாவில் தலைவிரித்தாடிய சாதி, சமய வேறுபாடுகளால் கேரளாவில் ஈழவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாகவே கருதப்பட்டு வருகிருர்கள் என்பது உண்மை. இது ஒரு தேசத்தைவிட்டு வேறு தேசத்திற்குச் சென்று குடியேறியவர்களுக்குச் சமத்துவ, சமதர்ம, சமுதாயமில்லாத நாடுகளில் ஏற்படும் பரிதாபகரமான அடையாள முத்திரை. (இதழ் 5 இலிருந்து)

## எப்போ ஈழப் போராட்டம் எழும்?

வெறும் உரிமைகளுக்கு, அதுவும் தனித் தனியே தொழிலாளர்களுக்குக் கூடிய வேதனமும், உகந்த வேலைச் சூழ்நிலைகள் என்றும், பாமரருக்குப் பலதரப்பட்ட சலுகைகள் என்றும், குரல் எழுப்புபவர்கள் வெறும் கூக்குரலையும் பரபரப்பையுமே ஏற்படுத்துகிருர்கள். இந்தப் பரபரப்பால் மக்கள் மத்தியில் எந்தவித அடித்தள உணர்வும் ஏற்படுவதில்லை என்பதை ஆணித்தரமாக எடுத்துக் காட்டினன் மார்க்ஸ். இதனலேயே நாமும், தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தமட்டில், அது தோட்டத் தொழிலாளர்களாயினும் சரி, பாமர மக்களாயினும் சரி, இல்லை மாணவர்களாயினும் சரி, நடுத்தர வர்க்கத்து உத்தியோகத்தர்களாயினும் சரி இவர்களது தனித்தனிப்பட்ட ரீதியான வெறும் உரிமைகளைப் பிரதிபலித்துக் கூக்குரல் எழுப்பாது, ஈழவர்களின் ஏகோபித்த ஒட்டுமொத்தமான உடமைப்பாட்டுரீதியில் குரல் எழுப்புவதோடு, அது மக்கள் மத்தியில் பரபரப்பை மட்டுமன்றி ஆழ்ந்த உணர்வையும் அதனடிப்படையிலான எழுச்சியையும் ஏற்படுத்த வேண்டுமென வற்புறுத்தி வருகிருேம். இதுவேஈழப்போராட்டமாக அமையும்.

இந்த ஈழப் போராட்டத்தின் முக்கிய அணியாக நம்மினத்தின் முதுகெலும்பான தொழிலாளர் வர்க்கத்தைத் தலைமைதாங்க ஏற்

## வழிநடத்துபவர்களும் முன்னெடுத்துச் செல்பவர்களும்

வழி நடாத்துவது வேறு; முன்னெடுத்துச் செல்லுவது வேறு. மக்களை வழி நடாத்துபவர்கள் மக்கள் தம் சமூக, அரசியல், பொருளாதார விமோசனத்திற்கான ஒட்டுமொத்தமான விடுதலைப் போராட்டத்திற்கு வகையான போராட்டப் பாதையை வகுக்க வேண்டும். அதற்கேற்ப விடுதலைப் போராட்டப்பாங்கில் ஈடுபட மக்களின் இதர சமூகப் பிரிவுகளைப் பிரதிபலிக்கும் அணிகளையும், அரசியல் பிரச்சாரச் சபைகளைக் கட்டும் திராணியும் திண்மையும் கொண்ட முன்னேடிகளை உருவாக்க வேண்டும். அந்த முன்னேடிகள் மூலம் அணிகளின் முன்னணி அமைத்து அவற்றின் ஊடாகப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

முன்னெடுத்துச் செல்பவர்கள் வழிநடாத்துபவர்களின் போராட்டப் பாதைக்கேற்பத் தத்தமது அணியினரை நெறிப்படுத்தித் தயார் செய்ய வேண்டும். அந்தத் தயாரிப்பு ஆழ்ந்த அரசியலில், கோட்பாட்டில் அர்த்தமுள்ள போராட்ட முறைகளில் ஊறித் திளைத்ததாக இருக்க வேண்டும்.. அந்தத் திளைப்பின் தொனிப்பில் உறுதியுடனும், திண்மையுடனும் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இவ்விதம் முன்னெடுத்துச் செல்பவர்கள் அமைப்பதுதான் போராட்டப் பாதை. அதை வகுத்துக் கொடுத்து முன்னெடுத்துச் செல்வதே வழிநடத்துபவர்களின் கடமை. இந்தப் பிணைப்பில் பிரசவமாவதே மக்கள் விடுதலை. இந்த விடுதலையின்போது, முன்னெடுத்துச் செல்பவர்கள் வழி நடத்துவதும் வழி வகுப்பவர்கள் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதும் தவிர்க்க முடியாத இயங்கியல் நியதி.

www.tamilarangam.net



# திருமலை மாவட்டத்தில் குடியேற்றங்களும் விபரீதங்களும்

தமிழ் பேசும் மக்கள் அனுபவித்து வரும் பாரிய பிரச்சனைகளுள் சிங்களக் குடியேற்றப் பிரச்சனையும் ஒன்றாகும். தமிழ் பேசும் தேசிய இனத்தையும், அதன் கோரிக்கையையும் சிதைப்பதற்காகவே இன்று குடியேற்றங்கள் நடத்தப்படுகின்றன. இத்திட்டமிட்ட சிங்களக் குடியேற்ற அம்சங்கள் பற்றித் தெரிந்து கொள்வதற்கு, அதன் ஆரம்பகால வரலாற்றிலிருந்து, இன்று அது பெற்றிருக்கும் வடிவங்களூடாக, அரசாங்கங்களின் தந்திரோபாய செயற்பாடுகளையும் நாம் அறிய வேண்டியது அவசியமாகும்,

## குடியேற்றங்களின் ஆரம்பகால வரலாறு:

1932-ம் ஆண்டில் டி. எஸ். சேனநாயக்கா தலைமையில் இலங்கையில் விவசாயக் குடியேற்றங்கள் ஆரம்பமாகின. 1947-ல் கல்லோயாத் திட்டத்தின் மூலம் சிங்களக் குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டபோதே தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ''குடியேற்றப் பிரச்சனை'' ஆரம்பமானது. இக்காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி இதனை எதிர்க்கவில்லை. ஆனால், இதன் ஓர் உறுப்பினராயிருந்த திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் இக்குடியேற்றப் பிரச்சனையை ஆட்சேபித்தார். 1949-ம் ஆண்டு காங்கிரஸ் கட்சியை விட்டுத் திரு. செல்வநாயகம், வன்னியசிங்கம் போன்றோர் விலகி இலங்கைச் சமஷ்டிக் கட்சியை (தமிழரசுக் கட்சியை) அமைத்த போதே ''பிரதேசம் பற்றிய கருத்து'' அரசியலில் புகுந்தது எனலாம். இது படிப்படியாக வளர்ந்து 1957இல் செய்யப்பட்ட பண்டா—செல்வா ஒப்பந்தத்தில் பிரதான அம்சமாகவும் (குடியேற்றமும், பிரதேசமும்) விளங்கியது. பிரதேச உரிமையை அங்கீகரித்திருந்த இவ்வொப்பந்தம் 1958இல் கிழித்தெறியப் பட்டதிலிருந்து குடியேற்றம், பிரதேசம் போன்றன தீர்வற்ற, பிரச்சனைகளாகவே இன்றுவரை இருந்து வருகின்றன.

## சிங்களக் குடியேற்றங்களின் வடிவங்கள்:

குடியேற்றங்களால் இன்று பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கும் திருகோணமலை மாவட்டத்தை அடிப்படையாக வைத்துப் பார்த்தால் சுமார் எட்டு வகைகளில் இது நடைமுறைப்படுத்தப் படுவதைப் பார்க்கலாம்.

1. **விவசாயக் குடியேற்றம்**
2. **சட்டவிரோத விவசாயக் குடியிருப்புக் குடியேற்றம்**
3. **கைத்தொழில் குடியேற்றம்**
4. **வியாபாரக் குடியேற்றம்**
5. **மீன்பிடிக் குடியேற்றம்**
6. **முப்படைக் குடும்பங்கள் குடியேற்றம்**
7. **பௌத்தமதப் பாதுகாப்புக் குடியேற்றம் (புனித நகர்)**
8. **அரசாங்க நிர்வாகிகள், ஊழியர் குடியேற்றம்**

பொதுவான பார்வைக்கு விவசாயக் குடியேற்றங்களே நடைபெறுவதாகத் தோன்றினாலும், புள்ளிவிபர அடிப்படையில் நோக்கும்போது ஏனைய குடியேற்ற வகைகளாலும் பாரிய தாக்கம் ஏற்படுவதை அவதானிக்கலாம்.

## விவசாயக் குடியேற்றம்

விவசாய நோக்கில் குடியமர்த்தப்படுபவர்களில் பெரும்பான்மையினர் சிங்களம் பேசுவோராக இருப்பர், உதாரணமாக, 1952—1960 காலப் பகுதிகளில் கந்தளாய், மொறவேவா ஆகிய பகுதிகளில் குடியேற்றப்பட்ட 2300 குடும்பங்களுள் ஏறக்குறைய முழுவதும் சிங்களக் குடும்பங்கள்தான். அல்லையிலுள்ள 540 குடியேற்றக் குடும்பங்களிலும் கணிசமான தொகையினர் சிங்களவர்களே.

## கைத்தொழிற் குடியேற்றம்:

(அ) பிறிமா மாவாலையை மையமாகக் கொண்டும் குடியேற்றம் நடைபெறுகிறது. இதில் வேலை பார்க்கும் உத்தியோகத்தர்கள் அரசின் பணிப்பின் பேரினாலேயே நியமிக்கப்படுவதால், அவர்கள் சிங்களம் பேசுவோராகவே காணப்படுகின்றனர். இங்கு பிரான்ஸின் உதவியுடன் 450 வீடுகள் கட்டப்பட்டுச் சிங்களம் பேசுவோர் குடியமர்த்தப்பட்டு வருகிறார்கள். இவைகள் காலகதியில் நிரந்தரக் குடிகளாவது நிச்சயமாகும். மேலும் இதனைச் சூழ்ந்து சிங்களக் கடைகள், சிகையலங்காரக் கூடங்கள் (சலூன்), சலவை நிலையங்கள் போன்றன ஆரம்பிக்கப்படுவதன் மூலமும் குடியேற்றம் ஏற்படுகிறது.

(ஆ) அமெரிக்க நிறுவனத்தின் உத்தேச எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையிலும் இதுபோன்ற குடியேற்றங்கள்தான் நடைபெறவுள்ளன.

(இ) உல்லாசப் பிரயாணிகள் விடுதிகளை உப்புவெளி, நிலாவெளிப் பகுதிகளில் அமைக்கச் சிங்கள முதலாளிகளுக்குப் பெருந் தொகையாகக் காணிகள் வழங்கப்பட்டுள்ளன. இங்கு சிங்கள ஊழியர்களும் குவிக்கப்பட இருக்கின்றார்கள்.

(ஈ) மரபு வழியிலான சுமார் 480 நடிசைக் கைத்தொழில்கள் தமிழ் பேசும் மக்களின் கரங்களிலேயே இன்று இருக்கின்றன. ஆனால் அபிவிருத்தி என்ற போர்வையில் உள்ளூர் முதலாளிகளாலும், அந்நிய மூலதனத்தாலும் உருவாகும் தொழிற்சாலைகளோடு—முதலாளித்துவ அபிவிருத்தியோடு — இம் மரபு வழியிலான குடிசைக் கைத்தொழில்கள் போட்டிபோட முடியாது காலகதியில் அழியும் ஆபத்து ஏற்பட்டு விட்டது. முதலாளித்துவ அபிவிருத்தியால் விளையும் சிங்களக் குடியேற்றங்களால் தமிழ் பேசுவோர் பொருளாதார ரீதியில் ஈடாட்டம் காணத் தொடங்கி விட்டனராகும்.

## வியாபாரம், மீன்பிடிக் குடியேற்றம்

மரக்கறி, பழவகை முதலான வியாபாரமும், சந்தை ஆதிக்கமும் சிங்களவர்கள் கைகளிலேயே இருப்பதைத் தண்கூடாகப் பார்க்கலாம். மீன்பிடித் துறையிலும் பெருந் தொகையானவர்களைப் பார்க்கலாம். மீன் வாடிகளும் சிங்களவர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டே இருக்கின்றன. இவ்வாறு ஆதிக்கம் செலுத்தி வரும் சிங்கள முதலாளிகள், சிங்களம் பேசும் தொழிலாளர்களுக்குப் பல சலுகைகளைச் செய்து குடியேற்றத்திற்கு உதவுகிறார்கள்.

## முப்படையினரும் குடியேற்றங்களும்

முப்படையினரும் தளம் அமைத்திருக்கும் திருமலையில், ஒவ்வொரு படைப்பிரிவினரும் தாம் தங்கியிருக்கும் இடங்களிலிருந்து வேறாக, தமக்கு வசதியான இடங்களில் பண்ணைகளை அமைத்துள்ளனர். அல்லை—கந்தளாய் வீதியில் இராணுவத்தினரின் புகையிலைப் பண்ணையும், கடவானையில் கடற்படையின் விவசாயப் பண்ணையும், பன்குளத்தில் விமானப்படையின் விவசாயப் பண்ணையும் இருக்கின்றன. இவற்றில் வேலைக்குச் சிங்களவர்களே அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கு முப்படையின் வாகன வசதிகள் இங்கு கிடைக்கின்றன. இது பல வகைகளிலும் சிங்களக் குடியேற்றங்களை வலுவுடையன வாக்குகின்றன.

## அரச நிர்வாகிகள், பௌத்தமத பாதுகாப்புக் குடியேற்றம்

1952இல் திருமலை மாவட்டத்தில் 10 உயர் நிர்வாக உத்தியோகத்தர்களில் 8 தமிழ் பேசுவோரும், ஒரு பறங்கியரும், ஒரே ஒரு சிங்களவருமே இருந்தனர். ஆனால் இன்று 25 நிர்வாக உத்தியோகத்தர்களில் 17 சிங்களவரும், 8 தமிழ் பேசுவோரும் உள்ளனர். இவர்களில் தீர்மான மெடுக்கும் உத்தியோகத்தர்கள் அனைவரும் சிங்களவர்களாகும். இவர்கள் பௌத்த பெருந் தேசியவாதத்தை எல்லா வழிகளிலும் அமுல்படுத்தி வருகின்றனர். உதாரணமாக 1969—70ஆம் ஆண்டு இடைவெளியில் வெளியிடப்பட்ட திருமலை மாவட்ட அரசாங்க அதிபரின் அறிக்கையில் இருந்து சில வாக்கியங்களைப் பார்ப்போம். ''இக் காலத் ல் திருமலை மாவட்டத்தில் வதியும் புத்த குருமார்களினதும் பிற இடங்களில் இருந்து விஜயம் செய்யும் புத்த குருமார்களினதும் தேவைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. திருகோணமலை வைத்திய நிலையத்தில் புத்தகுருமார்களின் பாவனைக்காகப் பிரத்தியேக இடவசதியும் பௌத்த யாத்திரீகர்கள் தங்குமிடத்தில் புத்த குருமார் தங்குவதற்கு இட வசதியும் செய்து கொடுக்கப்பட்டது. இவ்விரு கட்டிடங்களும் மிகக் குறுகிய காலத்தில் கட்டப்பட்டதும், இதற்கு உறுதுணைபுரிந்த இராணுவத்தினருக்கும், கடற்படையினருக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். எனது வேண்டுகோளுக்கிணங்க காலம் தாழ்த்தாது இதற்கு அனுமதியளித்த கலாச்சாரத் திணைக்களத்துக்கும் ஆழ்ந்த நன்றி உரியதாகும். அத்துடன் குருமார் தங்குமிடத்தில் வைப்பதற்கென புத்தபிரானின் சிலையைத் தந்துதவியமைக்காகவும் கலாச்சாரத் திணைக்களத்துக்கு நன்றி உரித்தாகட்டும்.'' இதிலிருந்து எவ்வாறு நிர்வாகிகளும், முப்படைகளும், அதிகாரிகளும், திணைக்களங்களும் பெருந் தேசியவாதத்துக்குத் துணை போகி ர்கள் என்று பார்க்க முடிகிறதல்லவா.

இவ்வாறாக 1947ஆம் ஆண்டு முதல் சிங்களக் குடியேற்றங்கள் ஆரம்பித்து இன்று பெருமளவில் உள்நாட்டு வெளிநாட்டு, மூலதனங்களுடனும் முப்படைகளின் பெருந்துணையுடனும், அரச சார்பு நிர்வாகிகளுடனும் பௌத்தமத விஸ்தரிப்பையும், சிங்களக் குடியேற்றங்களையும் திறமையாகச் செய்வதைத் தெளிவாகப் பார்க்கலாம். இங்கு நாம் மிகவும் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய அம்சம் என்னவெனில் **இச் சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் நிறுவனத் தன்மை பெற்றிருப்பதாகும்.**

## குடியேற்றங்களும் கலகங்களும்

தாச்சிவித்தாச்சி என்பவர் தனது 'அவசர காலம் 58' என்ற நூலில் பதவியாவிலுள்ள சிங்களக் குடியேற்றம் பற்றி எழுதுகையில் ''இக் குடியேற்றத் திட்டம் ஓர் குப்பாடித்தனம் மிக்கவர்களைக் கொண்டதாகவும் அவற்றில் சமூக வாழ்வைக் காண முடியாதும் இருந்தது'' என்று குறிப்பிட்டுள்ளார். குடியேற்றத்திட்டப் பகுதிகளிலேயே இனக்கலவரங்கள் பெருமளவில் நடைபெறுகின்றன. 1947இல் ஆரம்பிக்கப்பட்ட கல்லோயாத் திட்டத்தில் 1956ஆம் ஆண்டுக்குள் 150 தமிழ் பேசும் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

கிழக்கு மாகாணம் முழுவதும் இத்தகைய குடியேற்றப் பகுதிகளால் பல இனக்கலவரங்களை அனுபவித்து வருகிறது. தொடர்ச்சியான கலவரங்களின் விளைவாக இப்பிரதேசங்களில் சிங்களவர்கள் வலுக் கொள்வதையும் தமிழ் பேசும் மக்கள் பீதியுற்று வாழ்வதையும் வெளிப்படையாகப் பார்க்கலாம். இதனால் குடியேற்றங்கள் என்பது தமிழ் பேசும் மக்களின் தலைகளில் கட்டப்பட்ட வெடிகுண்டுகள் எனக் கூறின் பொருத்தமானதே !

## திட்டங்களின் தந்திரோபாயங்களும் பின்னணியும்

சிங்களக் குடியிருப்புகள் புவியியல் அடிப்படையிலும், பொருளாதார அடிப்படையிலும், மிகவும் தந்திரோபாயமாக ஏற்படுத்தப்படுகின்றன. இவற்றில் மூன்று பிரதான அம்சங்களைப் பார்க்கலாம்:

(அ) தமிழ் பிரதேசங்களின் போக்குவரத்து முதலான தொடர்புகளைத் துண்டிக்கக் கூடிய முறையில் குடியிருப்புகளை அமைத்தல் அத்

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# திட்டமற்ற பொருளாதாரத்தால் மீனவர் வாழ்வு அவலம்

இலங்கையின் பொருளாதார உற்பத்தியின் மூல வளங்களில், மீன் உற்பத்தி மிகமுக்கியமான தொன்றாகும். இந்நாட்டைச் சூழவுள்ள கடற் பிரதேசங்களில் மீன் வளங்கள் கூடுதலாக இருந்தும் இத்துறையில் இந்நாடு இன்று பின்தங்கியிருப்பதற்குக் காரணம் திட்டமிடப்படாத பொருளாதார அமைப்புக்களே.

உலகில் எத்தனையோ நாடுகள் மீன்வளங்களற்றிருந்தும் திட்டமிட்ட பொருளாதார அமைப்பு முறையாலும், தொழில்நுட்ப பிரயோகத்தாலும் மீன்பிடித்துறையை நல்ல முறையில் விருத்திசெய்து உற்பத்தியைப் பெருக்குகின்றன. இந்நாடுகள் தமதுநாட்டுத் தேவைக்கும் மேலாக வெளிநாடுகளுடன் மீன்வர்த்தகத் துறையில் ஈடுபட்டு பெருந்தொகையான அந்நியச் செலாவணியைச் சேமித்து அத்துறையை மட்டுமல்ல வேறு உற்பத்தித் துறைகளையும் பெருக்கி வருகின்றன. உலகில் முக்கியமாக தாய்லாந்து, நோர்வே, ஜப்பான் போன்ற நாடுகளே இன்று பெருந்தொகையான மீன்உற்பத்தியில் முன்னணி வகிக்கின்றன. இவைதவிர வேறுபல நாடுகள் இத்துறையை விருத்தி செய்வதில் ஈடுபட்டு வருகின்றன.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் அந்நாட்டு மக்களின் அத்தியாவசிய தேவைகளின் பூர்த்திக்கும் அந்நாட்டின் பொருளாதார திட்டங்களே முக்கியத்துவமாக இருக்கின்றது. பொருளாதார வளத்தை விருத்திசெய்யக்கூடிய வளங்கள் இருந்தும், அதை வளர்த்தெடுக்கக் கூடிய உழைப்புச் சக்திகள் இருந்தும் அதைச் சரிவரத் திட்டமிட்டு நிறைவேற்றாத நிலையிலேயே பல நாடுகள் பொருளாதார நெருக்கடிகளாலும் மற்றும் வேலையில்லாப் பிரச்சனை, பஞ்சம்போன்ற பிரச்சனைகளையும் எதிர்நோக்கி வருகின்றன. இத்தகைய நெருக்கடிகளுக் குள்ளாகிவரும் பல நாடுகள் இறுதியில் அந்நிய ஏகாதிபத்திய சுரண்டல் நாடுகளுக்குத் தம்மை இரையாக்கிக் கொள்ளுகின்றன.

இத்தகைய நிலையில்தான் இலங்கையும் இன்று தாண்டவமாடி வருகின்றது. இலங்கையில் அந்நியச் செலாவணியைத் தேடித்தரும் தேயிலை, றப்பர் உற்பத்தியைத் தவிர, நெல் உற்பத்தி தவிர மீன் உற்பத்தி முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஆனால், இத்துறையில் வளர்ச்சியை ஏற்படுத்தாமல் அந்நிய நாடுகளிடமிருந்து மீன் வகைகளை இறக்குமதிசெய்து இங்குள்ள மீன் உற்பத்தித் துறையைப் படுபாதாளத்தில் தள்ளுகின்றது அரசு. இதனால் உற்பத்தித்துறை வீழ்ச்சி அடைவதோடு, அதை நம்பி வாழ்வைக் கழித்து வந்த எத்தனையோ ஏழை மீனவர்கள் மிகவும் கஷ்டத்துக்குள்ளாகின்றார்கள். இந்த நெருக்கடி நிலையில் இங்குள்ள மீன்பிடித்துறை அமைப்பு அத்தொழிலை மேற்கொண்டுவரும் மக்களுக்குச் சொல்லொணாக் கஷ்டங்களை வாழ்க்கை பூராவும் ஏற்படுத்தி வருகின்றது,

## அமைப்பு முறை :

இந்நாட்டிலுள்ள தனியுடமைமுறை மீன்பிடித்துறையில் எவ்வளவுதூரம் விரவிநின்கின்றதென்பதையும் பார்க்கவேண்டும். மீன்பிடித் துறையிலுள்ள கரையோரப் பகுதிகளிலுள்ள கிராமங்களை எடுத்துப் பார்க்கும்போது, அங்கு ஒருசில சம்மாட்டிமார் (முதலாளிகள்) களின் உடமையில் மீன்பிடி உபகரணங்களும், இயந்திரங்களும் தனிச்சொத்துரிமையாக உள்ளது. இச்சம்மாட்டிமார்களுக்குச் சொந்தமான வள்ளங்களில் தொழிலாளர்கள் கூலிகளாக உள்ளனர். மீனவ சமூகத்தில் ஒருசிலரே வசதியுள்ளவர்களாகப் பொருளாதார தாக்கமோ அன்றி சுகாதார தாக்கமோ அற்று வாழ்கின்றனர். இவர்கள் மீனவர்களில் 10 வீதத்தினராகவும் மிகுதி 90 வீதத்தினரும் கூலிகளாக ஏழைத் தொழிலாளர்களாகவே யுள்ளனர். இந்தக் கூலித் தொழிலாளர்களின் கூலி நிர்ணயிக்கப்படாததாகவும், வரையறுக்கப்படாததாகவும் உள்ளதுடன் இத்தொழிலாளர்களின் அன்றாடத் தேவைகளை நிர்ணயிப்பவர்கள் அந்த 10 வீதத்தினராகவுமே உள்ளது.

இவர்கள் அதிகாலையில் எழுந்து கடற்காற்றிலும், நீரிலும் அலைந்து மீன்களைப் பிடித்துவந்து கரை சேர்ந்ததும் பிடிக்கப்படும் மீன்களின் வருவாயைப் பொறுத்து தொழிலாளர்களின் கூலியை முதலாளி பிரித்து வருவாயின் அரைப்பங்குக்குமேல் தனது உபகரணங்களுக்காக எடுத்துவிட்டு மிகுதியைப் பிரித்துக் கொடுப்பார்கள். வேறுசில இடங்களில் நாட்கூலியாக 30ரூபா வழங்கப்படுகின்றது. இந்நிலையால் தன் உழைப்புக்கு ஏற்ற ஊதியத்தைப்பெற முடியாமல் தன் குடிசை திரும்பும் ஏழை மீனவ தொழிலாளர்கள் அன்றாட வாழ்வைப் பல இன்னல்கள் மத்தியில் ஒருவாறாகப் போக்குவார்கள், சில நாட்களில் தொழிலில்லாமல் இருக்கும்போது அவர்கள் சீவனப்பாட்டிற்கு ஏதாவது நிவாரணம் முதலாளியால் இருக்குமா? என்றால் இல்லை.

கடற் காற்றுக்கும், மழைக்கும் தள்ளாடிக் கொண்டிருக்கும் சிறு ஓலைக்குடிசைகளில் நீட்டி நிமிர்ந்து சிறிதுநேரம் தூங்கக்கூட வசதியற்றிருக்கும் தொழிலாளர்கள் தமது அன்றாட ஜீவனப் பாட்டிற்காகவே இந்த அமைப்பு முறையில்இருந்து தினமும் மாரடிக்கவேண்டியுள்ளது. ஆனால், சம்மாட்டிமார்களோ நாளுக்குநாள் தொழிலாளர்களின் உழைப்பை உறிஞ்சி, உபகரணங்களைப் பெருக்கி மேலும் மேலும் சுரண்டுவதற்கு வழி வகுத்துக் கொள்ளுகின்றார்கள். இவர்கள் தங்களுக்கு வசதியான பெரிய வீடுகளைக் கட்டி சகல வசதிகளுடனும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தமது பிள்ளைகளைப் படிப்பித்து உயர்ந்த நிலைக்கு உயர்த்திப் பெருவாழ்வுவாழ, இவர்களுக்குக்கீழ் கூலிகளாக வேலைசெய்யும் தொழிலாளர்கள் இருந்து எழும்புவதற்குக்கூட வசதியற்று கடற்கரை மணலிலே தமதுவாழ்வை ஓட்டுவது மட்டுமல்ல, ஏதோஒரு வகையில் கிடைக்கும் ஒரு வாய் கஞ்சிகூட ஆறுதலாகஇருந்து குடிப்பதற்குக்கூட வக்கற்று நிற்கிறார்கள். இவர்கள் எப்படித் தமது பிள்ளைகளைக் கல்விகற்க அனுப்புறதும், அவர்களுக்குக் கல்வி ஊட்டுவதும். இந்நிலையில் சிறு பராயத்திலேயே தந்தையுடன் கடலில்இறங்கி தன் வாழ்வைஓட்ட அலைகின்றனர்.

மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வீடுதிரும்பும்போது அநேக இடங்களில் நல்ல குடிநீர்அற்று உவர்கலந்த நீரையே குடிக்கவும், நீராடவும் பயன்படுத்துகின்றனர். இதனால் நோய்வாய்ப்பட்டு வருந்துகின்றனர். அத்துடன் தமது உடலுழைப்பின் களைப்பைப்போக்கத் தினமும் மது அருந்தி மற்றவர்களுடன் வீணான சச்சரவுகளில் ஈடுபட்டு ஒற்றுமையற்று மேற்குறிப்பிட்ட பத்து வீதத்தினருக்கும் லாபத்தை ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். இத்தகைய அமைப்புமுறையிலேயே மீனவர்கள் தம்வாழ்வை ஓட்டுகின்றனர்.

## அரசின் இனவாதத் தாக்கம்:

சமூக அமைப்பின் இத்தனை இன்னல்கள் மத்தியிலும் இலங்கை அரசின் இனவாதப் போக்கும் மீனவர் வாழ்வில் இன்று பெருந்தாக்கத்தை ஏற்படுத்திவருகின்றது. தமிழ்பேசும் மீனவர்கள் வாழும் பிரதேச மீன்பிடிதுறை வளர்ச்சிக்கும். சிங்களமீனவர்களின்மீன்பிடித்துறை வளர்ச்சிக்கும் வேறுபாடு இருப்பதைக் காணலாம். சிங்கள மீனவர்களுக்கு அரசு கடன் உதவிகளையும் மற்றும் அத்தியாவசிய தேவைகளையும் செய்து அவர்களின் வாழ்வை ஓரளவு இன்னல்களற்று உயர்த்திவைத்துள்ளது. ஆனால் தமிழ்பேசும் மீனவர்களின் நிலையோ எத்தகைய முன்னேற்றமுமற்று பழைய நிலையிலேயே இருந்து வருகின்றது.

மீன்பிடித் தொழில் காலத்துக்குக் காலம் மாறுபட்டதாகவே இருக்கும். இதனால் சிங்கள பகுதிகளில் மீன்பிடித் தொழில் செய்யும் சிங்கள மீனவர்கள் காலபோகத்திற்கேற்ப இடம்பெயருவர். அவர்களுக்குத் தேவையான நவீன மீன்பிடி உபகரண வசதிகள் இருக்கும்போது அவர்கள் இடம்பெயர்ந்து வருடம் பூராவும் மீன்பிடித் தொழில்செய்வர். இதனால் தமிழ்பேசும் மீனவர்கள் தங்கள் காலபோகத்தின்போது இன்னோரன்ன இடர்ப்பாடுகளுக்குள்ளாகின்றனர். புத்தளம் தொடங்கி மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டுநகர், பொத்துவில்வரை யீறாகவுள்ள பகுதிகளில் சிங்கள மீனவர்கள்வந்து மீன்பிடித் தொழில் செய்கின்றனர். இதனால் எத்தகைய பிரச்சனை ஏற்படுகின்றதென்றால், வரும் சிங்கள மீனவர்கள் தங்கள் வசதிக்கேற்ப அதிகாரங்களைப் பயன்படுத்தி ஆதிக்கம் செலுத்துவது மட்டுமல்ல, அப்பகுதிகளில் நிரந்தர குடியிருப்புக்களை ஏற்படுத்தி தமிழ்பேசும் மீனவர்களுக்கு எண்ணற்ற இடர்ப்பாடுகளை இட்டுவருகின்றனர். புத்தளம், சிலாபத்துறை, தலைமன்னார், கொக்கிளாய், புடவைக்கட்டு, திருகோணமலை போன்ற பகுதிகளில் சிங்கள மீனவர்கள் குடியேறி, அவர்களது ஆதிக்கமாகவே அப்பகுதிகள் இன்று விளங்கி வருகின்றன. இவை மட்டுமல்ல, மீன்களைச் சந்தைப் படுத்துவதிலும் அவர்கள்தான் ஈடுபடுவதால் தமிழ்பேசும் மீனவர்கள் அத்தரகர்களுக்கும் இரையாகுகின்றனர்.

## முடிவு என்ன?

எனவே தமிழ்பேசும் மீனவர்கள் சமூக அமைப்பு முறையில் அனுபவித்துவரும் இன்னல்கள் மத்தியில் இலங்கை அரசின் இனவாதப்போக்கும் எவ்வளவு தூரத்திற்குப் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றதென்பதையும் பார்த்தோம். இத்தகைய இனவாதப்போக்கு அரசாங்கம் இருக்கும்வரை எத்தகைய பொருளாதார மாற்றுத் திட்டங்களை ஏற்படுத்தினாலும் முழுமையான விமோசனம் கிடைக்குமா? என்பது சந்தேகம். எனவே இன்று தமிழ்பேசும் மக்கள் எதிர்கொண்டிருக்கும் தேசிய இனப் பிரச்சனையின் விளிம்பில் அதற்கான மாற்றத்தின்மூலமே அதாவது தமிழ் பேசும் சகல தொழிலாள பாமரமக்களின் முழுமையான விமோசனத்திற்குமான போராட்டத்தின் மூலமே மீனவர்களுக்கும் ஏனைய தொழிலாள பாமர மக்களுக்கும் விமோசனம்என்பது அசைக்க முடியாத இறுதி முடிவு. அந்த நிலையை எற்படுத்துவதில் முன்னிற்கவேண்டியது தலையாயகடமை.

— லியோன் —

## இறந்தகாலங்களும் நிகழ்காலமும்

சேற்றில் விழுந்தன
பொன் மணி முடிகள்
எங்கே எமது
அம்பும், வில்லும்?

மீண்டும்
சங்க இலக்கியம்
படிப்போம்.
வீரயுகத்தை
எண்ணி மகிழ்வோம்

சில்லறை தேடி
தீக்குளிப்போம்
காக்கிகள் துரத்த.

கோபுர நிழல்களில்
கல்லாய் சமைந்தவைக்கு
பாலாபிடேகம் செய்வோம்
வீதிகளில் ஓடிய
இரத்தக் கறைகளை
போக்க.

கதவிடுக்குகளில் கிழிபட்ட
கற்புத்திரைகளை எண்ணிக்
கண்ணீர் வடிப்பதா?
மீண்டும்
அவற்றை மறந்துவிடலாம்.

சாம்பல் மேட்டில்
மறைந்துவிட்டன
பொன் மணிமுடிகள்தான்.
அம்பும் வில்லும் கூடவா?

— ஹம்சத்வனி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# சாதி உருவாக்கமும் — ஈழவர் எதிர்காலமும்

தமிழ் பேசும் மக்களின் பிரச்சனை வெறும் அரசியல் பிரச்சனையல்ல. அது உற்பத்தி உறவுகளால் உருவாக்கப்படும் சமூகம்சார்ந்த பிரச்சனைகள் பலவற்றை உள்ளடக்கி இருக்கிறது. இத்தகைய பிரச்சனைகளின் முழுமையான தீர்வுக்கு அரசியற்தீர்வின் பங்கைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளவேண்டும். இந்த வகையிலேயே சமூகம் சார்ந்த பிரச்சனைகளில் ஒன்றுன சாதிப்பிரச்சினைக்கும் அரசியற் தீர்வுக்கும் இருக்கும் இணைப்பையே இங்கு வெளிப்படுநத முயல்கிறேம். இவ்வெளிப்படுத்தலுக்குச் சாதிஎன்ற அமைப்புமுறையின் வரலாற்றையும், அதனைச் செற்போர் தொடுத்து அழிக்கலாமெனக் கனவுகாணும் ''அரசியல் ஞானி''களையும் சரியான கண்ணேட்டத்தில் பார்க்கவேண்டும். இவற்றைப் பொருள்முதல்வாத (Materialism) அடிப்படையிலும் இயங்கியல் கண்ணேட்டத்திலும் பார்க்கும்போதே முழுமையான மாற்றத்திற்கும், செயற்பாட்டிற்கும் வழிகோல முடியும்.

**நிலப் பிரபு பண்ணை - அடிமை முறையிலேயே சாதி, ஒரு அமைப்பு முறைக்குக் கொ ண்டுவரப்பட்டு சாதி அடிப்படையிலேயே அரசுகளும் நீதிகளும், ஒழுக்கங்களும், நெற்களும் உருவாக்கப்பட்டன.**

## தோற்றம்

மனிதனின் வரலாற்றை இயங்கியல் அடிப்படையில் அணுகும்போது பல சமூக அமைப்புக் கட்டங்களைக் கண்டுகொள்ளலாம். ஆதியில் பேதமற்றிருந்த பொது உடமைச் சமூகஅமைப்பு காலப்போக்கில் ஆண்டான்—அடிமை, நிலப்பிரபு — பண்ணையடிமை, முதலாளி—தொழிலாளி, சோசலிசம் ஆகிய அமைப்புக்களாக மருவி ஈற்றில் உயர்ந்த பொதுவுடமை (கம்யூனிச) அமைப்பாக மாறும்என்பதே நியதி. இத்தகைய தொடர்ச்சியான மாற்றங்களைப்பெற்ற சமூக அமைப்புகளின் அங்கங்களாகவே சாதி அமைப்புகளும் உருவாகின.

### புராதன பொதுவுடைமை:

ஆதியில் பொதுஉடமை நிலையில் இருந்த மக்கள், கூட்டம் கூட்டமாகக் காடுகளில் வாழ்ந்து வந்தனர். அப்போது அவர்களிடம் பேதங்கள் எதுவும் தோன்றியிருக்கவில்லை. கூட்டமைப்புகள் சமூக — பொருளாதார உறவுகளின் அடிப்படையில் நெருங்கிய இரத்த உறவுகளை உடையோரையே கொண்டிருந்தன. இக்கூட்டமைப்புக்களையே 'குலங்கள்' என்றழைப்பர்.

காலகதியில் குலங்களின் தன்மையில் ஏற்பட்ட மாறுதல்களால் தொழில் அடிப்படையில் பல உட்பூசல்கள் உருவெடுத்தன. ஒவ்வொரு குலங்களிலும் உருவெடுத்த உட்பகுப்புகள் ஏனைய குலங்களையும் தொடர்ச்சியாகப் பாதித்து பொது உடமைச் சமுதாய அமைப்பையே உருக்குலைத்தன. உருக்குலைவில் தோன்றிய தொழில ரீதியிலான வகுப்புகளே தமிழ்ச் சமுதாயத்தால் 'சாதிகள்' எனப்பட்டன. இச்சாதி அமைப்புகளில் தொழில்ரீதியிலான ஒருங்கிணைப்பையும் குல அமைப்புகளுக்குரிய ஒற்றுமை, ஒழுக்கங்களையும், இரத்த உறவுமுறையிலான இணைப்புகளையும் காணலாம்.

### ஆண்டான் அடிமை:

குல அமைப்புகளில் உண்டாகியிருந்த தொழில் ரீதியிலான குழறுபாடு தனிநபர்களிடையே பகைமைகளைத் தோற்றுவித்ததோடு, அவர்களிடையே போர்களையும் மூழவைத்தது. போர்களிலே வென்றவர்கள் தோற்றவர்களை அடிமைகளாகக் கொண்டனர். இந்நிலையில்தான் ஆண்டான்—அடிமைமுறை முளையெடுத்தது. இக்காலகட்டத்தில தொழிற்பிரிவினை வேகமாக நிகழ்ந்ததால், பல சாதிகளும் உருவாக வாய்ப்புக்கள் தோன்றின.

### நிலப்பிரபு பண்ணை அடிமை:

ஆண்டான்—அடிமை முறையில் அடிமைகள் தமது ஆண்டான்களின் கொடுமைகள் பொறுக்க முடியாமல் அவர்களின் பிடியிலிருந்து விடுபட்டு ஓடினர். இவர்களைக் கால்நடை வளர்ப்பிலும், விவசாயத்திலும் ஈடுபட்டிருந்தோர் சிறியசலுகைகளை வழங்கி அபகரித்துக் கொண்டனர். கால ஓட்டத்தில் இம்மாற்றம் ஆண்டானுக்கு நெருக்கடிகளை விளைவித்து, ஆண்டான்—அடிமை அமைப்பையே மாற்றியமைக்கும் வல்லமை பெற்றது. அதன் தொடரில் உருவானதே நிலப்பிரபு — பண்ணை அடிமைமுறையாகும். இங்குதான் சாதி ஒரு அமைப்பு நிலைக்குக் கொண்டுவரப்பட்டு சாதியடிப்படையிலேயே அரசுகளும், நீதிகளும், ஒழுக்கங்களும், நெறிகளும் உருவாக்கப்பட்டன.

மேலும் இவ்வமைப்பில் உருவாகியிருந்த சிற்றூர்கள் தமக்குள் தன் நிறைவுபெறும் வகையில் வேலைப் பிரிவினைகளைக் கொண்டிருந்தன. குடியானவன், கைவினைஞன், உழவன், தீண்டப்படாதவன் (அடிமை), ஏவலர்கள் எனப் பல பிரிவினர்களை உள்ளடக்கியிருந்தது. தன்னிறைவு பெற்றிருந்த ஊர்களில் காலப்போக்கில் உற்பத்திப் பெருக்கத்தாலும், சனத்தொகைப் பெருக்கத்தாலும் குறிப்பிட்டதொரு தொழிலுக்கு மேலதிக ஆட்கள் உருவாக நெருக்கடிகள் ஆரம்பித்தன. இவற்றைச் சமாளிப்பதற்காக வேற்று ஊர்களை நாடவேண்டியதாயிற்று. அப்போது ஒவ்வொரு சாதியும் தத்தமது நிலைகளுக்கேற்ப மணவாழ்க்கை உறவுகளையும், பண்பாட்டு உறவுகளையும் தேடி வேற்றூர்களுடன் தொடர்பு கொண்டன. சாதிமைப்பானது இம்முறைகளில் பெற்ற வளர்ச்சியால், தமக்கென ஒரு தனிவட்டத்துள் மடங்கி, போதிய வளர்ச்சிபெருத மந்தமான இயக்கத்தில் இருந்து வந்தது. சாதிகளுக்கிடையிலான சார்புவளர்ச்சியற்ற இத்தன்மையே உயர்சாதி தாழ்சாதி தோற்றங்களுக்கும் வித்திட்டது.

**சோசலிச அமைப்பு நிர்மாணத்திற்கு அச்சாணியாக விளங்கும் வர்க்கமுடன், சாதி ரீதியாக ஒதுக்கப்படும் மக்களை இணைப்பதன் மூலமே சாதி அமைப்புகளைச் சிதைவடையச் செய்யலாம்.**

இங்கு நிலப்பிரபுத்துவம் தனக்கே உரித்தான சில சட்டவரம்புகளை இட்டு தன் நலன் சார்ந்து செய்யப்பட்டதன் விளைவாக அடிமைகளாகவிருந்த கூறுகள் சாதியடிப்படையில் மேலும் இறுக்கமாக்கியது. அரசுஎன்னும் வன்முறைக்கருவியின்மூலம் சில கட்டுக்கோப்புகளை சாதியடிப்படையில்உருவாக்கித்தம்சுரண்டல்நடவடிக்கைகளை நிலைநிறுத்தியது எனலாம். இத்தகைய அரசியல் காரணிகளின் தொனிப்புகளை மேலும்பாதுகாத்து வளர்க்கக்கூடிய வகையில் சமயவிதிகளும் படைக்கப்பட்டு சாதிஅமைப்பு முறைகளால் சுரண்டல்களுக்காக, ஒடுக்கப்படும் மக்களுக்குத் திரை போடப்பட்டது. அத்துடன் பண்பாட்டுக் காரணங்களையும் விரிவுபடுத்திப் போலி நடத்தைவிதிகளைத் தோற்றுவித்தனர். உளவியல் ரீதியாகவும் இது மேலும் ஆழமாக்கப்பட்டது.

### புகுத்தப்பட்ட முதலாளித்துவ அமைப்புமுறை

நிலப்பிரபுத்துவ அமைப்புமுறை நிலவிய காலகட்டங்களில்தான் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரின் தொடர்ச்சியான படையெடுப்புகள் நடந்தன. இந்த அந்நிய ஏகாதிபத்திய முதலாளித்துவ வாதிகளின் படையெடுப்பின் பயனுல் இந்தியா இலங்கைபோன்ற நாடுகளில் நிலவிய நிலப்பிரபுத்துவ அமைப்பில் அதன் பரிணும வளர்ச்சியில் உருவாகவேண்டிய முதலாளித்துவ அமைப்பிற்குப் பதிலாக, திணிக்கப்பட்ட முதலாளித்துவ அமைப்பையே காணமுடிகிறது. இதனுலேயே நிலப்பிரபுத்துவத்தின் எச்சசொச்சங்கள் இன்றும் நிலவிவருகின்றன. இந்த அமைப்புமுறையை அறவே துடைத்தெறிய முடியாத நிலையிலுள்ள முதலாளித்துவம் அதற்கு இசைந்து அந்த அமைப்பு முறையையும் தனது சுரண்டலுக்கான வளமாகப் பயன்படுத்தி வருவதைக் கண்கூடாகப் பார்க்கலாம்.

## எதிர்காலம்

இந்த வரலாற்று நிகழ்வுகளை அறவே புறக்கணித்து சாதியமைப்பிற்கு முடிவுகட்ட முனைவது தோல்விகளையே தழுவிநிற்கும். எனவேதான் சாதியடிப்படையிலான மக்கள் தமிழ் பேசும் மக்களின் விமோசனத்திற்கு முன்னேடிகளாக விளங்கும் வர்க்கத்தின் அங்கம் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டுமெனக் கூறுகிறேம். அதுதான் சாதி அமைப்பையே உருக்குலைக்க வழி சமைக்கும். இதனை விடுத்து வெறுமனே பாராளுமன்ற பிரதிநிதித்துவத்திலும், சொற்போரிலும், சமபந்திபோசன நடவடிக்கைகளிலும் அவர்கள் சார்ந்த தொழில்களைச்செய்து காட்டுவதிலும் சாதி அழிந்துவிடப் போவதில்லை.

அ. கந்தசாமி

இன்றைய தமிழ் பேசும் மக்களின் தலைமை என்று கருதப்படுவது, இதுபோன்ற சீர்திருத்த நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டுவருவது யாவரும் அறிந்ததே! இப்பயனற்ற செயல்முறையை விடுத்து ஒரு சோசலிச நிர்மானிப்பிற்கு முன்னேடிகளை உருவாக்க வேண்டியதே ஒன்று அவசியமானதாகும். இம் முன்னேடிகள் சாதி ரீதியாக ஒதுக்கப்பட்டு வரும் மக்களை, ஈழ மலர்ச்சிக்கு அணிதிரள வேண்டிய மக்களின் அங்கமாகப் பரந்தே இயங்குவர்.

## பாடுபட்டுப் பயன் என்ன?

ஏரெடுத்து உழுகின்றுன் ஏழையவன் பூமிதனில்
காரெடுத்து ஓடவல்ல, காசுபணம் தேடவல்ல
ஏழையவன் பட்டஇடர் நாளையது தீருமென்று
எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணுகிறுன் இடர்தீர
பாடுபட்ட பலனெல்லாம் நாளையவன் கிடைக்குமென்று
ஏர்பிடித்த கையாலே அரிவாளெடுத்து செல்லுகிறுன்
கதிரறுத்து கழிவகற்றி கட்டுகிறுன் சாக்கதனில்
காளையவன் பட்டகடன் வட்டியுடன் கட்டிடவே
கட்டுகிறுன் வட்டியுடன் கருணையில்லாக் கயவரிடம்
கொட்டியவன் எடுத்துவிட்டு கொடுக்கின்றுன் வெறும்
—சாக்கை

ஏழையவன் பட்ட இடர் நாளையது தீருமென்று
எண்ணிய எண்ணமெல்லாம் மண்ணுகிப் போனதல்லோ
மிஞ்சியதோ ஒன்றுமில்லை கஞ்சிதனும் குடிப்பதற்கும்
குஞ்சியவன் குழந்தைகட்கு கூழ் கஞ்சி கொடுப்பதற்கும்
ஏரெடுத்தும் பலனில்லை அரிவாளெடுத்தும் பயனில்லை
எளியோரை உறிஞ்சுமிந்த சுரண்டலுள்ள சமூகம்தனில்
இந்த கேடுகெட்ட சமூகம்தனை அடியோடு மாற்றிடவே
உறுதிதனை மேற்கொண்டு புறப்பட்டான் புரட்சிமகன்.

கே. தீஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கதை

# தீர்வுக்கு வழி பிறந்தது

**ஈஸ்வரன்**

அவர்கள் வழமைபோல் அங்கு கூடியிருந்தார்கள். ஞாயிற்றுக்கிழமைகளில் இரவில் கதை கேட்பது வழக்கம். இன்றும் அதற்காகவே ஆவலோடு இருந்தார்கள். வழக்கமாக பெரியப்பு, காகமும் வடையும், ஆமையும் முயலும் மாதிரியான பழைய புளிச்ச கதைகளையே கூறிவருவார். இதனால் ஒரே கதைகளையே திருப்பித்திருப்பிக் கேட்ட அவர்கள் சலிப்படைந்திருந்தனர். இன்று பெரியப்புவின் மகன்தான் கதை சொல்லப்போறாராம். அதுதான் கூடியிருந்தவர்களுக்கு ஒரே சந்தோஷம்.

பெரியப்புவின் மகன் வந்தார். ''நான் சொல்லப்போற கதையைக் கவனமாகக் கேட்க வேணும். இது பழைய கதைகள் மாதிரி இல்லை........'' அவர்கள் அமைதியானார்கள். காதுகளைக் கூர்மைப்படுத்திக் கொண்டனர்.

• • •

ஒரு நாட்டில் ஒரு காடு இருந்தது. அக் காட்டில் நடுப்பகுதி மேடாக இருந்தது. அதை மேட்டுக்காடு என்பர். இதேமாதிரியே வடக்காடு, கிழக்காடு, மேற்காடு, தெற்காடு என்று மற்றைய பகுதிகளையும் பொதுவாக அழைத்து வந்தனர்.

இந்தக் காட்டிலே பல மிருகங்களும் பறவைகளும் வசித்து வந்தன. காட்டில் இருக்கும் இயற்கை வளங்களையும், உழைப்புகளையும் அபகரிக்க ஒரு அந்நிய நாட்டுக் கழுகு வட்டமிட்டு வந்தது. அது அக் காட்டில் தனது விருப்பத்தை பகிரங்கமாகச் சொல்ல விரும்பவில்லை. பதிலாக தனக்குச் சாதகமான ஒன்றை ஆட்சி செலுத்தும் வகையில் வழி கோல முயன்றது. அந்தக் காட்டிலே சில ஆண்டுகளுக்கொருமுறை பறவைகளும் மிருகங்களும் சேர்ந்து ஒருவரை தலைமை ஆட்சி செலுத்தும்படி தெரிவுசெய்யும் இதன்படி இம்முறை ஒரு பெரிய யானை தெரிவுசெய்யப்பட்டது. இதைக் கண்ட கழுகு சந்தோஷத்தால் இருப்புக் கொள்ளாமல் தவித்ததாம் இந்த யானை தனது ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கும் ஆலோசனை வழங்கவென ஒரு நரியை நியமித்தது. அந்நியக் கழுகின் கூட்டாளியாகிய யானை நரி மூளையிலேயே இயங்கும்.

இவ்வாறே அந்தக்காட்டின் ஏனைய பகுதிகளிலும் வாழும் மிருகங்களும், பறவைகளும் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும்இம்முறை வடகாட்டிலிருந்துதிரு. ஆந்தையும், கிழக் காட்டிலிருந்து திரு. பஞ்சவர்ணக்கிளியும், மேட்டுக் காட்டிலிருந்து திரு. சேவலும் தெரிவுசெய்யப்பட்டன. மேலும் மேற் காடு, தெற்காடு ஆகியவற்றிலிருந்தும்பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

இப்பிரதிநிதிகள் எல்லோரும் அடிக்கடி யானைக்குச் சொந்தமான ஒரு வீட்டில் கூடுவர். அந்தக் கூட்டங்களுக்கு யானைதான் தலைமை தாங்கும், அங்கு பல பேச்சுக்கள் பேசுவர்; முடிவுகள் எடுப்பர்.

சிலகாலமாக அந்தக் காட்டில் ஒரு சலசலப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது. சில மிருகங்களும் பறவைகளும் கோரிக்கை ஒன்றை வைத்தன. 'யானையும் அதனது கையாட்களும் பலவழிகளிலும் எமக்குத் துரோகம் விளைவிக்கின்றனர், இதிலிருந்து விடுபட எமக்கு ஒரேயொரு வழியே இருக்கிறது இது யானைக்கும் எமக்கும் இருக்கும் தொடர்பைத் துண்டிப்பதாகும். யானை என்றாலும் சரி பூனையென்றாலும் சரி எங்கள் விசயங்களில் தலையிடக் கூடாது. எங்கள் பிரச்சனைகளை நாங்களே தீர்க்க வகை செய்ய வேண்டும்'.

இந்தக் கோரிக்கையைக் கேட்ட யானை பிளிறியது. அந்த மிருகங்களையும், பறவைகளையும் அழித்தொழிக்கிறேனென்று கங்கணங்கட்டியது. தனது சகபாடிகளை ஏவிவிட்டு அவற்றைத் தாக்கியது. உயிர்ச்சேதம்விளைவித்தது. பெண் இனங்கள்மீது பலவந்தமாகப் புணர்ந்தது. இருப்பிடங்களை அழித்தது. உழைப்புக்களைச் சூறையாடியது. இறுதியாக நரியின் 'திறமை'யால் யானை அடங்கியது.

இத்தகைய செயல்களின் பின்பு கோரிக்கை மேலும் வலுவடைந்தது. பல மிருகங்களும், பறவைகளும் கோரிக்கையை வெல்லும் நோக்கில் இயங்கின. இவைகளில் தங்களால்தான் எல்லாம் முடியுமென பறவையில் ஒரு பகுதியினர் கூறினர். தாங்கள் செய்வது சரியானது என பேச்சுக்கள் பேசினர். அவர்களுக்குத் தலைமைதாங்குபவர் திரு. ஆந்தை.

இம்மாதிரியான சர்ச்சைகள் மத்தியில் திரு. சேவல், திரு. பஞ்சவர்ணக்கிளி, திரு. ஆந்தை ஆகியோர் என்ன செய்தார்கள்?

இந்தச் சேவல் பல நிறங்களைக்கொண்டது. இயற்கையாகவே சூரியன் உதிப்பதை உணராமல், தான் கூவித்தான் உதித்தது என்று கூறித் தம் பட்டமடிக்கும். பெரும் பிரச்சினைகள் மத்தியில் இருக்கும் மேட்டுக்காட்டு விலங்குகள், தங்கள் பிரச்சனைகளைத் தீர்க்குமாறு சேவலை அனுப்பின. ஆனால் சேவலோ அதைப் பொருட்படுத்தவில்லை. யானையுடன் கூடித்திரிந்து தனது தேவைகளைமட்டும் நிறைவு செய்துவந்தது.

பஞ்சவர்ணக் கிளியோ பல நிறங்களைக்கொண்டது. அதனது குரல் எல்லோராலும் விரும்பப்படுகிறது. மேடைகளில் நின்று கம்பீரமாகப் பேசும் ஆனால் ஆரோ சொன்னவற்றை யெல்லாம் சம்பந்தமில்லாது திரும்பத் திரும்பச் சொல்லும். சொன்னதைச் சொல்லும் பழக்கமுடைய கிளியும் யானையோடு கூட்டாளியாகியது.

ஆந்தையின் பாத்திரம் மிக முக்கியமானது. இதற்கோ இரவில் மட்டும்தான் கண் தெரியும். வெளிச்சத்தை இது சீவியத்தில் கண்டிராது. தனது பிரச்சார மேடைகளிலெல்லாம் இது பகலைப்பற்றிக் கூடாமல் டேசும். ஒரு நாள் இது பேசிக்கொண்டிருந்த கூட்டமொன்றில் திடீரெனப் புகுந்த சில மிருகங்கள் துண்டுப் பிரசுரம் ஒன்றை எறிந்தன.

'' தோழர்களே!

தலைவர் ஆந்தை அவர்கள் அடிக்கடி பகலைப்பற்றி அவதூறாகப் பேசுகிறார். உலகத்தில் பகல்நேரமே இருக்கக் கூடாதென்று சாடுகிறார். அவரிற்கு வெளிச்சத்தின் தன்மை பற்றித் தெரியாதென்பதற்காக இப்படிச் சொல்வதா? இது எதைப் போன்றதென்றால்.......... உலகத்தில் எங்களை விட சற்று வித்தியாசமான ஒரு இனம் இருக்கிறது. அதை மனித இனம் என்பார்கள். அவர்களில் இடதுசாரிகள் என்றும் வலதுசாரிகள் என்றும் இருக்கிறார்கள். சில வலதுசாரிகளுக்கு இடதுசாரிகள்பற்றி அடிப்படையாக எதுவும் தெரியாது. அவர்களைத் திட்டுவார்கள். பல புரளிகளைக் கிளப்பிவிடுவார்கள். இத்தகைய செயல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.''

இந்தத் துண்டுப்பிரசுரத்தைப் பார்த்த ஆந்தை மேலும் ஆத்திரமடைந்தது. தனது வெளிச்ச எதிர்ப்புத் தன்மையை விட்டுக்கொடுக்கவில்லை. தொடர்ந்தும் பிரச்சாரம் செய்துவந்தது.

ஆந்தைத் தலைமையால் எல்லோருக்கும் வரப்போகும் ஆபத்தை உணர்ந்த சில மிருகங்களும் பறவைகளும் ஓர் அமைப்பை உண்டாக்கின. அவற்றை ஆரோக்கியமாக இயக்கிவந்தன. இவர்கள் தமது இயக்க வளர்ச்சியில் சகல மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் ஒரு அறிக்கையை விட்டன.

''தோழர்களே!

நாம் யானையின் அட்டகாசத்தால் பெரிதும் கஷ்டப்படுகிறோம். இதிலிருந்து விடுபட வேண்டும், அதற்குச் சரியான பாதை வேண்டும். பாதையைப் புரிந்துகொள்ளுவதற்கு எமது வரலாற்றைப் பார்க்க வேண்டும். அதில் முக்கியமானவற்றை ஆய்வுசெய்ய வேண்டும். அதுதான் எங்களுக்குச் சரியான வழியைக் காட்டும். இதோ நாங்கள் செய்த ஆய்வுகளின் அடிப்படையில் சில கருத்துகளைத் தருகிறோம்.

எமது காட்டில் இருவகையான வர்க்கங்கள் உண்டு. ஒருவகை பறவைவர்க்கம். மற்றயது மிருகவர்க்கம். பறவை வர்க்கம் சொகுசாக இருக்கிறது. அது மிருகவர்க்கத்தை அடக்கி ஆண்டு சுரண்டி வருகிறது.

எங்கள் எருதுகளும், ஆடுகளும் சாணமும், பிழுக்கையும் சலமும் இட்டு வளர்க்கும் பயிர்களிலெல்லாம் பழம் பழுத்தவுடன் பறவைகள் பறித்துவிடுகின்றன. பசுக்களில் காகங்கள் ஏறிச் சவாரி செய்கின்றன. நாங்கள் களைப்போடு உறங்கும்போதெல்லாம் பறவைகள் ஒலி யெழுப்பிக் குழப்புகின்றன. இந்தப் பறவைகளுக்கோ எங்களைப் பற்றிக் கவலையில்லை, கூட்டம்கூட்டமாக வருவார்கள்; 'கீயோ மாயோ' என்று கத்துவார்கள்; தானியங்களைக் கெத்துவார்கள்; எங்களுக்கோ எதுவும் மிஞ்சுவதில்லை. எங்கள் எருதுகள் காய்ந்த வைக்கோல்களை யல்லவா உண்கின்றன. இவ்வாறாகப் பலவழிகளிலும் பறவைவர்க்கத்தால் சீரழிக்கப்பட்டு அடிமைகளாகிவிட்டோம், இன்று எமக்கு ஒன்றே ஒன்றுதான் வேண்டும் அதுதான் விடுதலை.

பறவைவாதியான கழுகு தனது ஆக்கிரமிப்பை நடைமுறைப்படுத்த யானையைக் கையாளாக்கியுள்ளது. ஆந்தையும், பஞ்சவர்ணக்கிளியும், சேவலும் கழுகு போன்ற பறவைவாதிகளே, இவற்றில் ஆந்தை மற்றையவற்றிலும் சிறிது வேறுபாடான தென்பது உண்மைதான். எனினும், ஆந்தையிடம் பறவைவாத மனநிலை இருக்கிறது. இவர்கள் மிகவும் பின்தங்கியிருக்கும் மேட்டுக்காட்டையும், கிழக்காட்டையும் கவனிப்பதில்லை.

எனவே வடகாடு, கிழக்காடு, மேட்டுக்காடு ஆகியவற்றில் வாழும் எமது சகல தோழர்களையும் கவனத்தில் எடுத்து, அவர்கள் உள்ளடங்கியுள்ள பிரதேசங்களை, அங்கு வாழும் மிருகங்களைப் பெரும்பான்மையாகவும், முற்போக்கான பறவைகளை இணைத்ததுமான ஒரு அமைப்பினூடாக எமது பிரச்சனைகளை வெல்வோம். இதுவே எமது பிரதேசங்களில் விடிவிற்கு வழிகோலும்."

• • •

பெரியப்புவின் மகன் கதையை நிறுத்தினார். கதையைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு இது தொடர்கதை என்று தெளிவாகிவிட்டது. அவர்கள் அனைவரும் அமைதியாகவிருந்தனர்.

ஒருவேளை அவர்கள் சிந்தனை அறிக்கையில் லயித்திருக்கலாம்.

( முற்றும் )

---

'' கலை மக்களுக்குரியது. அது உழைக்கும் மக்களின் உள்ளங்களில் ஊடுருவிச் செல்கிறது. கலை மக்களின் அன்புக்கும், மதிப்புக்கும் பாத்திரமாக வேண்டும். அது மக்களின் உணர்வுகளை, சிந்தனைகளை, அபிலாசைகளைப் பிரதிபலிப்பதுடன் அவற்றை உயர்த்த உழைக்க வேண்டும். அது மக்களின் செயல் வேகத்தைத் தூண்டுவதுடன் அவர்களின் ரசனை உணர்வை வளர்த்தெடுக்கவும் வேண்டும்.''

— லெனின்

---

## சரியாகச் செயற்படு

பக்கென்று வெளித்துவரும் பகலெல்லாம் உழையுமடா
எப்போது வெளிக்குமென்று இருக்காதே சும்மாநீ
தற்போது வெளிக்கிட்டு சரியாகச் செயற்பட்டால்—நல்ல
தர்க்கீக முடிவுகிட்டும் ஈழத்து மக்களுக்கே,

கிராமம் தோறும்-சென்று விரைவாக புகுத்துமடா
தருணமிதில் செய்யாவிட்டால் சரியான கஷ்டமடா
சிறுமனிதன் என்றெண்ணி செயலற்று நிற்கின்றாய்
— உன்னைப்
பெருமனிதனுக்க ஒரு வழியே தர்க்கீகம்,

— தணிகை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# வாசகர் வாக்கு

முதல் வெளியீடே பாட்டாளி வர்க்கத்தின் விழிப்புணர்ச்சியைத் தூண்டக்கூடிய விதத்தில், சமுதாய அடி மட்டத்தில் ஒரு எழுச்சியைத் தூண்டக்கூடிய விதத்தில் கருத்துக்களை தாங்கி வெளிவந்து இருக்கிறது. இன்று தமிழின விடுதலை பற்றிப் பேசும் பல பத்திரிகைகள் புற்றீசல் போல வெளிவந்த வண்ணம் இருக்கிறது. அவை யாவும் ஒன்றை மற்றொன்று விமர்சித்துக் கொண்டிருக்கின்றனவே தவிர சமுதாய மட்டத்தில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த தவறி வருகின்றன. அந்த இடைவெளியைத் ''தர்க்கீகம்'' ஈடுசெய்யும் என நம்புகிறேன்.

பரஞ்சோதி
பாலத்தடிச்சேனை,
மூதூர்.

சமுதாய மட்டத்தில் ஏழைப் பாட்டாளி மக்கள் புரிந்துகொள்ளக்கூடிய விதத்தில் கருத்துக்களைக் கூற வேண்டுமே தவிர தத்துவக் கும்பலாக பத்திரிகையை வெளியிட்டால் சாதாரண மக்கள் புரிந்து கொள்வது கடினமாகும் என்பதே எனது கருத்தாகும்.

முத்துக்குமார்
டன்சீன் எஸ்டேட்,
பூண்டுலோயா.

அமுதை மொழியாகக் கொண்டவர்கள் அடிமைகளாக அதிகாரக் கும்பலின் ஆதிக்கத்துள் அடங்கிவிட்டார்களே என்று எண்ணி மனம் கலங்கிய வேளையில்,

இல்லை எங்கள் இனம் ஓய்வதா? நாங்கள் அடிமைகளாக சாவதா? என்ற கேள்விக் கணையுடன் தமிழ் மணம் வீசி, இந்தத் தமிழன் கையில் தவழ்ந்து வந்து சேர்ந்தது 'தர்க்கீகம்'.

'தர்க்கீகம்' உலகம் வாழ் ஒவ்வொரு தமிழ் நெஞ்சத்தின் கையிலும் கிடைக்க வகை செய்யுங்கள். தமிழர் திரண்டெழ வழியமையுங்கள்.

வாழ்க தமிழினம் !
வளர்க தமிழ்ப் பணி !!

தவபாலன்
திருமலை.

தர்க்கீகத்தின் வருகை பல பயனுள்ள விவாதங்களை எழுப்பியது. பத்திரிகை அமைப்பும், அது தாங்கி வரும் கருத்துக்களும் ஏனைய பத்திரிகைகளைவிட வேறுபாடானதாக அமைந்திருக்கிறது. சாதாரண மக்களுக்கு விளங்கக்கூடிய மொழி நடை இருக்கவேண்டும் என்பது எனது கருத்தாகும்.

பத்திரிகை ஆசிரியர் குழுவிற்கு மனமுவந்த பாராட்டுகளைத் தெரிவிக்கும் வேளையில் தொடர்ந்து வெளிவர வகை செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

நசீர்
லண்டன்.

தந்தைக்குப் பின் தளபதி தலைவர் ஆவாரா? என்ற கட்டுரை உண்மையில் சாதாரண மக்களுக்கு விளங்கக் கூடிய தமிழில் இல்லை. அது மட்டுமல்ல அமிர்தலிங்கத்தைப் பற்றி அவர் தலைவர் ஆகத் தகுதியில்லை. என்பதை கூடிய காரணங்களோடு நிறுவத் தவறிவிட்டீர்கள்.

2வது வெளியீடு முதலாவதைவிட பலவிதத்திலும் பல மடங்கு நன்றாக உள்ளது, தொடர்ந்து இப்படியே போக எனது ஆசிகள்.

மக்கள் பிரச்சினைகளையும் மக்கள் புரட்சி சம்பந்தமான விடயங்களையும் ஈழவர் நிலையில் அவற்றை ஆராய்ந்து, ஈழவர் பிரச்சனைகளை இடத்துக்கு இடம் எவ்வாறு தீர்க்கலாம் என்பதையும், ஈழவர் புரட்சிப் பாதை எப்படியிருக்க வேண்டும் என்பதையும் ஈழவர் விளங்கக்கூடிய விதத்தில் நல்ல நடையில் எழுதினுல் சிறப்பாக இருக்கும் என நினைக்கிறேன்.

* * *

இந்த இதழில் இருந்து இப்பகுதி தொடர்ந்து வெளிவர இருப்பதால் ''தர்க்கீகம்'' வாசகர்கள் பத்திரிகை பற்றியும் அதன் கருத்துக்களைப் பற்றியும் தத்தமது அபிப்பிராயங்களை எழுதும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்பு முகவரி :

ஆசிரியரவை,
தர்க்கீகம்,
தபால் பெட்டி எண்: 103.
யாழ்ப்பாணம்.

## அக்டோபர் புரட்சியும் (3-ம்பக்கத் தொடர்)

ஒருமைப்பாட்டு இயக்கம்) ஏகாதிபத்தியத்திற்கெதிராக அதன் பொருளாதார, சமூக, அரசியல் கெடுபிடிகளிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள, சமாதானத்திற்காகவும் ''புதிய பொருளாதார உறவுகளுக்காகவும்'' போராடுவது கண்கூடு.

**மூன்ருவதாக:** ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் விடுதலைக்காகவும், விமோசனத்திற்காகவும் வழிகோலாத வரைக்கும், ஒடுக்கும் தேசிய இனத்தின் பாட்டாளி வர்க்கம் தனது விமோசனத்திற்கு வழிவகுக்கமுடியாது என்ற உண்மையை தெட்டத் தெளிவாக அக்டோபர் புரட்சி எடுத்துக் காட்டுகின்றது. அக்டோபர் புரட்சியின் வெற்றிக்குப் பலகாரணங்கள் உண்டு. ஆனுல் ருஷ்சியாவினுல், ஒடுக்கப்பட்ட தேசிய இயக்கங்களின் சுதந்திரத்தையும், இறைமையையும் மதித்து அவர்களின் சுயநிர்ணய உரிமையை முழுதாக ஏற்று அந்தத் தேசிய இயக்கங்களின் பாட்டாளி வர்க்கத்துடன் தோழமையுணர்வுடனும், சமத்துவ ரீதியிலும் இணைந்து போராடியதுதான் அதன் வெற்றிக்கு முக்கிய காரணங்களில் ஒன்று என்பதை மறக்க முடியாது. அக்டோபர் புரட்சியின் சர்வ தேசியத் தன்மைக்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டு.

புரட்சிப் பிரசவத்திற்கு அத்தியாவசியமான திட்டங்கள், வழிவகைகள், அமைப்புகள், தந்திரோபாயங்கள் பற்றி பொதுவாக புரட்சிகர இயக்கம் பற்றி அக்டோபர் புரட்சி தரும் பாடங்கள் ஈழவரைப் பொறுத்தமட்டில் கற்றுத் தேற வேண்டியவையே. புரட்சிக்கான சூழ்நிலைகள் உருவாகியிருக்கலாம். ஆனுல் தொழிலாள வர்க்கத்தை முன்னணியாகவும், விவசாயிகளையும் ஏனைய ஒடுக்கப்படும் மக்களைப் பின்னணியாகவும் இணைத்து மக்கள் புரட்சி ஒன்றிற்கு வித்திடக் கூடிய திட்டங்களையும், வழிவகைகளையும், அமைப்புக்களையும் உருவாக்காத பட்சத்தில் புரட்சியின் முழு வெற்றிக்கும் வித்திட முடியாது. உழைக்கும் மக்களின் அன்ருடப் பிரச்சனைகளை ஒட்டுமொத்தமாகப் பிரதிபலிக்கக் கூடிய இயக்கமும், அந்தப் பிரச்சனையின் தீர்வுக்கான திட்டங்களை நடைமுறைப் படுத்தக்கூடிய புரட்சியாளர்களும் உருவாகாத நிலையில் மக்கள் புரட்சிக்கான அடித்தள சூழ்நிலை உருவாகவில்லையென்றே அர்த்தம். ஈழவர் புரட்சிக்கான இலட்சிய சூழ்நிலை (Objective Conditicns) உருவாகியுள்ளதென்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனுல் இதன் வெற்றி. தோல்வி அதை வழிநடத்தும் முறையிலும், முன்னெடுத்துச் செல்லும் வகையிலும் தான் தங்கியுள்ளது.

ஈழவர் புரட்சிக்கான அடித்தள சூழ்நிலை (Subjective Condition) உருவாகிவிட்டது என்ற அங்கலாய்ப்பில் அங்கொரு கொலையும், இங்கொரு கொள்ளையும் செய்வதன்மூலம் மக்களைக் 'கெம்பி' எழச்செய்து விடலாம் என்ற இடதுசாரி சந்தர்ப்பவாதிகளின் கற்பனுவாத தின் மூலமோ, அல்லது கூட்டணியினர் ஒன்றுமே செய்யவில்லை அதனுல் அவர்களின் நடவடிக்கை ஒவ்வொன்றையும் எதிர்ப்பதன் மூலம்தான் ஈழவர் புரட்சிக்கு வித்திடலாம் என்ற கபட வாதம் செய்யும் ''பகிஷ்கரிப்புக் குழுக்கள்'' மூலமோ ஈழவர் புரட்சிக்கு வழிவகுக்க முடியாது என்று அனுபவ ரீதியாக ஈழவர்கள் புரிந்துவிட்டார்கள் என்ருல் மிகையாகாது.

இவ்வகையில் இன்றைய காலகட்டத்தின் தன்மைகளை ஆராய்ந்து அதனடிப்படையில் திட்டமும் செயலும் இணைந்த நடவடிக்கைகள்தான் ஈழவர் புரட்சிக்கு வித்திடும் எனப் பலரும் ஒத்துக் கொண்டாலும், இதை வழிநடத்தவும், முன்னெடுத்துச் செல்லக் கூடிய இயக்கம் பற்றிய சிந்தனைக் குளறுபாடுகள் பரவலாகவுள்ளதை ஈழவர் விமோசனத்தில் அக்கறை கொண்ட யாரும் கவனிக்கத் தவறக்கூடாது.

''தனிமனித சுதந்திரம்'' என்றும் ''ஜனநாயக-மத்தியத்துவம்'' என்றும், இயக்கம் ஒரு ''திறந்த அரங்காக'' இருப்பதன் மூலமே பலரின் கருத்துக்களையும், எண்ண நிலைப் பாட்டையும் அறிய முடியும். ஆகவே புரட்சிகர இயக்கம் ''விவாத மேடையாக'' அமைய வேண்டும் என்றும் பலர் பைத்தியக்காரத் தனமாய் பித்தலாட்டம் செய்வதை இன்று அவதானிக்கலாம்.

புரட்சிர இயக்கம் ''விவாத மேடையல்ல'' மாருக அதன் கருவிலும், உருவாக்கத்திலும், வளர்ச்சியிலும் தொழிலாள, விவசாய வர்க்கத்தின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களின் விமோசனத்திற்காக பூர்சுவாக் கும்பலை கூண்டோடு கைலாயம் அனுப்பக்கூடிய ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்'' ஒன்றை உருவாக்குவதே புரட்சிகர இயக்கத்தின் முழு நோக்கமும். இதனுல் தான் புரட்சிகர இயக்கமானது எந்தவித சலன சபலமுமின்றி, தயக்கமின்றிப் பொறுப்புக்களை ஏற்று ஒரேயொரு குறிக்கோளை அடையக்கூடிய திராணியை யுடையதாக அமைய வேண்டும். இந்த வகையில்தான் புரட்சிகர இயக்கத்தின் மத்தியப் படுத்தப்பட்ட புரட்சிகர ஜனநாயக ரீதியில் அமைந்த உள்ளமைப்பும், நடவடிக்கைகளும் அமையும்.

லெனினிய இயக்கம் பற்றிய தத்துவமும், அதன் அடிப்படையில் செயல் முறைப் படுத்தப்பட்ட அக்டோபர் புரட்சியும் தரும் பாடங்கள் இவையே.

## தோட்டத் தொழிலாளர் ..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கு கூலி வேலைகள் வழங்கப்படுகின்றன. ஒரு சிலருக்கு, நடத்துனர் (கன்டக்டர்) போன்ற வேலைகளும் வழங்கப் படுகின்றன. இந்தச் சிறு தொகையினரையே இலங்கையில் பெரிதுபடுத்தி பசப்பு வார்த்தை பேசுகிருர்கள். இந்தியப் பிரதேசங்களில் குடியேறுவோர் கடும் வெய்யில் முதலான இயற்கை காரணிகளால் அவதிப்பட்டு நோய்வாய்ப் படுகிருர்கள். சிலர் இறந்தும் உள்ளனர். சுமார் ஒரு குடும்பத்துக்கு ஒருவர்வீதம் கூட வேலை வழங்கப்படுவதில்லை. இதனுல், கொடும்பசி குச்சுக் குடிசைகளை விட்டு ஓடவைக்கும். பெண்களும், ஆண்களும், பசியைப் போக்க என்னவும் செய்யும் அவலத்தை யாரும் வெளிப்படையாகப் பார்க்கலாம். இது எல்லாவற்றிற்கும் மேலாக் குடியிருப்பு நிலங்களுக்கு, முன்னர் சொந்தமாயிருந்தவர்களால் ஏளனமாகப் பார்க்கப்பட்டு, சில இடங்களில் தாக்கப்பட்டும் உள்ளனர்.

இந்த இழிந்த நிலையில் நிவாரணம் தேடி முறையீடுகளும் நடந்திருந்தன; போராட்டங்களும் நடந்திருந்தன. ஆந்திராவில் குண்டக்கல் என்னும் பகுதியில் இருந்து சுமார் 52 குடும்பங்கள் சென்னையிலுள்ள புனர்வாழ்வுக் கழகத்தின் எழிலகக் கட்டடத்தை சுற்றி வளைத்து உண்ணுவிரதப் போராட்டம் நடத்தின. இது வெற்றி பெருத நிலையில் மீண்டும் அதிகாரிகளினுல் வந்த இடத்திற்கே திருப்பி அனுப்பப்பட்டனர். இது போலவே சுமார் ஒரு வருடத்துக்கு முன்பும் செரளா என்னும் இடத்திலிருந்தும் சென்னைக்கு ஓடிவந்தனர்.

இவற்றையெல்லாம் மூடிமறைக்கும் இலங்கை வேஷதாரிகள் இன்னமும் ஆசை வார்த்தைகளையே தூவி வருகிருர்கள்.

இவ்வகையில் இலங்கையிலும் இந்தியாவிலும் விரக்தியோடு அவலப்படும் இந்நிலையில்தான் முன்பு கூறியதுபோல் எமது எதிர்காலம் என்ன என்ற இதய வேட்கைக்குத் தீர்க்கமான பதில் தேடி நின்கிருேம்.

இலங்கையில் தமிழ்பேசும் மக்கள், சைவ' இஸ்லாமிய, கிறிஸ்தவ – பேதங்களுக்கு அப்பாற்பட்டு, மொழிரீதியில் இனங்காணப்பட்டு தாக்கப்பட்டு வருவதே யதார்த்தம் இத் தாக்குதலில் மலையகம் எப்போதும் பெரும் பாதிப்புகளை அனுபவித்து வந்துள்ளமையும் பிரதானமானதாகும். அதாவது முதலாளித்துவ அமைப்பில் அதன் புரட்சிகரமான சமூக மாற்றத்துக்கு முன்நிற்பது ஒரு பாட்டாளி வர்க்கமே! இதனுல் தான் அது முதலாளித்துவ வாதிகளால் இனங்கண்டு தாக்கப்படும் நிலைக்கு ஆளாகிறது. இந்த உண்மையிலும், வரையறுப்பிலும் நின்று கொண்டுதான் மலையக மக்கள் பெருமளவில் தாக்கப்படும் சம்பவங்களைப் பார்க்க வேண்டும். அப்போது தான் தமிழ்பேசும் மக்களின் பிரச்சனைகளுக்கான முழுத் தீர்வும், மலையக மக்களுடன் ஏனைய தமிழ் பேசும் தொழிலாள, விவசாயப் பாட்டாளிகளை இணைந்து போராடுவதன் மூலமே கிடைக்கப் பெறுமென்பதை யாவரும் புரிந்து கொள்வர்.

ஒரு சோசலிச நிர்மாணத்திற்கு அமைய வேண்டிய மேற்படி நியதியை, குருட்டுத் தனமாகப் பார்க்கும் தொழிற்சங்கவாதிகளும், மற்றும் 'அணி'யினரும் தம்மால் ஒரு திடமான வழியைக் காட்டி வழிநடாத்த முடியாதவர்களாக இருப்பதை நாம் காணவில்லையா? அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது வர்க்கம் சார்ந்து அவ்வப்போது எழுப்பும் கோரிக்கைகளையும். திணிக்கும் (தனித் தேசிய இன) கோஷங்களையும் நாம் நன்கு அறிவோம். இவர்கள் சார்ந்துள்ள வர்க்கம் எப்படி எங்களை புறக்கணித்து நடந்து வருகிறதோ, அதேபோல் இக்கட்சிகளும், தொழிற்சங்கங்களும் எமது இதய வேட்கையை அலட்சியம் செய்வது ஒன்றும் வியப்பிற்குரியதல்ல. எனவேதான் இன்றைய காலகட்டத்தில், வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளிட்ட பாட்டாளிகள், தமிழ் பேசும் மக்களின் விமோசன போராட்டத்தின் முன்னணியினரே என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிருேம். இவர்களை வர்க்க ரீதியாக ஒருங்கிணைக்கும் வல்லமையே உண்மையான புரட்சிகர இயக்கத்தின் உட்சக்தியாகும். இப்புரட்சிகர இயக்கம் வெளிப்படும் போதே, ஏமாற்றுப்பேர் வழிகளின் கூக்குரல்கள் மரண ஓலங்களாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மக்கள் அடிப்படை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றம் மட்டுமல்லாமல் சமூக மாற்றம் கூட ஏற்படவில்லை. இதனாலேயே இன்று இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்களுடைய தேசிய அந்தஸ்து பிரச்சனை கூர்மையடைந்து வெறும் இனவாரிப் பிரச்சனையாக மட்டுமல்லாமல் ஈழக் கோரிக்கை என்ற ஈட்டி முனைக்கும் தள்ளப்பட்டுள்ளது. ஆகவே இந்த ஈழப் பிரகடனம் பண்ணுகத்து சோசலீச ஈழப் பிரகடனமாக அமைந்துவிடாமல், அடிப்படை மாற்றத்தைக் காணக்கூடிய ஒரு புரட்சிப் பாங்கிலானதாய் அமைய வேண்டும். அதனாலேயே ஈழவருக்கான சோசலீச சமுதாயம் மக்கள் அடிப்படையிலான புரட்சி பிரவசமாக அமையவேண்டும் என வற்புறுத்துகிறோம். அதை உருவாக்கிக் கொடுக்கக் கூடியவர்களை உருவாக்க வேண்டும். அதாவது மக்கள் தாமாகவே எழுச்சி அடைவதில்லை. அந்த எழுச்சியை உருவாக்கக் கூடிய புத்தி ஜீவன்களை (அல்லது அறிவானவர்கள்) உருவாக்கவேண்டும் அதுவே நமது முதற்கடமை; தர்க்கீகத்தின் தலையாய பொறுப்பு.

கடமை வேறு; பங்களிப்பு வேறு. உணர்ச்சிக்கும், உணர்வுக்கும் எத்தனை வேறுபாடோ அதே போல் தான் கடமைக்கும் பங்களிப்புக்கும் இடைப்பாடு. உணர்ச்சியும் உணர்வும் பிணைக்கப்படும்பொழுது பிரதிபலிப்பது தான் மனித எழுச்சி. இதை மக்கள் எழுச்சியாக்க வேண்டும். அதற்கு அணிவகுப்பதே கடமையுணர்ச்சியுள்ள அறிவானவர்களின் பங்களிப்பு. இந்தப் பங்களிப்பில் பல அடையாளங் காணக்கூடிய வர்க்க நலன் சார்ந்த வேறுபாடுகளைக் காணலாம். இதன் பிரதிபிம்பமே, தலைவர் அமிர்தலிங்கம் கூறியது போல் ''எம் இளைஞர்கள் மத்தியிலே வலதுசாரி–இடதுசாரி, தீவிரவாதிகள் – அதிதீவிரவாதிகள், தீவிர தமிழ்ழ வாதிகள்...'' என்ற பல்வேறு கூறுகளை இயங்கியல் ரீதியில் ஈழவர்களின் இன்றைய அரசியல் சூழ்நிலையில் அவதானிக்க கூடியதாக இருக்கிறது. ஆனால், ஆரம்பத்தில் கோடிட்டுக் குறிப்பிட்டது போல், நாம் நாடும் சோசலீச சகாப்தத்தை எஃகுவோர் மேற்கூறிய அணிகள் மக்கள் போராட்டத்தின் பிரதிபலிப்பா? என்ற கேள்விக்குறியை எழுப்ப வேண்டியது அவசியமாகிறது. இதனாலேயே, அர்த்தமற்ற கோரிக்கைகளை முன்வைத்து மக்களின் பரபரப்பை தூண்டி (Spontainity) அவர்கள் ஆதரவைப் பெறுகிற சக்திகட்கும், அதனால் தூண்டப்பட்ட சக்திகள் வன்முறையில் ஈடுபடுவதும் நியதியே என்றோம். இந்தச் சூழ்நிலைக்கும் மக்கள் போராட்டத்திற்கும் பாரிய வேறுபாடு உண்டு. இதைத் தர்க்கீகவாதிகள் புரிந்து கொள்ளவேண்டும். பூர்ஷுவா ஜனநாயக வாதிகள் எழுப்பும் அர்த்தமற்ற கோரிக்கைகளால் தூண்டப்படும் வன்முறைக்கும் மக்கள் போராட்டத்திற்குமான இடைக்காலத்தில் இன்னோரன்ன எண்ணப்பாட்டு சிந்தனையுடையோர் வெளிக்கிளம்புவது உண்டு. இவர்கள் தத்தமது வர்க்க அடிப்படையில் இயங்குவதோடு மட்டுமல்லாமல் தமது எண்ணப்பாட்டு சிந்தனையையும் ஒரு பாரிய சக்தி என்று நினைப்பதும் உண்டு. முதலில் ஜனநாயக வாதிகளை விரோதித்துக் கொண்டு ஈழவிடுதலைக்கு முற்படுவார்கள். மாணவர்கள் தமக்கென அமைப்பு ஏற்படுத்துவார்கள். இளைஞர்களும் தமக்கென அமைப்பு ஏற்படுத்திக்கொள்வார்கள். இவற்றில் விரக்தியடைந்தோர் தமது விழிப்பைக் காட்ட ''ஈழ விடுதலைக்கு வழிகாட்டி 'யாக முற்படுவர். ''அங்கு ஒரு கொலை, இங்கு ஒரு கொள்ளை'' வன்முறையிலும் ஈடுபடுவார்கள் என்று விடுதலையின் பெயரில் நடைபெறும். பின் இது தவறு என நினைத்து ''புதிய பாதை'' யிலும் போவார்கள். சிலசமயங்களில் புதிய ''உணர்வு''ம் வரும். இதற்கும் அப்பாற்பட்டு ''மனிதன்'' என்ற எண்ண ''ஊற்று'' பெற்று தார்மீக அடிப்படையிலும் இயங்குவார்கள். இதற்கும் மக்கள் சக்திக்கும் மலைக்கும், மடுவுக்கும் உள்ள வேறுபாடு என்பதை இயங்கியல் ரீதியில் ஆய்வோரும், அணுகுவோரும் அறிவார்கள். உதாரணத்திற்கு பல்வேறு தேசிய இனங்கள் வாழுகின்ற சோவியத் ஒன்றியத்தில் மக்கள் அடிப்படையிலான ஒரு அடிப்படை புரட்சி ஏற்பட்டது. இந்தப் புரட்சியை ஏற்படுத்திய சக்தி லெனின் தலைமையிலான ''போல்சுவிக்'' புரட்சிவாதிகளே. ஆனால் ''போல்சுவிக்'' புரட்சிவாதிகளால் 1917 அக்டோபர் மாதம் பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகார ஆட்சியை நிலைநிறுத்தமுன், அந்த நாட்டில் ஏற்பட்ட பல்வேறு அரசியல் கட்சிப் பூசல்களை புரிந்தவர்களுக்கு ஏன் அடிப்படை மாற்றம் ஏற்படவேண்டும் என்பதன் பொருள் புரியும். அங்கு ''ஜார்'' மன்னனை வீழ்த்துவதற்கு பல சக்திகள் முன்னின்றன. அவற்றுள் முக்கியமானவை ''மென்சுவிக்குகள்'' என்ற பூர்ஷுவா ஜனநாயக வாதிகள், ''பந்து'' (Bandu) என்ற யூதர்களைக் கொண்ட நிறுவனம்; ''நரோடினிக்'' (Narodinic) என்ற இயக்கம்; தவிர ''ரபோச்சிடிலோ'' (Rabochdilo) போன்ற பல்வேறு இடதுசாரி இயக்கங்களோடு ''கிரேடோ'' (Credo) என்ற வன்முறை இயக்கமும் இயங்கியது. ஆனால் இவையெல்லாம் இறுதியில் மக்கள் போராட்டத்தை நடத்தி மக்களுக்கான ஒரு மக்கள் ஆட்சியை ஏற்படுத்த முடியவில்லை. பதிலுக்கு மக்கள் போராட்டத்தின் மூலம் மக்களாட்சியை கைப்பற்றி அவர்களுக்கான ''சோசலிச சகாப்தத்தை'' நடத்துவதற்கான பாட்டாளிவர்க்கத்தின் சர்வாதிகாரத்தை நிலைநிறுத்தியது ''போல்சுவிக்கே''. ஆனால் இந்த ''போல்சுவிக்'' புரட்சிவாதிகளின் சரித்திரமே ஒரு பெரும் பாடமாக ஈழவருக்கு உதவவேண்டும். ''போல்சுவிக்'' என்றால் ருசிய மொழியில் பெரும்பான்மை என அர்த்தம். இடதுசாரிகள் இணைந்து தம்மை பெரும்பான்மையினர் என்ற எண்ணப்பாட்டில் ''போல்சுவிக்'' என அழைத்தனர். தமது எதிரிகளான ஜனநாயகவாதிகளான சிறுபான்மையினரை ''மென்சுவிக்'' என்றும் ஒதுக்கினர். இந்த இடதுசாரிகளான 'போல்சுவிக்குகள்' எல்லோரும் புரட்சி வாதிகள் அல்ல. அதனால் தான் லெனின் ஆரம்பித்த ''இக்ஸ்ரா'' பத்திரிகையை கைப்பற்றிக்கொண்டு தம்மைத் தாமே போல்சுவிக்குகள் என பேரம் பேச முற்பட்டனர். அது மட்டுமல்லாமல் லெனின் தலைமையையும் நிராகரித்தனர். ஆனால், புரட்சிப் பாங்கிலும், மக்கள் போராட்டத்திலும் நம்பிக்கை கொண்ட லெனின் படிப்படியாக தோழர்களை உருவாக்கி, அதாவது மக்கள் போராட்டத்துக்கான தோழர்களை உருவாக்கி, ''போல்சுவிக்'' கையும் இறுக்கமாக்கி அதனடிப்படையிலான கட்சியையும் உருவாக்கி மக்கள் போராட்டத்தை நடத்தி, சோசலிச சகாப்தத்துக்கான பாட்டாளி வர்க்க ஆட்சியையும் ஏற்படுத்தினர். இதுவே இயங்கியல் நியதி என தர்க்கீகவாதிகள் புரிய வேண்டும். இந்த ஆட்சி கடந்த 64 ஆண்டுகளாக திடகாத்திரமான ஆட்சியாக நிலைத்து வருகிறது. இதற்கு அடிப்படைக் காரணம் மக்கள் அடிப்படையிலான போராட்டமும் அந்த மக்களின் அபிலாசைகளை பிரதிபலிக்கக் கூடிய சக்தியை ஆட்சிக்கு அரங்கேற்றுவதே. இதனால் தான் ஈழத்தமிழர்கள் தம் எதிர்காலம் ஜனநாயக சக்திகள் மூலம் நிதர்சனமற்றது எனக் கூறுகிறோம். அது நிச்சயமாக இயங்கியல் ரீதியிலும், தர்க்கீக அடிப்படையிலும் இயங்குவோர் கையிலேயே என அறுதிட்டு கூறுகிறோம்.

# மலையக மக்கள்....

(7-ம் பக். தொடர்ச்சி)

நிலையும், மிகவேகமாக எம்மை நெருக்கிக் கொண்டிருக்கும் தேசிய இன ஒடுக்கு முறைக்கெதிரான போராட்டத்தின் தன்மையினையும், அதன் வளர்ச்சிப் போக்கினையும், இன்றைய நிலைப்பாட்டையும் புரிந்து கொள்ளாமல் அதில் நம்பிக்கை இழந்தோர், ''மலையக மக்கள் தனித் தேசிய இனம்'' என்ற கோஷத்தின்மூலம் அவர்களைத் தனிமைப் படுத்தி பாட்டாளி வர்க்கத்தின் போராட்ட உணர்வுகளை மழுங்கடித்துத் திசைதிருப்பி வருகின்றனர்.

## ஈழக் கோரிக்கையில் பாட்டாளி வர்க்கம்

எனவே, ஈழக் கோரிக்கையின் தோற்றமும், அதன் வளர்ச்சியையும் உற்றுநோக்கிப் பார்ப்பவர்களுக்கு அதன் போக்கினை அவதானிக்காமல் இருக்கமுடியாது. தமிழ்பேசும் தேசிய இனத்தின் விடுதலைக்கான கோரிக்கைகள் – போராட்டங்கள் இன்று தமிழ் பேசும் தொழிலாள வர்க்கத்தின் அடித்தளத்தினைத் தொட்டு நிற்கின்றது. ஆகவே இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களின் முழுமையான விமோசனமும் இத்தேசியஇனத்தின் முதுகெலும்பான பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்திலேயே மிளிரமுடியும் என்பது இயங்கியல் நியதி.

தர்க்கீகம்
த. பெ. எண் 103,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை ஊரெழு கிழக்கு எஸ் விக்னேஸ்வரன் அவர்களால் யாழ்ப்பாணம் பிரதான விதி, 360-ம் இலக்கத்திலுள்ள புனிதவளன் கத்தோலிக்க அச்சகததில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# திருமலை மாவட்டத்தில்.....

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

துடன் சிங்களக் குடியிருப்புகளைச் சிங்களப் பகுதிகளுடன் இணைத்தல்.

அனுராதபுரத்துடனும், பொலநறுவையுடனும் சிங்களக் குடியிருப்புகள் போக்குவரத்துக் கொள்ளக் கூடிய வகையில் அவற்றை அமைத்து, திருமலையை சிங்களப் பிரதேசங்களுடன் இணைப்பதற்கான முயற்சிகளை வெளிப்படையாகப் பார்க்கலாம்.

(ஆ) நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களில் சிங்களக் குடியிருப்புகளைத் தோற்றுவித்து நீர்ப்பாசன ஆதிக்கத்தைச் சிங்கள விவசாயிகளின் கைகளுக்கு மாறச் செய்தல்.

இதற்கு உதாரணமாகக் கந்தளாய் குடியேற்றப் பிரிவைப் பார்க்கலாம் இது திருமலை–மட்டுநகர் பாதையின் பிரதான பிரிவிடமும், குளவசதியுள்ள பயிர்ச் செய்கைப் பிரதேசமுமாகும். அனுராதபுரம், மாகோ என்பவற்றுடன் இதற்கு நெருங்கிய போக்குவரத்து வசதியும் செய்யப்பட்டுள்ளது. சீனன்குடா, புல்மொட்டை, சேருவாவில, கிண்ணியா ஆகிய பகுதிகளிலான குடியேற்றங்களிலும் இத்தகைய தன்மைகளைக் காணலாம்,

இ) திருகோணமலை மாவட்டத்தின் பிரதான நகரமாகச் சீனன்குடாவை ஆக்குவதற்கான முயற்சிகள்:

இன்று திருகோணமலை மாவட்டத்தின் பிரதான நகரமாக இருக்கும் திருகோணமலையை நேரடியாகச் சிங்கள நகராக்குவதை விட, புதிதாக ஒரு சிங்கள நகரை உருவாக்கி அதனைப் பிரதான நகரமாக்குவது ஒப்பீட்டளவில் அரசுக்குச் சுலபமாக உள்ளது. இத்திட்டத்தை அமுல்படுத்தும் வகையிலேயே சீனன்குடாவில் பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன. இவ்வேலைகள் முடிவுற்றதும் ஒருநாள் இரவோடிரவாக அது பிரதான நகராகப் பிரகடனப் படுத்தப்படலாம். இதன் மூலம் திருகோணமலை மாவட்டத்தின் பிரதான நகரம் தமிழ் வாடையற்ற தொன்றாக ஆக்கப்படும் ஆபத்துத் தோன்றியுள்ளது.

## குடியேற்றங்களும் தமிழ்பேசுவோரின் சமூக உளவியலும்

1947ஆம் ஆண்டு முதல் பல வடிவங்களிலும் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் குடியேற்றத் திட்டமானது ஏற்படுத்திய இனக் கலவரம் முதலான பாரிய தீய விளைவுகளால் தமிழ் பேசும் சமூகம் உளவியல் ரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வெள்ளரச மரத்தை ஆக்கிரமிப்பாளர்களின் சின்னமாகவும், புத்தரை அடக்குமுறையாளனாகவும் பார்க்கும் நிலை தோன்றிவிட்டது. இதனால் தமிழ் பேசுவோர் வெள்ளரசம் கன்றுகளைக் கண்டாலே பிடுங்கி எறியுமளவுக்கு மனநிலை பாதிக்கப்பட்டு விட்டது. கிளிவெட்டியில் 1979இல் ஒரு பெரிய வெள்ளரச மரத்தையே அம்மக்கள் இரவோடிரவாகத் தறித்து வீழ்த்தினார்கள்.

இந்த வகையிலே குடியேற்றத் திட்டங்கள் சிங்களம்–தமிழ் என்ற முரண்பாட்டிற்குப் பாரிய பங்கு வகிக்கின்றன.

## எதிர்காலம்

தமிழ் பேசும் மக்களைப் பெருமளவில் பாதிக்கும் வகையில் 1947ஆம் ஆண்டு கல்லோயா விவசாயக் குடியேற்றத் திட்டத்தில் இருந்து இன்று வரை பல வடிவங்களை எடுத்து, (குறிப்பாக முதலாளித்துவ அபிவிருத்தி வடிவங்களை எடுத்து) வெகு வேகமாகவும், நுணுக்கமான திட்டங்கள் மூலமும் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் குடியேற்றங்கள் தமிழ் பேசும் தேசிய இனத்தின் தன்மைக்கு அச்சுறுத்தலே! இத் தேசியத் தன்மையை அழித்து அவர்களின் ஈழக்கோரிக்கையை வலுவிழக்கச் செய்வதே இத்தகைய குடியேற்றத் திட்டங்களின் பிரதான குறிக்கோளாகும். இதற்குச் சீர்திருத்த நடவடிக்கைகளோ, பேச்சுவார்த்தைகளோ, ஒப்பந்தங்களோ முடிவுகட்டிவிடப் போவதில்லை. பதிலாகத் தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையிலும், ஒருமையிலும் எழும் எழுச்சியே முடிவு கட்டும்.

www.tamilarangam.net

# உலக அரசியல் நோக்கு

**உலக நாடுகள் இன்று சோசலிச, முதலாளித்துவ முகாம்களாக பிளவுபட்டு இரண்டு துருவங்களாக வளர்ந்து நிற்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. நாளுக்குநாள் வலுப்பெற்றுவரும் சோசலிசத்துக்கான மாற்றங்கள் முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகளைக் கிலி கொள்ள வைத்துள்ளது. இதனால் இம் முதலாளித்துவ நாடுகள் தமது இராணுவ நடவடிக்கைகளை விஸ்தரிப்பதையும், உளவு ஸ்தாபனங்கள் மூலம் ஏனைய நாடுகளினுள் ஊடுருவி குழப்பங்களைத் தோற்றுவித்து அரசியல் இலாபந் தேடுவதில் முனைந்து நிற்பதையும் இன்று காணக்கூடியதாகவுள்ளது.**

உலக மக்களை இன்று சூழ்ந்துள்ள மிகப் பயங்கரமான நெருக்கடிகள் ஒவ்வொரு மனிதனையும் எதிர்காலம்பற்றி எண்ண வைத்துள்ளது. இன்று உலகில் பலநாடுகளில் தோன்றியிருக்கும் பயங்கர நெருக்கடிகள் மத்தியில் அணுவாயுத உற்பத்தியிலும், இராணுவ விஸ்தரிப்பிலும் ஏகாதிபத்திய வல்லரசுகள் ஈடுபட்டிருப்பது மீண்டும் ஒரு உலகப்போர் மூண்டு மக்களைப் பெரும் அழிவுக்குட்படுத்துமா ? என்ற ஐயத்தை எழுப்பிய வண்ணமேயுள்ளது. இராணுவபடைப்பலத்தைப் பிரயோகித்து ஏனைய நாடுகளைத் தம் ஆதிக்கத்துக்குட்படுத்தி உலக ஆதிக்கம் பெற்றிருந்த முதலாளித்துவ ஏகாதிபத்திய வல்லரசுகள், அடக்கு முறைகளுக்குள்ளாக்கப்பட்டு வந்த மக்களினுல் பலத்த அடிவாங்கிவரும் இன்றைய காலகட்டத்தில், அந்த வல்லரசுநாடுகள் தமது இராணுவ படைப்பலத்தை விஸ்தரித்துக்கொள்வதுடன் அணுவாயுத உற்பத்தியிலும் மிகத் தீவிரமாக ஈடுபட்டு ஏனைய நாடுகளையும், அடக்கி ஒடுக்கப்படும் மக்களையும் அச்சுறுத்தி வருகின்றன. எனவே இன்றைய இத்தகைய நெருக்கடிகளை ஆயுமுன்பு கடந்துவந்த காலங்களின் நிகழ்வுப் போக்குகளை அவதானிப்பதன்மூலம் அதன் தொடர் வடிவமான இன்றைய வளர்ச்சியையும், அதன் தன்மைகளையும் பட்டவர்த்தனமாகப் புரிந்துகொள்ள முடியும்.


விஞ்ஞான வளர்ச்சி பெற்றிராத முன்னைய காலகட்டங்களில் நாடுகளிடையே எத்தனையோ போர்கள் நிகழ்ந்திருந்தாலும் இரண்டு உலகப் போர்களே உலகமக்களை உலுப்பியது. அந்நிய நாடுகளை ஆதிக்கத்துக்குட்படுத்தி அந்நாடுகளின் மூலவளங்களையும் அந்நாட்டு மக்களின் உழைப்பையும் உறிஞ்சும் முதலாளித்துவ நாடுகளின் போட்டியே உலகப் போர்களாகப் பிரளயம் பெற்று மக்களை அழிவுகளுக்கு இட்டுச் சென்றுள்ளது. இத்தகைய சுரண்டலுக்கான ஆதிக்கப் போட்டிகளில் முதலாளித்துவ நாடுகளுக்கிடையே ஏற்பட்ட முரண்பாடுதான் முதலாவது உலகப் போராக வெடித்து உலகை உலுக்கியது. இந்த முதலாவது உலகப்போர், சுரண்டலினுல் ஒடுக்கப்பட்டு பட்டினியால் வதைக்கப்பட்ட மக்களுக்கு எந்தவித விமோசனமுமாக அமையாமல், மாருக முதலாளித்துவ ஆதிக்க நலன்களுக்கான யுத்தமாக, அம்மக்களின் உறுதுணையால் நிகழ்ந்தேறின. ஆனுல் முதலாளித்துவ சுரண்டல் அடக்குமுறைகளுக்கெதிரான மக்களின் எழுச்சி வலிமைபெறத் தொடங்கியது. அந்த முதலாவது உலகப்போரின் முடிவில் எழுந்ததே ருஷ்யப் புரட்சி. முதலாளித்துவ சகாப்தத்திலிருந்து தொழிலாளவர்க்க ஆட்சியின் சோசலிச சகாப்தத்திற்கான நுழைவாயிலே முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகளும் அவர்களுக்கிடையிலான மோதலுமே ஏற்படுத்திக் கொடுத்தது.

அந்த முதலாவது உலகப்போரின் வடிவத்தில் மாறுபட்டு உள்ளாந்தரத்தில் ஒன்றுபட்ட இரண்டாவது உலகப்போர் மிகப் பயங்கர அழிவுகளையும் அச்சுறுத்தல்களையும் ஏற்படுத்தியது. ஹிட்லர், முசோலினி ஆதிக்க வெறியர்களின் சர்வாதிகார மிடுக்கால் காலனித்துவ நாடுகள் மீதும், இளம் சோவியத்நுக்கள்மீதும் ஈவிரக்கமற்ற தாக்குதல்களை ஜேர்மனி, ஜப்பான், இத்தாலி போன்ற நாடுகள் தொடுத்தன. ஆனுல் பல உயிர், பொருட்சேதங்கள் மத்தியில் சோவியத் மக்களினுல் நாசிசத்திற்கு முழுக்குப் போடவைத்து இரண்டாவது உலகப்போருக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. அந்த இரண்டாவது உலகப் போர்க்காலத்தில் பெரும் அழிவுகளுக்கும் தாக்குதல்களுக்கும் உட்பட்டது சோவியத் யூனியனே. ஆனுல் இத்துணை எதிர்ப்புக்களையும் முறியடித்து ஆக்கிரமிப்புக்குள்ளாக்கப்பட்ட மக்களுக்கும் விமோசனமளிக்கும் உன்னத போராட்டத்தை சோவியத் மக்கள் நடாத்தியது உலக வல்லரசுகளுக்குப் பலத்த அடியாக அமைந்தது. அந்த இரண்டாவது உலகப் போரினுல் மேலும் மேலும் பலநாடுகள் புரட்சியின்மூலம் விடுதலை பெற்று சோசலிச நிர்மாணத்தை நோக்கி நடைபோடத் தொடங்கின. இந்த வீழ்ச்சி உலக முதலாளித்துவ ஏகாதிபத்தியங்களுக்கு மேலும் மேலும் பலத்த அடியைக்கொடுத்து அவர்களைப் பின்வாங்க வைத்தது.

அந்த வளர்ச்சியின் இன்றைய நிலையில் உலக நாடுகள் இரண்டு துருவங்களாக சோசலிச—முதலாளித்துவ நாடுகள் என்று பிளவுபட்டு வளர்ந்து நிற்பதையும், மேலும் அடக்கி ஒடுக்கப்படும் மக்களின் எழுச்சியினுல் முதலாளித்துவங்கள் நாளுக்குநாள் வீழ்ந்துவருவதையும் காணக்கூடியதாகவுள்ளது. இந்த வரிசையில் நிக்கரகுவா. சிம்பாவே மக்களின் வெற்றியும் எல்சல்வடோர் மக்களின் இன்றைய போராட்டமும் எடுத்துக்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

ஐக்கிய இராச்சியத்தின் (U. S.) நியூட்டன் குண்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# வெளிப்பாடு

இலங்கைவாழ் தமிழ்ப்பேசும் மக்களாகிய ஈழவரின் இன்னேரன்ன இடர்ப்பாடுகள் மத்தியில், அவர்கள் தம் விமோசனத்திற்கான உந்துதலைக் கருத்தியல் ரீதியில் பற்றவைத்து, அந்தப் பற்றுதலால் எழுகின்ற மக்கள் சக்தியைப் புரட்சிப் போராட்டத்தின்மூலம் சமூக மாற்றத்திற்கு இட்டுச் செல்லும் தலையாய கடமையினடிப்படையில் தன் பணியைச் செய்துவரும் 'தர்க்கீகம்' இன்று தனது 12-வது இதழை அதிக பக்கங்களுடன் சிறப்பு மலராக வெளியிடுகின்றது. புரட்சிப் புரவலன் லெனின் தலைமையிலான ருஷ்ய மக்களின் அக்டோபர் புரட்சியின் 63-வது ஆண்டான கடந்த ஆண்டின் அக்டோபர் மாதத்தில் மலர்ந்த தர்க்கீகம், 12 மாதங்களைத்தாண்டி இந்த அக்டோபரில் ஓராண்டைப் பூர்த்திசெய்து தன் பணியை மேலும் தொடருகின்றது.

கடந்துவந்த ஓராண்டிலும் தன் பணியின் மூலம் தமிழ்ப்பேசும் மக்கள்மத்தியில் அவர்கள் தம் போராட்டத்திற்கான அடித்தள சூழ்நிலைகளை உருவாக்கி வருகின்றதென்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அத்தகைய சூழ்நிலையின் வெளிப்பாடே தர்க்கீகம் தொடர்வதற்கான சான்ருக அமைகின்றது. ''இன்னல் பலகோடி எதிர்த்தே வரினும்'' அதை ஏற்றுக்கொண்டு, தமிழ்பேசும் பாமர மக்களுக்கு விமோசனம் காணுவதான குறிக்கோளை எய்துவதற்கான உறுதியும் திடசங்கற்பமும் கொண்டு தொடர்ந்தும் தர்க்கீகம் தன் பணியைச் செய்யும் என்பதில் எள்ளளவும் ஐயத்தி கிடமில்லை. ஏனெனில், வெறுமனே கற்றறிவின் பால் கருத்துக்களை முன்வைப்பதிலிருந்து மாறுபட்டு நடைமுறைப்படுத்த விழைவதனுல் ஏற்படுகின்ற அனுபவ வாயிலாகப் பிரச்சனைகளையும், அதன் அணுகுமுறைகளையும் முன்வைப்பதனுல் தான் மக்களிடத்தில் அளப்பரிய பற்றை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல், அந்தப் பற்றுதலால் அவர்களாகவே பங்கேற்று மேலும் முன்னெடுத்துச் செல்வதிலும் இன்று முன்னணியில் நிற்கின்றது.

இச்சமுதாயத்தில் நிலவுகின்ற அத்தனை போலித்தனங்களையும், கேடுகெட்ட நிலைகளையும் இவற்றுக்கு அடிப்படையிலான வர்க்க நிலைப்பாட்டையும் ஆய்ந்து அவற்றைப் புட்டுக்காட்டுவதின் மூலம் மட்டுமல்ல, தமிழ்பேசும் மக்கள் இன்று அனுபவித்துவரும் இன ஒடுக்கலின் தன்மைகளையும் அதன் உட்சூட்சுமங்களையும் பூரணமாக ஆராய்ந்து வெளிப்படுத்தி, இவையனைத்துக்கும் ஒட்டுமொத்தமான தீர்வாக அமையக்கூடிய ஈழக் கோரிக்கையை, அதை அடைவதற்கான அணுகுமுறைகளைத் தர்க்கீகம் காட்டிநிற்கின்றது. இன்று ஈழக்கோரிக்கை முனைப்புப்பெற்று, சர்வ தேசியத்துடன் இணைந்த பிரச்சனையாக வலுப்பெற்று வருவதை யாரும் மறுப்பதற்கில்லை. உலக ஏகாதிபத்திய வல்லரசின் (அமெரிக்கா) பார்வை ஆசியாவின்மீது மிகத் தீவிரமாக இறங்கியிருப்பதும்,இராணுவ, கடற்படைத் தளங்களை விஸ்தரித்து வருவதையும் கண்கூடாகக் காண்பது மட்டுமல்ல, இலங்கை முதலாளித்துவ அரசும் அதற்கு முண்டு கொடுத்து இசைந்து செல்வதையும் காண்கின்ருேம். இந்நிலையில் சிங்கள முதலாளித்துவ அரசுக்கெதிரான தமிழ்பேசும் மக்களின் போராட்டம் உலக ஏகாதிபத்தியத்திற்கும் எதிரானது என்பதை திரும்பத் திரும்ப சுட்டிக்காட்ட விரும்புகின்ருேம்.

இத்தகைய சக்திகளை இனங்கண்டு அவற்றைத் தகர்த்தெறியக் கற்றுத்தந்ததே அக்டோபர் புரட்சி. அந்தஉன்னத புரட்சியின்இன்றைய தினத்தை நினைவு கூர்வதுடன், அதன் வழிமுறைகளில் தமிழ்ப்பேசும்மக்களின் இன்னல்களுக்கான தீர்வுக்கு வழிசமைக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் தர்க்கீகவாதிகளின் தலையாய பணியாகும். அந்தப்பணி, ஈழவர் தம்மிடர் ஈன்று தொலையும் வரை, இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களில் தோட்டத் தொழிலாளர்களை முன்னணியாகக் கொண்டதும் ஏனைய விவசாய, பாட்டாளி வர்க்கத்தையும் ஒன்றிணைத்ததுமான ஒட்டுமொத்தமான அணியைப் போராட்டத்திற்கு இட்டுச்செல்லும்வரை தொடரும்: . . . . . . .